குண்டூசி

தெய்வீகத் திங்களிதழ்

ஜூன் -83

விலை ரூ.1-20



பண்டிகை நாட்களில் நெஞ்சை அள்ளும் ராஜேஸ்வரியின்
புத்தாடைகளை அணிந்து உங்கள் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குங்கள்
பட்டு ஜவுளிகளுக்கு...
ஸ்ரீ ராஜேஸ்வரி ஹால்
121, ராஜவீதி, கோவை.1
போன் : 25859
நவநாகரீக ஜவுளிகளுக்கு...
உஷா சாரி பாரடைஸ்
333, ராஜ வீதி
கோயமுத்தூர்-641001
போன் : 33369
OSR

படலை 36 ஊசி 9

ஜூன் — 1983

பெரியவாள் - 90

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகளவர்களின் தொண்ணூறுவது ஜயந்தி விழா தற்போது நாடெங்கிலும் கொண்டாடப்பட்டு வருகிறது

பெரியவாளின் அருளாசியால் ஒன்பது ஆண்டுகளாக குண்டுசி ஆன்மீக உலகிற்குத் தொண்டாற்றி வருகிறது என ஆன்மீக அன்பர்களையும் சேர்த்துக்கொண்டு இப்புனித ஜெயந்தியில் பெரியவாளுக்கு அனந்தகோடி நமஸ்காரங்களைச் சமர்ப்பிக்கிறேன்.

பெரியவாள் மஹாராஷ்டிரத்தை விட்டு ஆந்திராவில் காலடி வைத்தவுடனேயே, நூற்றாண்டுகளுக்கும் மேலாக கிடப்பில் கிடந்த கிருஷ்ணா நதி தமிழகத்திற்கு வர ஏற்பாடாகிவிட்டது.

பெரியவாளின் காலடி வெகு விரைவில் தமிழகத்தில் படவேண்டும் என்பதே எல்லோருடைய பிரார்த்தனையும்.

இந்தத் தொண்ணூறுவது ஜெயந்தியில் ஒரு பெரிய விசேஷம் சேர்ந்துள்ளது. காமகோடி பீடத்திற்கு பதினைந்து வயதுள்ள சங்கரர் குட்டிப் பெரியவாளாக ஏற்கப்பட்ட விசேஷ விழாவும் அண்மையில் காஞ்சியில் நடைபெற்றது.

இம்மாதிரி வாரிசு முறை இதுவரை எந்த மடத்திலும், பீடத்திலும் நடந்துள்ளதாகத் தெரியவில்லை. காமகோடி பீடம் ஒரு சரித்திரத்தை இந்த வகையில் படைத்துள்ளது பெரியவாளின் அருள்நோக்கு என்று தான் சொல்ல வேண்டும்.

லௌகீகமாக சொன்னால் பெரியவாளுக்கு பேரன் வாரிசு வந்தாகி விட்டதென்று சொல்லவேண்டும்.

இன்றைய தமிழக அரசியல் சூழ்நிலையில் பலவித மாறுபாடுகளும், குழப்பமும் இருந்தாலும், இயற்கையும் சேர்ந்து மக்களை சோதிக்கிறதல்லவா ?

இரண்டாண்டுகளாக பருவமழை தவறியதால் வறட்சியும், தண்ணீர் பஞ்சமும் ஏற்பட்டு மக்கள் அவதிப்பட்டு வரும் இந்த நேரத்தில், காஞ்சி மகான் விஜயம் செய்யப் போவது நிச்சயம் என்று தெரிந்து தமிழக மக்கள் பெருமகிழ்ச்சியையடைந்துள்ளார்கள்.

மேலும் இந்த ஆண்டு ஆண்டவன் நம்மை சோதிக்கமாட்டான் காலம் கடந்து போனாலும் வானம் பொழிந்து நிச்சயம் நம்நாடு செழிக்கும் என்று நம்பிக்கையோடு உள்ளன்புடன் காஞ்சிப் பெரியவாளை மனதில் நினைத்து பகவானைப் போற்றிப் பணிவோம்.

—ஜெய்ஹிந்த்

ஸ்ரீமத் பாகவதம்

கவிஸேரி சுப்பிரமணிய சாஸ்திரிகள்

88

ஸ்ரீகிருஷ்ணர் தமதுவார்த்தையை பலராமன் முதலியோர் நம்பவில்லை என்பதையறிந்து அதைத் தெளிவாக்கவே அக்ரூரரை ரத்தினத்தை எடுத்துக் காண்பிக்கச் சொன்னார் திம்மீது இருந்த சந்தேகம் நிவர்த்தியானதால் ஸ்ரீகிருஷ்ணர் மறுபடியும் அந்த ரத்தினத்தை அக்ரூரரிடமேயே கொடுத்துவிட்டார். இந்த வரலாறு மிகவும் சிறப்புடையது இதைப் படிப்பவருடைய அபகீர்த்திகள் விலகும். பாபம் அகலும்.

துருபத மகாராஜனிடமிருந்து வெளியேறிய பாண்டவரைக் காண பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இந்திரப்பிரஸ்தத்தை அடைந்தார். பகவான் வருவதைக் கண்ட பாண்டவர்கள் எழுந்து வரவேற்றதோடு அவரைத் தழுவிச் சந்தோஷமடைந்தனர். ஸ்ரீகிருஷ்ணர் தருமரையும் பீமனையும் நமஸ்கரித்தார். மனம் கலங்கி நின்ற திரௌபதியும் பகவானை நமஸ்கரித்தாள். ஸ்ரீகிருஷ்ணர் தனது பிதாவின் சகோதரியான குந்திதேவியிடம் சென்று அவரை நமஸ்கரித்தார்,

தனது பந்துக்களின் சௌக்கியத்தை விசாரித்தறிந்தாள் குந்திதேவி. பின் ஸ்ரீகிருஷ்ணர் அவளையும் குசலப்பிரச்னம் செய்தார். அப்போது குந்திதேவி மனங்கலங்கினவளாய், கிருஷ்ணா! எப்போது என் சகோதரனான அக்ரூரரை அனுப்பினரோ அப்போதே எங்களுக்கு க்ஷேமம் ஆரம்பமாயிற்று. சகல ஜீவன்களுக்கும ஆத்மாவாக விளங்கும் உமக்கு தனது பிறனது என்ற பேதமில்லை. உம்மைத் தியானம் செய்பவரைக் காக்கிறீர் என்று கூறினாள்.

தருமபுத்திரரும், யோகிகளும் காண முடியாத உம்மை நேரில் காணும் பாக்கியமுண்டாயிற்று என்று மகிழ்ந்தார். மேலும் அவர் பகவானை மழைக்காலம் ஆகிய நான்கு மாதங்களும் அங்கேயே தங்கும்படி வேண்ட பகவானும் அதற்கிணங்கி இந்திரப் பிரஸ்தத்திலேயே தங்கினார்.

ஒருக்கால் அர்ச்சுனன் வானர துவஜமுள்ள தேர்மீதேறி ஸ்ரீகிருஷ்ணருடன் கானகம் சென்றான், அங்கு பல மிருகங்களை வேட்டையாடி, அவற்றில சுத்தமானவற்றை தருமபுத்திரரிடம் சேர்ப்பித்தார்கள் களைப்படைந்த அர்ச்சுனன் யமுனா நதி தீரத்தில் சென்று ஸ்ரீகிருஷ்ணருடன் ஸ்நானம் செய்து சிரமத்தை நிவர்த்தி செய்துகொண்டான். அப்போது அவர்கள் சமீபம் ஒரு அழகிய பெண் செல்வதைக் கண்டார்கள்.

அப்போது ஸ்ரீகிருஷ்ணனால் தூண்டப்பட்டு அப்பெண்ணிடம் அர்ச்சுனன் சென்று அவளதுவிருத்

தாந்தங்களை விசாரித்தான். அந்தக் கன்னிகை அருச்சுனனைப் பார்த்து தான் சூரியனுடைய புத்திரி என்றும் தான் ஸ்ரீமன் நாராயணனை யடைய விரும்பித் தவம் செய்வதாகவும் தன் பெயர் காளிந்தி என்றும் கூறினாள், ஸ்ரீகிருஷ்ணர் காளிந்தியை ரதத்தில் ஏற்றிக்கொண்டு இந்திரப் பிரஸ்தத்தையடைந்தார்.

இந்திர பிரஸ்தத்தில் இருந்த ஸ்ரீகிருஷ்ணர் பாண்டவர்களின் விருப்பப்படி விசுவகர்மா என்ற தேவ சிற்பியை வரவழைத்து அவ்விடத்தில் ஒரு உயர்ந்த பட்டணத்தை நிர்மாணிக்கும்படி கூறினார் மேலும் இந்திரனுடைய காண்டவ வனத்தை அக்கினிக்குக் கொடுத்து அதனால் திருப்திபடுத்தப்பட்ட அக்கினி பகவான் காண்டீபம் என்னும் வில்லையும், குறைவற்ற பாணங்களையும், இரதத்தையும், வெண்மை நிறமுள்ள அசுவங்களையும், சத்துருக்களால் பிளக்க முடியாத கவசத்தையும் அருச்சுனனுக்குக் கொடுத்தான் காண்டவ வனத்தில் இருந்த மயனை ஸ்ரீகிருஷ்ணர் காப்பாற்றினார். சந்தோஷமடைந்த மயன் கிருஷ்ணருடைய பந்துவாகிய தர்மபுத்திரருக்கு ஒரு அற்புதமான சபா மண்டபத்தை அமைத்துக் கொடுத்தார்.

ஸ்ரீகிருஷ்ணர் தர்ம புத்திரரிடம் விடை பெற்றுக்கொண்டு சாத்யகி முதலியோருடன் காளிந்தியையும் அழைத்துக்கொண்டு துவாரகை சென்றார் பிறகு நல்ல முகூர்த்தத்தில் காளிந்தியை விவாகம் செய்து கொண்டார் அவந்தி தேசத்தரசர்களான விந்தன், அனுவிந்தன் இருவரும் துரியோதனனுக்கு வேண்டியவர்கள். அவர்களுடைய சகோதரி மித்ரவிந்தை ஸ்ரீகிருஷ்ணனை மிகவும் விரும்பி அவரையே விவாகம் செய்ய எண்ணினாள் ராஜாதிதேவி

பழனியம்பதியில் கலியுக வரதனாக அவதரித்த
ஸ்ரீபழனி ஆண்டவரை தரிசிக்கும் பக்தகோடிகள அனைவரும் விரும்புவது

பழநி

S. சித்தனாதன்

ஸ்பெஷல் ஜவ்வாது
வாசனை விபூதி
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

★

பரிமள விலாஸ்

S. சித்தனாதன் சன்ஸ், விபூதி ஸ்டோர்,

அடிவாரம், பழநி–624601.

போன் : கடை 405 வீடு & ஸ்டோர் : 406

யின் புத்திரியான மித்ரவிந்தை ஸ்ரீகிருஷ்ணருக்கு அத்தை மகளாவாள். ஆகவே அவர் எல்லா அரசர்களும் பார்க்க அவளைப் பலாத்காரமாக அழைத்துக் கொண்டுவந்தார்.

நக்னஜித் என்ற அரசன் கோசல தேசத்தை ஆண்டார். அவர் மிகவும் தர்மவான். அவர் தம்மிடத்திலுள்ள ஏழு எருதுகளை எவன் ஜெயிக்கிறானோ அவனுக்குத் தன் மகளான சத்யாவை மணம் செய்து கொடுப்பதாக அறிவித்திருந்தார். பலரும் கூர்மையான கொம்புகளோடுள்ள அந்த எருதுகளை ஜெயிக்க முடியவில்லை.

இதனைக் கேள்வியுற்ற ஸ்ரீகிருஷ்ணன் தமது படைகளுடன் அங்கு சென்றார். அரசன் ஸ்ரீகிருஷ்ணரை வரவேற்றுப் பூஜித்து பகவானாகிய உமக்கு என்னால் செய்யக்கூடியது யாது? ஆத்மானந்தராகிய உமக்கு அற்பனாகிய நான் என்ன செய்ய வேண்டும் என்று விசாரித்தான்.

ராஜகுமாரி சத்யா ஸ்ரீகுருஷ்ணரைப் பார்த்தபோது தன்னால் அனுஷ்டிக்கப்பட்டு வந்த விரதங்களின் பலன் ஓர் உருவெடுத்து வந்தது என மனங்களித்தாள்.

ஸ்ரீகிருஷ்ணரும் நக்னஜித்திடம் க்ஷத்திரியனாக வந்து யாசிப்பது தவறு. ஆயினும் உமது தொடர்பு எனக்கு இருக்கவேண்டும் என்று எண்ணி உமது மகளை மணம் செய்விக்கவேண்டும் என்று கேட்பதற்காக வந்துள்ளேன் என்று கூறினார். அரசன் இதனைக் கேட்டு, ஸ்வாமி, உம்மை விடத் தகுதியான வரன் சிந்திக்கக்கூட முடியாது. ஆனால் நான் முன்பே ஒரு பிரதிக்ஞைசெய்திருக்கிறேன்.

பிறரால் அடக்க முடியாத இந்த எருதுகளை நீர் அடக்குவீரானால் உமக்கே என் பெண்ணை அளிக்கிறேன் என்றார்.

பகவான் அதனைஒப்புக்கொண்டு தம்மை ஏழு வகையாகச் செய்துகொண்டு அந்த ஏழு எருதுகளையும் அடக்கினார் பின்பு அவற்றை ஒரு கயிற்றினால் கட்டி மரப்பொம்மைகளை இழுத்தாற்போல் அந்த ஏழு எருதுகளையும் இழுத்தார். அரசனும் சந்தோஷமடைந்து தனது பத்தினிகளுடன் சத்யாவை ஸ்ரீகிருஷ்ணருக்குத் திருமணம் செய்து கொடுத்தார் சிறிது காலம் அங்கிருந்த பிறகு ஸ்ரீகிருஷ்ணரையும் சத்யாவையும் ரதத்திலேற்றி மிகுந்த சேனைகளுடன் அரசன் துவாரகைக்கு அனுப்பினான்.

இவ்விதம் சத்யாவை மணம் செய்துகொண்டு ஸ்ரீகிருஷ்ணர் போகிறார் என்று கேள்விப்பட்ட அநேக அரசர்கள் வழியில் போருக்கு வந்தார்கள் இவர்கள் யாவரும் எருதுகளால் ஜயிக்கப்பட்டவர்கள் அவர்களை அருச்சுனன் தனது காண்டிபத்தினால் அடித்துத் துரத்தினான். தேவகி புத்திரனாகிய ஸ்ரீகிருஷ்ணர் துவாரகையையடைந்தார்.

சுருதகீர்த்தி என்ற அத்தையின் புத்திரியாகிய பத்திராவையும் ஸ்ரீகிருஷ்ணர் மணந்துகொண்டார். மந்திர தேசத்து அரசபுத்திரியான சகல லக்ஷணமும் உள்ள லக்ஷ்மணாவைத் தனியே சென்று ஸ்வயம்வரத்தில் அபகரித்து வந்து மணந்தார் இவ்வாறு ஸ்ரீகிருஷ்ணருக்குப் பல மனைவிகள் ஏற்பட்டனர் நரகாசுரனைக்கொன்றுமேலும் அவனால் அபகரிக்கப்பட்ட பல ராஜகன்னிகைகளை அடைந்தார்.

இவ்வாறு சுகர் சொன்னவுடன் பரிக்ஷித்து சுகரை நோக்கி, பகவான் பூமி புத்திரனாகிய நரகனை எவ்வாறு கொன்றார்? ராஜ கன்னிகைகள் நரகனால் எவ்வாறு அபகரிக்கப்பட்டனர்? ஸ்ரீகிருஷ்ணரின் இந்த சரித்திரத்தை எனக்கு விவரமாக கூற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். —தொடரும்.

வளரும் குழந்தைகளுக்குத்

காரணம், குழந்தைகளின் விரைந்த முழுவளர்ச்சிக்கான அதிக ஊட்டச்சத்துள்ள திட உணவாகும் :.பாரெக்ஸ்.

1. :.பாரெக்ஸ் புரதச் சத்து நிரம்பியதாகும் —உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு இது அத்தியாவசியமாகும்.

2. :.பாரெக்ஸ் வேறெந்த பிராண்டு செய்யப்பட்ட திட உணவைக் காட்டிலும் அதிக இரும்புச் சத்துள்ளதாகும். இது குழந்தைக்குத் தொற்றுநோய் எதிர்ப்புச் சக்தியையும் ஆரோக்கியமான இரத்தத்தையும் அளிக்கிறது.

3. :.பாரெக்ஸில் கால்ஷியம் மற்றும் :.பாஸ்:.பரஸ் சரியான விகிதத்தில் சேர்ந்திருக்கின்றன. ஆரோக்கியமான எலும்புகளையும் திடமான பற்களையும் பெற இவை உதவுகின்றன.

4. தவிர :.பாரெக்ஸ், குழந்தையின் மென்மையான செரிக்கும் சக்திக்கேற்றவாறு விசேஷமாக முன்கூட்டியே பக்குவம் செய்யப்பட்டதாகும்.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது

:.பாரெக்ஸ்®

வழங்

SGLF-42 183 TM

ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம்

(ஸ்ரீ லீலாசுகர் அருளியது)

ஹா ஹந்த ஹா ஹந்த மனோதுனோதி

என்று மனச் சஞ்சலமடைந்த நிலையில் லீலாசுகர் கண்ணனைத் தன் மனக்கண்முன் கண்டு நிலைதடுமாறியிருப்பதைக் குறிப்பிடுகிறார். மேலும் இரண்டுஉலோகங்களினால் தன் அந்திம காலத்தில் கண்ணனின் அருளால் அவன் திரு உருவத்தைக் காண விழைகிறார்.

யாவன்ன மே நிகில மர்மத்ருடாபிதாத
நிஸ்ஸந்தி பந்தன ம்ருதோதி ஸவேரபதாப.
தாவத விபோ பவது தாவக வக்த்ர சாந்த்ர
சந்த்ராத பத்பிருணிதா மம சித்ததாரா 37

ஓ நந்தனாகிய கண்ணா! என் மரண நிலையில் எம தூதர்கள் என்னைப் பாசத்தினால் கட்டி சரீரம்கட்டுக் குலையும் வண்ணம் ஆயுதங்களால் நவ உயிர் நிலைகளைத் துன்புறுத்துவர். அப்போது உள்ள வருந்திய நிலையில் உன்னை நான் எண்ண முடியாது ஆகவே அந்தக் காலம் வருமளவு எனக்கு உன் சந்திரனைப் போன்ற முகத்தினை காண்பித்து அம்முக அழகிலே என்மனம் இடையறாது (அதாவது விக்னம இல்லாது அந்திம காலத்தும் தோன்றும்படி) களிக்க அருள் புரிவாய் என்று லீலாசுகர் வேண்டுகிறார்.

யாவன்ன மே நரத்ருசா தசமீத் ருசோபி
ரந்தரா துதேதி திமிரீக்ருத ஸர்வபாவா
லாவண்ய கேளிஸதனம் தவதாவதேவ
லக்ஷ்ம்யாஸ முத்க்வணித வேணு முகேந்துபிம்பம் 38

கண்ணா! எனது பத்தாவது அவஸ்தையான மூப்புற்று நயனேந்திரியங்கள் அழிந்து கடைசியாக கண்கள் இருள்மூடி எதிரில் நிற்கும் பொருட்கள் யாவும் தெரியாமல் மறைந்து போகும் காலத்தில் உன்னை என் கண்களால் காண முடியாது ஆகையால் என் அந்திமக் காலத்தளவும் அழகுக்கெல்லாம் களஞ்சியமாக விளங்கும் உனது வேய்ங்குழல் ஊதும நிலையோடு கூடியதிருமுகத்தினை என் உள்ளத்தே நிலைநிறுத்தி நிரந்தரமாக எனக்கு அருள் புரிவாய் எனக் கெஞ்சுகிறார்

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை

லீலாசுகர். இத்தகைய அருள் கிட்டுமேயாயின் அவரது அகக் கண் கண்ணனின் சௌந்தரியத்தைப் புறக்கண்கள் அழியும் நிலையிலும் காண ஏதுவாகிறது.

ஆலோல லோசன விலோகித கேலிதாரா
நீராஜி தாக்ர ஸரணே : கருணாம் புராசே ;
ஆர்த்ராணி வேணு நிநதை : பிரதி நாதபூரை
ராகர்ணயாமி மணிநூபுர சிஞ்சிதானி 39

இங்கு லீலாசுகர், கண்ணன் திருவீதியில் செல்லும் அழகினை விவரிக்கிறார். இயற்கையாகவே கண்ணனின் கண்கள் சஞ்சலிக்கும் தன்மையுடையவை. கண்ணன் தெருவீதியில் செல்லும்போது வீடுதோறும் விளங்கும் அழகிய கோலங்களைக் காண்பவனாயும் அவனது எல்லையற்ற கருணா சமுத்ரமாகிய அன்பினைப் பெறும் எண்ணத்துடன் நெருங்கி வந்து பார்த்து நிற்கும் நகர மக்களை எல்லாம் அவன் விழிகளால் சுழன்று சுழன்று நோக்குபவனாயும், கண்ணன் வரும்போது ஊதிவரும் வேணுவின் இனியநாதம் எதிரொலிக்கச் செய்பவனாகவும் அவன் நடக்கும்போது அவன் கால்களில் உள்ள தண்டை சிலம்புகளால் வேணு நாதத்தின் லயத்திற்கேற்பத் தாளம் போடுபவனாயும் தன் மனத்திலே லீலாசுகர் ஆனந்தமடைகிறார். கண்ணனின் கண் சுழற்றல் அவனுக்கே ஆலத்தி எடுப்பதுபோல் விளங்குகின்றது. என்கிறார். அவன் ஊதும் குழலின் ஓசை தெருவீதியிலுள்ள கட்டடங்களில் எல்லாம் எதிரொலித்து ஆனந்தமடையச் செய்கின்றது.

ஹே தேவ ஹே தயித ஹே ஜகதேகபந்தோ
ஹே கிருஷ்ண ஹே சபல ஹே கருணைக ஸிந்தோ

ஹே நாத ஹே ரமண ஹே நயனாபிராம
ஹா ஹா கதாநு பவிதாஸி பதம் த்ருசோர்மே 40

கண்ணா! நீ தேவர்களுக்கெல்லாம் தேவனல்லவா! எல்லோருக்கும் பிரியனல்லவா! ஹே கிருஷ்ணா!

பக்தர்களிடம் மோகம் உடையவனே! நீ கருணா சமுத்ரமல்லவா! நீ எல்லோரையும் ரக்ஷிப்பவனல்லவா! நீ எல்லோரையும் மோகிக்க *செய்பவனல்லவா!* காண்போர் கண்களுக்கெல்லாம் இனியவனாக விளங்குபவனல்லவா! நீ எப்போது என் கண்களுக்கு விருந்தாகக் காட்சியளிப்பாய்! இன்னும் நீ அவ்வாறு செய்யாதிருப்பது ஹா! கஷ்டம்! கஷ்டம்!

லீலாசுகர் தாம் கேட்ட வேணு *நாதத்தின் ஒலியும் தண்டைச்சிலம்*புகளின் ஓசையுடனும் கூடிய கண்*ணனின்* மேனியழகைக் காண ஆவலுற்றவராய்க் கண்ணனிடம் தனக்குக் காட்சியளிக்க வேண்டுகிறார்

அமூந்யதந்யாநி திநாந்தராணி
ஹரே த்வதாலோகந மந்த்ரேண
அநாதபந்தோ கருணைக ஸிந்தோ
ஹா ஹந்த ஹா ஹந்த கதம் நயாமி 41

இங்கு லீலாசுகர் கண்ணனைக் காணாத தினங்கள் யாவும் துர்த்*தினங்கள் என்கிறார். கண்ணா* உன்னை நாதனாகப் பற்றி நிற்கும் என்னை உன் இன்முகம் காட்டி காக்கும் பந்துவல்லவோ நீ. ஆயின் பாபங்கள் இதற்கு இடையூறாக நிற்பினும் அப்பாபங்கள் உனது *நாமத்தை நான் சொல்லும்போது* அழிகின்றன கண்ணா நீ தயைக்கு எல்லாம் இருப்பிடம். ஆகவே என்னிடம் தயை காட்டவில்லை என்று சொல்ல இயலவில்லை, இதனால் *நீ எனக்கு எப்போதாகிலும் தரி*சனம் தருவாய் என்று நம்பிக்கையிருப்பினும் உன்னைக் காணா இந்த தினம் பாபதினம், வீணாக் கழியும் தினம் இத்தினம் எப்படிக் கழியப் போகிறது என்று என் மனம் சங்*கடமடைகிறது கண்ணா!* ஹா என்ன கஷ்டம் என்ன கஷ்டம் என்று கூறுகிறார் லீலாசுகர்.

பணம்—புகழ—பதவி

வாழ்க்கையில் மனிதன் முன்னேறுவதற்கு பல வழிகளில் செயல்படுகிறான். தெரிந்தும் தெரியாமலும் பல தவறான வழிகளில் சென்று, பணம் புகழ், பதவி இவைகளைப் பெற துடிக்கிறான். சிலர் குறுக்கு வழியில் விரைவில் உயர்ந்தும் விடுகிறார்கள்; இவர்களின் செயல்கள் மூலம் அடையும் போக வாழ்க்கைக்கும் ஆண்டவன் அருள்புரிகின்றானே என்றும் சிலர் கேட்கலாம்.

இத்தகைய செயல்கள் மூலம் இவர்கள் அடைந்த நன்மைகள், அவர்களின் பூர்வபுண்ணிய வினைப்பயன்தான். இதற்காக அவர்கள் செய்துள்ள *நேர்மையற்ற செயல்களின் எதிரொலியானது மூட்டைகளாக அவர்களுடனே* சேர்கிறது. கலியில் உடனே அவர்களைப் பாதிப்பதுடன் அவர்கள் யாருக்காக சொத்து சேர்த்து வைக்கிறார்களோ, அதாவது அவரது பிள்ளைக்குட்டிகளையும், *வம்சாவளிகளையும் உடனே தண்டிக்கவும் செய்கிறது*.

ஆண்டவன் சரியான தராசுபோல ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஆட்சி புரிகின்றான். ஆகவே கூடுமானவரை, நேர்மையாகவும், மற்றவர் உரிமைக்கு ஆசைப்படாமலும் வாழப் பழகி, நல்ல வழியில் நற்பணிகளும், ஏழைகளுக்கு முடிந்தவரையில் உதவிசெய்து மறுமைக்கு வழிதேடிக் கொள். உடனே ஒவ்வொரு நிமிஷமும் மரணம் நெருங்கிக் கொண்டே இருக்கிறது என்பதையும் மறவாதே. பகவானை மனதில்கொண்டு செயல்படு அவனருள் நிச்சயம் கிடைக்கும்.

—குகதாசா

ஒட்டிப்பழகாதே — எட்டிப் பழகு!

பெண்களுக்குத்தான், முக்கியமாக திருமணமான பெண்கள் கவனமாய் செயல்பட வேண்டிய முறை.

நீங்கள் விகல்பம் இல்லாமல், சுபாவமாய், வெகுளியாய், பிற ஆண்களிடத்தில் பழகும்பொழுது, சற்று தள்ளி நின்றே பழகவேண்டும் ஒட்டி, ஒட்டி, மேலேவிழுந்து பழகும் (சோஷியலாக) பொழுது ஆண்களுக்கு நீங்கள் ஏதோ சுதந்திரம் தருவதாய் எண்ணிவிடுவார்கள்.

பெண்களைவிட, ஆண்களுக்கு வேகத்தை, சபலத்தை அடக்கும் வைராக்யம் மிக மிகக் குறைவே. உங்களுடைய பலஹீனத்தை கவனித்து, சிலர் தவறான முறையில் செயல்பட நீங்களே அவர்களுக்கு வாய்பளிக்கும் வகையில் ஒட்டிப் பழகும் முறை, கட்டிப் பழக சூழ்நிலையை ஏற்படுத்திவிடும

ஆகவேதான் பெரியவர்கள் சொல்லுவார்கள். சற்று எட்டியே பழக வேண்டும் என்று இதனால் தேவையற்ற அபவாதங்களுக்கும் சந்தேகம் என்னும் பேய்க்கும் ஆளாகவும் நேரிடும்.

(சோஷியலாக) சமூக சேவை என்றுகூட சொல்லிக்கொண்டு கட்டிப் பிடித்தே உடலை விலையாக்கும் இனத்தவரை நாம் எண்ணிப் பார்க்கக்கூடாது.

அதேபோல துணைவிமார்களையே மூலதனமாகக் கொண்டும் வாழ்க்கையில் உயர்வு தேடிக்கொண்டு போக வாழ்க்கை நடத்துபவர்களையும் நினைத்துப் பார்க்கக்கூடாது.

பாரதப்பண்பான,மங்கயர் திலகங்களுக்குத்தான் மேற்படி பொன்மொழியான ஒட்டிப் பழகாதே — சற்று எட்டியே பழகு என்று சொல்லப்படுகிறது, ஏன்? ஆண்களும் தான் சிந்திக்கட்டுமே!

படிப்பதற்கு சற்று விரசமாக இருந்தாலும் ஊதுகிற சங்கை ஊதி வைக்கிறேன்; விழித்துக்கொள்ளும் தாய்க் குலத்தின் காதில் ஒலிக்கட்டுமே!

—குகதாசர்

உங்களுக்கு தேவை

வியாபார அபிவிருத்திக்கு குபேர தன ஆகர்ஷணம், நகை வியாபாரிகட்கு ஸ்வர்ண கர்ஷண பைரவா, சித்தபிரமைக்கு உன்மத்த பைரவா, ஆபிசாரம் அகல ப்ரத்யங்கிராஸ்திரம், சத்ரு பாதைக்கு அகோராஸ்திரம், இழந்த பொருளோ பதவியோ திரும்பப்பெற கார்த்த வீர்யம், கல்வியில் மேன்மைக்கு மனோன்மணி, விவாஹத் தடை நீங்க ஸ்வயம்வரா பார்வதி, காத்யாயனி, மற்றும் பலவகை ஹோமங்கள், கோள மாந்த்ரீக உபாஸனா கிரமத்தில் செய்து ரக்ஷை அல்லது யந்த்ரம் பெற கீழ்க்கண்ட முகவரிக்கு 75 பைசா தபால் தலை இணைத்து எழுதவும்.

ஸ்கந்த மேருவும் விசேஷ ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்

பகவான் கிருஷ்ணா, ராமர் ஜாதகங்கள் இலவசமாய் பெற 45 பைசா தபால் தலை இணைத்து எழுதவும்.

முகவரி — மந்த்ரசாஸ்த்ர ரஹஸ்யக்ஞ, ஜ்யோதிஷ கல்பதரு

ஸ்ரீ குருவாயூரப்பதாஸன் - B. சுந்தரராமன், M.A.,B Ed.,

பழமார்னேரி P.O., வழி - திருக்காட்டுப்பள்ளி-613104.

தஞ்சை மாவட்டம்

அருட்பிரகாச வள்ளலார் அருளிய

தெய்வமணி மாலை

— ஆன்மீகன் —

கற்றமே லெவரோடும் கூடி நில்லேன்
கல்வி கற்கும் நெறி தேர்ந்து கல்லேன்
கனிவு கொண்டு உனது திருவடியை ஒரு
கனவிலும் கருதிலேன் நல்லன் அல்லேன்
குற்றமே செய்வது என் குணம்ஆகும் அப்பெரும்
குற்றமெல்லாம் குணம் என் கொள்வது
நின் அருட் குணமாகும் என்னில்
என் குறை தவிர்த்து அருள் புரிகுவாய்
பெற்றம்மேல் வரும் ஒரு பெருந்தகையின்
அருள் உரு பெற்று எழுந்து ஓங்கு சுடரே
பிரணவ ஆகார சின்மய விமல சொருபமே
பேதம் இல் பரப் பிரம்மமே
தன் தகைய சென்னையில் கந்தகோட்டத்து உள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

எந்த ஒரு செல்வத்தையும் நாம் நினைத்தால் அழித்துவிட முடியும். நாம் உள்ளவரை நம்மிடமுள்ள கல்வியை அழிக்க முடியாதல்லவா? ஆகவே, அழியாச் செல்வம் கல்விச் செல்வம்தானே. அத்தகைய கல்வியை முறையோடு பயிலாமலும், அறிவொளியோடு பழகாமலும், குற்றங்களையே செய்து, நற்செயல் புரியாமலுள்ளவர்களை மன்னித்து அருள் புரியுமாறு இப்பாடலில் வடலூர் வள்ளலார் கந்தப் பெருமானிடம் வேண்டுகிறார்.

கல்விச் செல்வம் படைத்த மேலோர்களோடு பழகாமலும், முறைப்படி கல்வியைக் கற்காமலும் உலவும்போது முருகா! உன் திருவடியைக் கனவிலும் கூட நினையாமல் [illegible] என்னை! குற்றங்களையே

புரிவது என் இயற்கை குணமாகி நல்லவனாக நான் இல்லையே! அப்படிப்பட்ட பெரும் பாவங்களையெல்லாம் மன்னித்து, என் குறைபோக்கி நிறைகண்டு ஆட்கொள்வது உன் அருள் கூடிய குணமென்பது உண்மையானால் என்னை மன்னித்து அருள்பாலித்து ஆட்கொள்ளவேண்டும் என்கிறார் அடிகளார்.

காளையை வாகனமாகக் கொண்ட பெருந்தகையாகியசிவபெருமானின் உருப்பெற்று அருளோடு கூடிய பேரொளியே! மும்மலங்களும் நீங்கப்பெற்று ஞான ஸ்வரூபியான பிரணவத்தின் வடிவம் பெற்றவனே! மாறுபாடில்லாத பிரம்மத்தின் பொருளானவனே என்றெல்லாம் கந்தப் பெருமானை வேண்டி வணங்குகிறார்.

மேலும் தனக்குத் தானே சமம் என்கின்ற நிலையில் உயர்வான சென்னை மாநகரில், கந்தக் கோட்டத்தில் தன்னை நாடி வரும் அடியார்களை அருள்பாலிக்கும் கந்தப் பெருமானே! ஆறுமுகங்கள்கொண்டவரே! தெய்வங்களுக்கெல்லாம் மேலான மணி போன்ற தூய்மையான தெய்வமே! என்னைக் காத்தருள்வாய் என விண்ணப்பிக்கிறார் வடலூர் பெருமான்.

அவர் வழியில் நாமும் கந்தக் கோட்டக் குமாரப் பெருமானை உளமாறப் போற்றிப் பணிந்து நற்கதி பெறலாமல்லவா?

பாய்ப்பட்ட புலியன்ன நாய்ப்பட்ட கயவர்தம்
பாழ்ப்பட்ட மனையில் நெடுநாள்
பண்பட்ட கழுநீரும் விண்பட்ட
இன் அமுது பட்ட பாடு ஆகும் அன்றி
போய்ப்பட்ட புல்லுமணி பூ பட்ட பாடும்
நல் பூண்பட்ட பாடு தவிடும்
புண்பட்ட உமியும் உயர் பொன் பட்டபாடு
அவர்கள் போகம் ஒருபோகம் ஆகுமோ.?

ஆய்ப்பட்ட மறை முடி சேய்ப்பட்ட நின்அடிக்கு
ஆட்பட்ட பெருவாழ்விலே
அருள்பட்ட நெறியும் மெய்ப்பொருள்பட்ட
நிலையும் உற அமர் போகமே போகமாம்
தாய்ப்பட்ட சென்னையில் கந்தகோட்டத்து உள்வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. 25

கருணையே இல்லாத கருமியின் குணத்தைப் பாருங்கள். அவர்கள் வீட்டில் வீணாகும் கழுநீரையும் அமுதம் என எண்ணியும், தவிடு, உமி போன்றவற்றைக் கூட பொன் என மதித்து ஒருவருக்கும் உதவ மாட்டார்கள். இத்தகையவர்களின் வாழ்வு ஒரு வாழ்வா? என்று இப் பாடலில் மிகவும் விளக்கமாகச் சொல்லுகிறார் படியுங்கள்.

பாயும் சுபாவம் கொண்ட புலி, நாயின் குணம் இவைகள் கொண்ட இழிநிலையில் உள்ளவர்களின் வீட்டில் நீண்ட நாட்களாய் வீணாகும் கழுநீரைக்கூட அமுதம் என்று எண்ணியும், நெல் உமி, தவிடு போன்றவற்றை பொன் ஆபரணங்களுக்கு சமமாக நினைத்தும் ஒருவருக்கும் உதவாத பொருளின் மேல் பேராசை கொண்ட கருமிகளின் வாழ்வு ஒரு இன்ப வாழ்வாகுமா? இது ஒரு போகமா?

வேதங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட உன் திருவடிகளுக்கு அடிமையான பெருவாழ்வின் நெறியும், மெய்ப் பொருளை அறியும் அறிவும் பெற்று தேவபோகம் எனப்படும் பேரின்ப வாழ்வே ஞான மார்க்கத்திற்கு வழிகாட்டும் நல்வாழ்வாகும் என்கிறார் வடலூர் ராமலிங்கப்பெருமான்.

தன்னை நாடி வருபவர்களை தாய் போன்று கருணை உள்ளம்கொண்டு வரவேற்குமாம சென்னை நகர். அத்தகையகருணை மனமகொண்ட மக்கள் வாழும் சென்னைக்கந்தக்கோட்டத்திலமர்ந்து அடைக்கலமானவரை ஆட்கொண்டு அருள்பாலிக்கும் ஆறுமுகப் பெருமானே என்று மன நிறைவுடன் வேண்டுகிறார்;

நாமும் கருணை உள்ளம்கொண்ட கந்தன் கழலடியை அடைக்கலம் புகுந்து அவன் அருளால்நல்வாழ்வு பெறலாமல்லவா?

நரகமும், சொர்க்கமும் பெண்களிடம் இருக்கின்றன. —டென்னிஸன்.

ஏமாந்த பெண்ணின் ஆவேசத்துக்கு இணையாக நரகத்திலகூட எந்தப் பேயையும நாம காணமுடியாது. —கோலி கீப்பர்.

ஆண் அடிககடி காதலித்ததால், அவன் காதலில் வேகம் இருககாது. பெணணோ எபபோதோ ஒரு முறை காதலித்தாலும், அவளது காதலின வேகம ஆணைவிட அதிகமாக இருககும். —பாஸடர்.



படித்துப் பாருங்கள்

பகவான் பாபா என்ற புத்தகத்தை ஸ்ரீ வேதகிரி தமது சாந்திப் பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டிருக்கிறார். இது ஸ்ரீ ஸத்திய சாயி பாபாவின் பல செயல்களினை பக்தர்களின் அனுபவ பூர்வமாக தெளிவாக்கும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

சுமார் இருநூற்றைம்பது பக்கங்களுக்கு மேல் பாபா அவர்கள் நிகழ்த்திய பிரமிக்கத்தக்க அற்புதங்களை கோர்வையாக சுவை குன்றாமல் எழுதியுள்ளார் சாயி பக்தை திருமதி எஸ். லட்சுமி சுப்ரமணியன் அவர்களைப் பாராட்டுகிறேன். சாயி பக்தர்களுக்கு மிகவும் பயனுள்ள புத்தகம். விலை ரு. 16, —ஆசிரியர்

கிடைக்குமிடம் : சாந்தி பதிப்பகம், 44, அண்ணாசாலை, சென்னை-2.

சோமசுந்தரம்—குமுதவதி திருமணம்

கோவை நகை வியாபாரம் நவரத்ன ஐஸ்வல்லரியின் அதிபர் என் அருமை நண்பர் திரு. பி. குமாரசாமி செட்டியார் அவர்களின அருபுச செல்வன் சிரஞ்சீவி சி. கே சோமசுந்தரத்திற்கும், கூனம்பட்டி திரு. வி. எஸ். கிருஷ்ணசாமி செட்டியார் அவர்களின அன்புச செலவி குமுதவதிககும் 2—6—1983 அன்று கோவையில், ஸ்ரீலஸ்ரீ காட்டுசுவாமிகள் அவர்களின முன்னிலையில் திருமணம மிகுநத விமரிசையாக நடைபெறறது. சுமார் முபபதாண்டுகளுக்கும் மேலாகப் பழகிவரும நலல நணபர், தெயவ பக்தியும், மகானகளுடைய சேர்க்கையும் உளள என் அன்பு நணபர் குமாரசாமி அவர்களுககு நன்றி தெரிவித்து புதுமண தமபதிகளுககு முருகப் பெருமான் திருவருளை வேண்டி நல்லாசி கூறி வாழத்துகிறேன். —ஆசிரியர்.

ஆன்மீக எழுத்தாளர் மகேந்திரவாடி உமாசங்கரனின்
உள்ளமுருக்கும் பக்தி நூல்
அம்பிகையின் புகழ்பரப்பும் சக்திநூல்

'காருண்யவல்லியே காமாட்சி'

(மாங்காட்டு நாயகியின் தல வரலாறு, வழிபடும் முறை, பாடல்கள் ஸ்ரீ காமாட்சி சுப்ரபாதம், துக்க நிவாரணி அஷ்டகம போன்றவைகள் அடஙகியது)

தபால செலவு உள்பட ரு. 1-50 அனுப்பி

தொடர்பு கொள்ள வேணடிய முகவரி

ஸ்ரீ காமாட்சி பதிப்பகம்

27, ராஜாஜி வீதி, ராமகிருஷ்ணநகர், வளசரவாக்கம், சென்னை-87.

பக்தி ரத்னவளி

மகான் விஷ்ணுபூரி அருளியது

தேவர்களை பூஜிப்பதால் நாம் அளித்த பூஜைக்குத் தக்கபடி பலன் கிட்டும். தேவர்கள் தாம் அடைந்த பூசையின் அளவுக்குத் தகுந்தபடி பலன் அளிப்பர். ஆயின் தன்னலமில்லா மகான்கள் தமது கருணைமயமான அன்பினால் விருப்பு வெறுப்பற்று அண்டினோர் எல்லோருக்கும் நன்மையே செய்வர் என்று நாரதருக்குவாஸுதேவன் சொன்ன வாக்கு :

இனி ஜனகன் மகான்களைப் பற்றிக் கூறுவது :

துர்லபோ மானுஷோ தேஹோ தேஹினும் க்ஷணபங்குர :
தத்ராபி துர்லபம் மன்யே வைகுண்ட பிரியதர்சனம் 49

மானுட ஜன்மம் கிடைத்தலரிது. கிடைப்பினும் அதன் காலம் மிகக் குறுகியது. இத்தகைய அரிதான மானிடப் பிறவியில் ஒருவன் பகவானுக்குப் பிரியமான பக்தி மிக்க மகான்களை அண்டி உறவாடுவது வெகு துர்லபம். இதனால் மனிதப் பிறவியின் பயன் பக்திமிக்க மகான்களை அடைவதாலேயே கிடைக்கிறது என்பது தெளிவு.

ஸ்ரீகிருஷ்ணர் மகான்களின் ஸங்கத்தின் உயர்வு பற்றியும் அவர்களின் சேர்க்கையினால் ஏற்படும் விசேஷத்தையும் விவரித்தல்.

ந ரோதயதி மாம் யோகோ ந ஸாங்க்யம் தர்ம ஏவச
ந ஸாஙகயாய-ஸ்தபாத் யாகோ நேஷ்டா பூதே ந தக்ஷிணா 50

வ்ரதானி யக்ஞச் சந்தாம்ஸி தீர்த்தானி நியமா யமா ;
யதா அவருந்தே ஸத்ஸங்க : ஸர்வ ஸங்கா பஹோஹிமாம் 51

ஸத் ஸங்கேன ஹிதைதேயோ யாதுதானா : ககா : ம்ருகா :
கந்தர்வா அப்ஸரஸோ நாகா : ஸிததாஸ் சாரண குஹ்யகா : 52

வித்யாதரா மனுஷ்யேஷு வைச்யா : சூத்ரா : ஸ்திரியோன்த்யஜா :
ரஜஸ்தப : ப்ரக்ருதய—ஸ்தஸ் மின் ஸதஸ் மின் யுகே யுகே 53

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை.

பஹ்வோ மத்பதம் ப்ராப்தா: ஸத்வாஷ் ட்ருகாயாத வ்யாதய :
வ்ருஷ பர்வா பலிர்வாணோ மயஸ்சாபி விபீஷண : 54

ஸுக்ரீவோ ஹனுமான் ருக்ஷோ கஜோ க்ருக்ரோ வணிக் பத :
வ்யாத : குப்ஜா வ்ரஜே கோப்யோ யஞ்ஞ பத்ன்யஸ்ததாபரே 55

தே நாதி தஸ்ருதிகணா நோபாஸ்தித மஹஸ்த்தமா :
அவ்ரதா தப்த தபஸ : ஸத்ஸங்கான்மாம் உபாகதா : 56

யோக சாதனைகள்," தத்துவ விசாரணை, சாஸ்திர ரீதியில் குறிப்பிடப்பட்டுள்ள யாக யக்ஞங்களைச் செய்தல், வேதங்களைப்பாராயணம் செய்தல், யம நியமங்களோடு வ்ரதங்களை மேற்கொள்ளுதல், பலத்தை இச்சிக்காமல் தொழில் ஆற்றுதல், தர்ம கார்யங்களையும் புனித செயல்களையும் ஆற்றுதல், சாஸ்திர விதிகளின்படி தாராளமாக தானங்களை அளித்தல், உறுதியாக பிரார்த்தனைகளையும் உபவாசங்களையும் மேற்கொள்ளுதல், தேவ பூஜைகள் செய்தல், கூட்டமான சடங்குகளை ஆற்றுதல், புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தல், அகப்புறக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல் இவை ஏதும் என்னை கட்டுப்படுத்த முடியாது.

அவைகள் எனக்குக் கவர்ச்சி அளிப்பதுமில்லை. ஆயின் மகாத்மா

LPS

Single Phase CENTRIFUGAL
MONOBLOC PUMPS



● PUMPSETS ARE COMPACT
● LIGHT IN WEIGHT
● IDEAL FOR GARDEN and DOMESTIC USE

MANUFACTURERS

SANDHYA INDUSTRIES

27-1-A, East Periasamy Road, R. S. PURAM, COIMBATORE-2
Phone : 22471 & 24997

களுடன் ஏற்படும் தொடர்பானது மற்ற எல்லாத் தளைகளையும் அறுத்து என்னைக் கட்டுப்பாடு செய்கிறது. பற்பல காலங்களில் ரஜோகுணம், தமோகுணம் இவற்றில் மிகுந்தவராய் இருந்த அசுரர்கள் மிருகங்கள், பக்ஷிகள், கந்தர்வர்கள், அப்ஸரஸ்கள், நாகங்கள், சித்தர்கள், சாரணர்கள், குஹாயகர்கள், வித்யாதரர்கள், மனிதர்களிலும் தகுதியற்ற பெண்கள், வைசியர்கள், ஹீனசாதியினர்கள் இவர்களெல்லாம் இத்தகைய மகாத்மாக்களின் சேர்க்கையின் விசேஷத்தால் என்னை அடைந்திருக்கின்றனர்.

இவர்களுக்கு உதாரணம் விருத்ராசுரன், பிரஹ்லாதன், விருஷபர்வா, மகாபலி, பாணாசுரன், மயன், விபீஷணன், ஹனுமான், ஜாம்பவான், கஜேந்திரன், ஜடாயு, தர்மவ்யாதன், குப்ஜை, கோபிகைகள் மேலும் யக்ஞ தீக்ஷிதர்களின் பத்தினிகள் ஆவர்.

இவர்களில் எவரும் வேதத்தைப் படிக்கவோ, வேதமறிந்த வித்தகர் கீழ் அண்டி நிற்கவோ செய்யவில்லை,

அவர்கள் எந்தவிதமான ஆத்ம விசாரணையையோ, வ்ரதாதி அனுஷ்டானங்களையோ மேற்கொள்ளவில்லை, மகான்களின் ஸங்கம் ஒன்றினாலேயே அவர்கள் என்னை அடைய முடிந்தது. ஆகவே அத்தகையோர் சங்கம் எல்லாவற்றிலும் வலிமை மிக்கது.

இங்கு ஸ்ரீகிருஷ்ணர் வேத சாஸ்திர யக்ஞ யோக நியம இயம விரத தான தர்ம அனுஷ்டானங்களினால் ஏற்படும் பலன்களினும் வலிமை மிக்கது மகான்களை அண்டி நிற்பது என்று குறிக்கிறார்.

சிந்தனைத் துளி

ஆமணக்கு இலையிலும், பனை ஓலைக் கூடையிலும் வைத்த பூ பூஜைக்கு ஆகாது.

விநாயகருக்குத் துளசியும், சிவபெருமானுக்குத் தாழையும், பார்வதிக்கு நெல்லியும், சூரியனுக்கு அறுகும், வைரவர்க்கு நந்தியாவர்த்தமும், திருமாலுக்கு அட்சதையும் சாற்றக்கூடாது. —கிருபானந்தவாரியார்.

பக்திச் சுவை! பைந்தமிழ்ச் சுவை!

எத்திக்கும் புகழ் மணக்கும் தெய்வீக மாத இதழ்

தேவி கருமாரி அம்மன் விஜயம்

ஆசிரியர் : அருட்கவியரசு – ஸ்ரீதேவி கருமாரிதாசர்

ஆண்டுச் சந்தா ரூ 24 ஆயுள் சந்தா ரூ. 251

சூபர் பவர் பப்ளிகேஷன்ஸ்

152, முதல் மாடி — தம்புச் செட்டித் தெரு,

சென்னை - 600 001. போன் : 31595

அறநெறிகளைக் கடைபிடிப்போம்!

சிருங்கேரி சாரதா பீடாதிபதி ஸ்ரீ பரமாச்சாரியார் சுவாமிகள்

நாம் பல நல்ல காரியங்களை அறிந்தோ அறியாமலோ செய்கிறோம். தெரிந்து செய்யும்போது ஒரு பலனை எதிர்பார்த்துச் செய்கிறோம். பலன் உடனே கிடைக்காவிட்டால் மனம் வருந்தி, அந்தக் காரியத்தில் அசிரத்தை கொண்டு விடுகிறோம். மருத்துவர் ஒருகுறிப்பிட்ட மருந்தை நோய்க்குக் கொடுக்கிறார். மருந்தை உட்கொள்ளும்போது மேற்கொள்ள வேண்டிய பத்திய முறைகளையும் கூறுகிறார். பத்தியங்களைக் கடைப்பிடிக்காமல் மருந்தை மட்டும் சாப்பிட்டுப் பயன் இல்லை குணம் ஏற்படாது. 'மருந்து உபயோகம் இல்லை வைத்தியர் கெட்டிக்காரர் இல்லை என்று எண்ணி விடுவோம். அதே போல் சாஸ்திரங்களில் கூறியுள்ள வழி முறைகளை, அறநெறிகளை கடைப்பிடிப்போமானால் நிச்சயம் பலன் கிடைக்கும். அவற்றைக் கடைப்பிடிக்காமல், அசிரத்தை கொள்வதில் என்ன பிரயோஜனம் எதிலும் நம்பிக்கையுடன் ஈடுபட வேண்டும். தொடர்ந்து செய்ய வேண்டும்.

ஆதிசங்கர பகவத்பாதர், சிவானந்தலஹரியில் ஒரு சுலோகத்தில், 'புண்யாஹ வாசனம்' பற்றிக் கூறியிருக்கிறார்கள். நல்ல செயலைச் செய்யத் தொடங்கும்போது, அந்த இடத்தைச் சுத்தம் செய்யவேண்டும். அதற்கு 'ஸ்தான சுத்தி' என்பார்கள் புண்ணியச் செயலைச் செய்யும் இடத்தைச் சுத்தி செய்யாவிட்டால் கெட்ட சக்திகளின் தொடர்பு இருக்கும் அதற்காகத்தான் ஸ்தான சுத்தி செய்கிறோம்.

"பகவானை எப்படித் தியானம் செய்வது" என்பது பற்றியும் பகவத்பாதர் அதே சுலோகத்தில் கூறுகிறார்.

பக்தோ பக்திகுணவ்ருதே முதம்ருதா பூர்ணே ப்ரஸன்னே மன:
கும்பே ஸாம்பதகாங்வரி பல்லவயுகம் ஸம்ஸ்தாப்ய ஸம்வித்பலம்
ஸத்த்வம் மந்த்ர முதீயரயாநிஜ சரீராகார சுத்திம் வஹன்
புண்யாஹம் ப்ரகடீகரோமி ருசிரம் கல்யாண மாபாதயன்

எல்லாரும் வாழ்வில் இன்பத்தையே விரும்புகிறார்கள். பக்தன் என்றால் என்ன? அவன் தகுதிகள் என்ன? என்பதை முதலில் பார்க்க வேண்டும். எல்லாருக்குமே இறையுணர்வு இருக்கிறது. சிலர் செயலிலும் பேச்சிலும் இந்த அச்சம் வெளிப்படுகிறது. இறைவனிடம் வேண்டிக் கொண்ட காரியம் முடியும வரையில் இந்த உணர்வு அதிகம் காண்கிறது இந்த உணர்வைப் பக்தி என்று கூறமுடியாது. பொருள்களின் மேல் நமக்குப் பற்று இருக்கிறது சிறு குழந்தையாய் இருக்கும் போது தகப்பனார், பிள்ளையை எடுத்துக் கொஞ்சுகிறார். அவனே பெரியவனாகி விட்டால சில காரணங்களினால தகப்பனாரிடம் அபிப்பிராயபேதம ஏற்பட்டு விடுகிறது பெற்ற பிள்ளையுடன் பேசவே தகப்பனாருக்குப் பிடிப்பதில்லை.

பையனும் அதே மாதிரி முரண்டு பண்ணுகிறான். பிரியம் அல்லது

அன்பு என்பது இப்படி மாறிக் கொண்டே இருக்கிறது.

ஆனால், சொந்த விஷயம் என்றால் அதில் பற்றுக் குறைந்து போகாது. தற்கொலை செய்து கொண்டால், துன்பம் கொள்கிறான். அதாவது தனக்கு உண்டாகும் துன்பத்தை விட்டு விடுதலைபெறவேண்டும் என்றே சுயநல நோக்கிலேயே அப்படிச் செய்கிறான் ஒவ்வொருவனும் தன் உடம்பின்மேல் அதிகம் பற்றுக்கொண்டிருக்கிறான். இந்த ஜீவனுக்கெல்லாம் மூலமாக விளங்கும் அந்த பரமேஸ்வரன் பேரில் எத்தனை பிரியம் வைக்கவேண்டும இதைத்தான் நாரதர் "ஸாத்வஸ்மின் பரம பிரேம ரூபா" என்று பக்திக்கு இலக்கணம் வகுத்தார்.

வியாபாரம் செய்வது போல், 'எனக்கு இதைக் கிடைக்கச் செய். நான் பூஜை செய்கிறேன்' என்று இறைவனிடம் பேரம் செய்வது நல்ல செயல் இல்லை. எந்த விதமான பலனையும் எதிர்பார்க்காமல் இறைவனிடம் பக்தி செலுத்துவதே பக்தனின் லட்சியமாக இருக்க வேண்டும்.

பக்தனின் மனத்தைப்பற்றி இந்த சுலோகத்தில் "பக்தி குணவருத்த முதம்ருதா பூர்ணே ப்ரஸன்னே மன" என்று கூறுகிறார் புண்ணியாஹ வசனம் செய்யும்போது ஒரு கலசத்தில் நீர் வைத்திருப்போம். சங்கரர், கலசத்துக்கு மனத்துக்கு உவமையாகக் கொடுக்கிறார் அந்த மனம் என்ற கலசம், பக்தி என்ற நூலால் சுற்றப்பட்டிருக்கிறது கலசத்தில் தண்ணீரோ, அரிசியோ நிரப்பியிருப்பார்கள். தண்ணீருக்கு அம்ருதம் என்ற பெயரும் உண்டு. இந்த மனம் என்ற கலசத்தை எந்த நீரால் பக்தன் நிரப்பியிருக்கிறான் தெரியுமா? மகிழ்ச்சி என்ற நீரினால் நிரப்பியிருக்கிறான்.

லாட்டரியில் முதல் பரிசு விழுந்தாலும் அல்லது குறைவாகப் பரிசு வந்தாலும் மனத்திலே மகிழ்ச்சி இல்லாவிட்டால் உபயோகம் இல்லை இன்னொரு டிக்கெட் வாங்கியிருந்தால் இன்னொரு லட்சம் கிடைத்திருக்குமே என்றோ, லட்சம் கிடைக்காமல் குறைவாகக் கிடைத்துள்ளதே என்றோ, வருத்தப்பட்டால் என்ன பிரயோஜனம்? நீர் நிரம்பிய செம்பு தளும்பாததுபோல், செல்வம் அதிகம் இருந்தாலும், ஓரளவு இருந்தாலும், மன நிறைவுடன் விளங்கப் பழகவேண்டும். கிடைத்ததைக் கொண்டு சந்தோஷப் படவேண்டும சந்தோஷப் படத்தெரியாதவனுக்கு வாழ்வில் பிடிப்பே உண்டாகாது. சிறு விஷயமாக இருந்தாலும் மகிழ்ச்சியுடன் விளங்கினால்தான். எந்தச் செயலையும் வெற்றிகரமாகச் செய்யமுடியும். மகிழ்ச்சியே உடலுக்கு வலுவைக் கொடுக்கும்; உள்ளத்துக்கு உற்சாகத்தை ஊட்டும்.

அடுத்ததாக 'ப்ரஸன்னே' என்று கூறுகிறார் பிரஸன்னம் என்றால் என்ன? 'எவ்வளவு தடவை கூறினாலும மனத்தில் ஏறவில்லை' என்று சொல்கிறோம் அல்லவா? பலவித நினைவுகளால் குழம்பியுள்ள மனத்தில் ஏதுவும் பதியாததில் வியப்பில்லை சந்தோஷம் இருந்தாலும் குழம்பிய மனத்தில் 'பிரஸன்னதை' இருக்காது மனத்தை நிர்மலமாக தெளிவாக வைத்துக் கொள்ளப் பழகவேண்டும் என்பதனாலேயே 'பிரஸன்னே மன' என்று கூறினார்.

ஆக, கலசம் இப்படித் தயாராகி விட்டது கலசத்தின் மேல் மாந்தளிர் வைப்பார்கள அல்லவா? மனம் என்ற கலசத்தில் இறைவனுடைய பாதாரவிந்தங்கள் என்ற மாங்கொத்தைச் சொருகி வைக்கவேண்டும். இறைவனுடைய பாதாரவிந்தங்களின் தரிசனத்தை மனத்தில் நிறுத்திப்பார்க்கவேண்டும். அந்தத்

தரிசன கோலத்திலேயே இறைவனை 'மனம்' என்ற கலசத்தில் நிறுத்த வேண்டும். ஆபத்துச் சமயத்தில் 'கையைப் பிடி' என்று சொல்வதில்லை. 'காலைப் பிடி' என்றுதான் சொல்வோம். இறைவனுடைய பாதாரவிந்தம் பற்றக் கிடைக்கப் புண்ணியம் செய்திருக்கவேண்டும்.

புண்ணியாஹவாசக் கலசத்தில் மாந்தளிர் மேல் தேங்காய்வைப் பார்கள். தேங்காயைஞானம் என்று சொல்கிறார் பகவத்பாதர் நாம் எதற்கு இறைவனைப் பூஜிக்கிறோம்? 'அறிவைக் கொடு, ஆத்ம ஞானத்தைகொடு' என்பதற்காகத்தானே! ஆத்மா பற்றிய அறிவு கிட்டிவிட்டால் பிறகு பிறவியே கிடையாது

இறைவனை பூஜிப்பதில் ஒரு விஷயத்தைக் கவனிக்கவேண்டும் பூஜை முறையைப் பற்றிக் கூறும் போது நம சாஸ்திரத்தில் "ஸ்வாஹம் பாவேன பூஜயேத்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது நாம் எதைஎதை விரும்புவோமோ அதே போல் இறைவனையும் ஆராதிக்க வேண்டும். சூடு ஆறாத பொருளை நம்மால் உண்ண முடியுமா? அடுப்பிலிருந்து இறக்கியதும் நேராக சுவாமிக்கு நைவேத்தியம் செய்யச் சிலர் வைத்துவிடுவர் நைவேத்தியப் பொருள் ஆவி பறந்து கொண்டிருக்கும். பாத்திரம் கரிபிடித்திருக்கும் உலை நீர் கொதித்து வழிந்து நீர் கரைகட்டியிருக்கும் இன்னும் சிலர் ஆறி அவலாய் போன அமுதத்தைச் சுவாமிக்கு நைவேத்தியம் செய்யவைப்பர் இப்படி இரண்டு நிலையிலும் செய்யும் நைவேத்தியம் பலனே கிடையாது நாம் எப்படி இருந்தால் விரும்பி உண்ணுவோமா அதே நிலையில்தான் சுவாமிக்கும் நைவேத்தியம் செய்யவேண்டும் பூஜையின்போது சுவாமிவிக்கிரகத்தின்மேல் அபிஷேகம் செய்து சரியாகத் துடைக்காதவர்களும் இருக்கிறார்கள் அன்றாடம் துவைத்துக் காயவைத்த துணியினால் விக்கிரகத்தைத் துடைத்துச்சுத்தம் செய்ய வேண்டும் எண்ணெய பசையுடன் இருக்க நாம்விரும்புவோமா? நம்மை நாம் எத்தனை சுத்தமாக, அலங்காரமாக வைத்துக் கொள்ளவிரும்புகிறோமோ, அப்படியே இறைவன் விக்கிரகத்துக்கும் செய்யவேண்டும இந்த முறைப்படி இறைவனை மனத்தில் எண்ணிப் பூஜிப்பதைத் தான் 'நல்லவைகளாகிய'மந்திரங்களின் மூலம் நம் சரீரம் என்ற வீட்டையும் சுத்தப்படுத்தலாம் என்பது போல் கூறி முடிக்கிறார் சங்கரர். இதைத்தான் புண்ணியாஹம் என்கிறார்.

இன்னொரு சுலோகத்தில் அவரே கூறுகிறார், இறைவன் இருப்பதைக் காக்கிறான புது புதிதாகக் கொடுக்கிறான் அத்தகைய மான சிலாக்ஷையங்

திருமண பட்டு ஜவுளிகளுக்கு
சாரதா ஜவுளிக்கடை
ராஜ வீதி, கோயமுத்தூர்.
போன்: 23127

களை நாம் தம் நம்பிக்கைக்கு உகந்த சிலரிடந்தான் கூறுவோம். ஆனால் அவர்களால் உதவி செய்ய முடியாமலும் இருக்கலாம். நண்பனை விட இறைவன் நமக்கு மிகவும் அந்தரங்கமானவன், நெருங்கியவன். நாம் கேட்கும் நியாயமான எதையும் கொடுக்கும் சக்தி பெற்றவன். நோய்க்கு மருந்து கொடுக்கும் மருத்துவருக்கே நோய் என்றால் என்ன பிரயோஜனம்? அவர் மருந்து அவருக்கே உதவவில்லை. அவரையே காக்க முடியவில்லை என்றால்?

இறைவன் சர்வ வல்லமைகொண்டவன். கருணை நிரம்பியவன் மக்கள் எல்லாரும் சிரேயசுடன் வாழ வேண்டும் என்று விரும்புகிறவன். கண்ணால் பார்க்கமுடிகிற பலன்களையும் பார்க்க முடியாத பலன்களையும் அளிக்கும் வல்லமை பொருந்தியவன்.

அதாவது ஜோதிஷ்டோம யாகம் செய்தால் சொர்க்கம் கிடைக்கும் என்று வேதத்தில இறைவனே கூறியுள்ளன். சொர்க்கத்தைப் பார்த்து விட்டு வந்து, நம்மால் ஏதாவது சொல்லமுடியுமா? இறைவனை எங்கும் போய்த் தேடவேண்டாம். களங்க மற்ற மனத்துடன் தியானம் பண்ணினாலே தரிசனம் கொடுப்பான்.

புறத்தில் பார்த்தால் கோயிலில் அர்ச்சாவதாரமாய்த் தரிசனம் கொடுக்கிறான். உள்ளே பார்த்தால் ஜோதி சொருபமாக விளங்குகிறான். சில பேருக்கு நமக்கு உதவி செய்ய வசதி இருக்கும். ஆனால், மனம் வராது. ஆனால் இறைவன் பரம தயாளன் கருணைக்கடல் ஸர்வ சொருபன் விசுவரூபி ஸர்வக்ஞன் உள்ளும் புறமும் ஸர்வாந்தர்யாமியாக விளங்கும இறைவனிடம் நாம் எதுவும் வேண்டத் தேவையில்லை அவனே உதவுவான் நமக்கு வேண்டியதை, வேண்டிய அளவு கொடுக்கும் சக்தி இறைவனுக்குத் தான் உண்டு சங்கர பகவத்பாதர் அருளியபடி, இறைவனை வணங்கிப் பலனைப் பெறவேண்டும்.

தொகுப்பு: சேது, சென்னை

ராஜேஸ்வரி—நரசிம்மன் திருமணம்

கும்பகோணத்தை நிலைதகவுடன் பிரபல வாசனாதி திரவியம் தயாரிபபு ஸதாபனமாகிய TSR எனற மூன்றெழுத்துதான் ஞாபகததிற்கு யாருககும் வரும் அப் பிரபல ஸ்தாபனத்தில பல வருடஙகளாகப பொறுப்புள்ள நிர்வாகியாய் சேவை செய்துவரும் எனது அருமை நணபா திரு K. S. கோதணடராமன் அவர்களின் அனபுச செலவி, சௌபாககியவதி. ராஜேஸவரிககும, வேபபத்தூர் ஸ்ரீ V. N. சீதாராமையயர் அவாகளின குமாரன சிரஞசிவி எஸ். நரசிம்மனுக்கும் 4 – 5 – 1983 அனறு குடநதையில விவாஹம மிக நல்ல முறையில நடைபெற்றது. TSR ஸதாபனத்தின அதிபா என அனபு நணபா திரு. குமார என்கிற TR ராகவன் அவர்களும, மறறும ஏராளமான நணபர்களும மணவிழாவிற்கு விஜயம செயது வாழத்தினாகள குமரப பெருமான திருவருளைப் பிரார்த்தித்து புது மணத் தமபதிகள நலவாழவு பெற ஆசி கூறி வாழ்த்துகிறேன். —ஆசிரியர்.



கம்பன் கவிநயம்

நாராயண உபாஸனை

கவியரசன் கம்பன் நரசிங்க உபாசகன் அவன்பலபடலங்களில் சிங்கக் கவியாக விளங்குகிருன்.

பால காண்டத்தில் பொன்னிளங் காலை புலர்கிறது. இருள் இரணியன் போலும், மீன்கள் அவன் பற்கள் போலும் (மீனுடை எயிற்றுக் கங்குல்); உதயகிரி தூண்போலும், சூரியன் ஆயிரம் கதிர்க் கரங்களை ஓச்சி அதைப் பிளந்து, மனிதச் சிங்கம் போல உதித்துப பொன்னகை பொலிகிறது. பாட்டைப் பார்ப்போம்:

மீனுடை எயிற்றுக் கங்குல்
  கனகனை வெகுண்டு வெய்ய
கானுடை கதிர்கள் என்னும்
  ஆயிரம கரங்கள் ஓச்சித்
தானுடை உதயம் என்னும்
  தமனியத் தறி பிளந்து
மானுடை மடங்கல் என்ன
  வந்தனன் வயங்கு வெய்யோன்

கம்ப ராமாயணத்தில மிகச் சிறந்தது இரணியப் படலமே. இது மற்ற ராமாயணங்களில் இல்லாத சிறப்பு, இப்படலத்தில் ஓசை, மில்தன், விர்ஜில் போன்ற வீறுநடை அதிர்கிறது அத்துடன் கேனம்கடம், முண்டகம் ஆகிய உபநிஷத்துக்கள் மிளிர்கின்றன

தெய்வ ஒளிதனையே தேடு
  மறவெலலாம்
கைநழுவும காலத்திற் காண்

என்பதே பிரகலாதன் மனவுறுதி.

இரணியாசுரன் ஆணவச் செருக்கு, நாராயணு என்ற நாமத்தையே வெறுக்கிறது. அதையே பற்றி நிற்கும் விஷ்ணு பக்தனுன பிரகலாதனைக் கொன்றொழிக்கக் கொலைவழி பற்றுகிறது. ஆன்மக் கலை வழிகாட்டி பிரகலாதன் அறிவுரைக் கூறுகிருன் அப்பா ஆணவ மாயத்தாலே நீ அரக்கன் ஆனுய். உனது புல்லிய மானிடப் பேர் எங்கே? புனித வல்லியல் நாரணன் நாமமெங்கே?

இரணியன் : சொல்லடா அவன் என்னிலும் வலியனே?

பிரகலாதன் ; அப்பா கேள். நாராயண நாராயண

தன்னுளே உலகங்கள்
  யாவும் தந்தவன்
தன்னுள்ளே நின்று தான்
  அவற்றுள் தங்குவான்

இரணியன் : அவன் எங்கேயடா உள்ளான்; சொல், முன்னுலா, பின்னுலா, காணேமே, காட்டு காக்கி வாட்டுகிறேன்.

பிரகலாதன் :

முன் உளன பின் உளன்
  ஒருவன; பேர்கிலான்
தொன்னிலை ஒருவரால்
  துணிதற் பாலதோ

அவன் வேலையும் திரையும்போல் வேறுபாடு இல்லான்; ஆலம் வித்திலே பெரிய மரம்போல நம் ஆன்மாவில் அடங்கியுள்ளான் ஆலமும் வித்தும்போல் அடங்கும் மாண்மையான்.

கவியோகி. சுத்தானந்த பாரதியார்

இரணியன் : பொய் பொய்பயலே கவனப்; என்னிலும் பெரியவனு உன் கடவுள்? பார் என் மலையுரு வப! கவனம்—அவன் என்னி லும் ஏற்றமுள்ளவனு? பார் என்னை! என் மார்பை, என் உரத்தை, திறத்தை, மறத்தை, கரத்தை......என் அறிவை, என் ஆற்றலை... அவன் பேர் என்ன?

பிரகலாதன் : அப்பா, ஓம் என் னும் பிரணவமந்திரத்தில் அவனை உபநிடதம் வணங்கும்.

இரணியன் : ஓமா?......ஒப்போம் உன்னை உரிப்போம்—அவனை வெல்வோம்—கொல்வோம்!

பிரகலாதன் : அப்பா மகரிஷிகளின் வேத வாக்கை மீருதே—ஓம் இதிப்ரம்ம

ஓம் என்னும் ஓரெழுத்து
அதனின் உட்பொருள்
ஆம் அவன்; அறிவினுக்கு
அறிவும் ஆயினன்.

இரண்யன் : போச்சு! போச்சு! ஏச்சு, ஏச்சு எனக்கு...உன் மூச் சைப் பிடித்து முறுக்கி எறிவேன் பயலே அந்த ஓமனை ஊமனுக்கு வேன்... அவன் எங்கே காட்டு...

பிரகலாதன் : என் ஆண்டவன் ஸ்ரீமந் நாராயணன் மூவுலகையும் தழுவி, புகையும் தீயும்போலத் தொடர்ந்து நிற்கிறான்,

தாமமூ வுலகமும்
தழுவிச் சேர்தலால்
தூமமும் கனலும் போல்
தொடர்ந்த தோற்றததான்

நாராயண உபாசகனுன பிரக லாதன் அப்பா ஓம் நமோ நாரா யணு என்று வணங்கு; கடவுளை நம்பு என்கிறான் தூணிலும் உள் ளான்; துரும்பிலும் உள்ளான்.

இரணியன் : இவனையா வணங்கு வது? தூணிலா உள்ளான்?

பிரகலாதன் : ஆம்...நாராயணு... ஹரி நாராயணு...

இரண்யன் ; இதோ ஒரு முண்டு முண்டித் தூணைப் பிளக்கிறேன் பார்...... அவன் வராவிட்டால் உன்னைப் பிளந்து உயிர் குடிப் பேன்.

இரணியன் தூணை ஒரு முண்டு முண்டுகிறான், எறிகிறான், வீறுடன் பாய்ந்தது சிங்கம்

கம்பன் ஆவேசமாகப்பாடுகிறான் இக்காட்சியை ;

பிளந்தது தூணும ஆங்கே
பிறந்தது சீயம்; பின்னை
வளர்ந்தது; திசைகள் எட்டும்
பகிரண்டம முதல மற்றும
அளந்தது; அப்புறததுச் செயகை
ஆர அறிந்து அறைய நிற்பார்
கிளர்ந்தது ககன முட்டை
கிழிந்தது கீழும மேலும்

பிரகலாதன் : நாராயணு நமோ நாராயணு என்று பணிகிறான்,

இரணியன் வாளை உருவிப் பாய் கிறான்.

பிரகலாதன் : அப்பா... அப்பா...... தெய்வம் இது நரசிங்கம்! வணங்கு என்கிறான்,

மதம் பிடித்த இரணியன்...மீசை முறுக்கி பயலே கேள்...

கேள் இது நீயும் காணக்
கிளர்ந்தகோள அரியின் கோழில்
தோளொடு தாளும நீககி
நின்னையும் துணித்து பின் என்
வாளினைத தொழுவதலலால்
வணங்குதல் மகளிர் ஊடல்
நாளிலும் உளதோ என்று
அண்டங்கள் நடுஙக நக்கான்

பாய்ச்சல் பலமாகிறது. நரசிங்கம் இரணியாசுரனைப் பற்றிப் பிழிந்து வயிற்றைப் பிளந்து, செந்நீர் கக்க, குடலை உரித்து எறிந்தது கடிநகை புரிந்தான்

ஒழிக நாத்திகம் என்று தேவர் மலர் பொழிந்தனர் பிரகலாதன் உபாசனை பலித்தது,

குலசேகர் அமுதம்

இரா. சுராஜ்

ஏதேனும் ஆவேனே

பிறவிகளில் உயர்ந்தது மானிடப் பிறவி, அதிலும் அரச பதவி வெறும் அரசர்கூட அல்ல பேரரசர் குலசேகரர் இந்தப் பெரும் அந்தஸ்து நிறைந்த பிறவியை விடுத்து இழிந்த பிறவிகளை விரும்பி வேண்டுகிறார். ஆம்! எம்பெருமான் சம்பந்த மற்ற எத்தனை பெரும் பிறவியாலும் பயனில்லை. அவனது சம்பந்தம் பெற்ற இழி பிறப்பும் உயர் பிறப்புத்தான் திருவேங்கடத்திலுள்ள எம்பெருமானுடன் தொடர்புடைய பின் பிறவிகளும் உயர்ந்தவைகள் அவனது சம்பந்தம் நீங்காமையால் என்கிறார் குலசேகர்.

எம்பெருமானே! இந்தச் செல்வத்தால் விளையும் பயன் உடல்களாம் ஏறுகிறது! 'ஊனஏறு செல்வம்' இந்த உடற்பிறவி எனக்குத்தேவை இல்லை அழகிய சங்கத்தைக் கையில்கொண்ட திருவேங்கடமுடையான் உறையும் திருப்பதியில் கோனேரியில் வாழுகின்ற குருகாக் அன்னப்பறவையாக என்னை மாற்றி விடமாட்டாயா?

'கோனேரி வாழும் குருகாய்ப்
பிறப்பேனே'

எல்லையற்றசெல்வம் அரம்பையர்கள் சூழ்ந்து தொண்டு செய்கிறார்கள் வானரசனாக தேவேந்திர பதவி எனக்குக் கிடைத்தாலும் சரி, மண்ணரசனாக இந்தப் பதவியும் சரி. எனக்கு வேண்டாம், தேன் நிறைந்த மலர்ச் சோலைகள் நிறைந்த திருவேங்கடச்சுனையில் மீனாகப் பிறக்கும் விதியுடையவனாக வேண்டும்!

ஆம் மீனாகப் பிறந்தால், சுனையில் நீராடவரும் பக்தர்களின் திருவடி கண்வருடும் திருவடி சம்பந்தம் எனக்குக்கிட்டுமே! இப்பிறவிதான் உயர்ந்தது அதை எனக்கு அருள வேண்டும்!

மீனாய்ப் பிறக்கும் விதியுடையேனாவேனே!

திருமலை ஆலயத்துக்குள் நுழைய இன்றுமட்டுமல்ல என்றுமே மிகுந்த சிரமம் நெருக்கம் இருந்திருக்கிறது! அதோ ஆலயத்துக்குள் நுழைய நிற்பவர்கள் வரிசையில் யார் யார் நிற்கிறார்கள்!

அங்கே நிற்பவர் யார்? பின்னிட்ட சடையார் சிவபெருமானல்லவா நிற்கிறார்! பக்கத்தில் பிரமதேவர், அடுத்து தேவேந்திரன் போட்டியிட்டு வைகுந்த வாயிலாகிய திருவேங்கட ஆலய வாசலில் நுழைகிறார்கள் அப்படிப்பட்ட வேங்கடவனுக்கு அர்க்கியம்' அளிக்கின்ற பொன் வட்டிலைப் பிடித்து நிற்கும் அர்ச்சகராகிய பிறப்பு எனக்கு வேண்டும்!

பொன்வட்டில், பிடித்துடனே புகப்
பெறுவேன் ஆவேனே

திருவேங்கடத்தில் செண்பக மலர் மரமாக நிற்கும் வரம்வேண்டும் வேங்கட 'வழியில் ஒரு தம்பமாய் நிற்கும் பேறுவேண்டும் திருவேங்கடத்தில் பக்தர்கள் நடந்து செல்லும் பாதையாகக்கிடக்கவேண்டும் திருவேங்கடத்தில் கானாறாகப் பாயவேண்டும். இப்படியெல்லாம் வரம் கேட்டுப்பின் ஆலயத்துக் கருவறைக்குள்ளே எம்பெருமானின் திருமுகமண்டலத்தைச் சேவித்துக் கொண்டே, பக்தர்களின் திருவடித் துகள் கலைத்தாங்குகின்ற படியாகக் கிடக்கவேண்டும் என்று வரம்கேட்கிறார்.

வெறும் படியா அது? அந்தப்படியில் அடியார்கள் பக்தர்கள், வானவர்கள், மற்றும் அரம்பையரான தேவமாதர்கள் ஸ்ரீ நிவாசனைச் சேவித்து வருவதும் போவதுமாயிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் மிதித்துச் செல்லும்படியாய்க் கிடக்க வேண்டும் என்று வேண்டுகிறார் குலசேகரர் யார் இவர்? குறுநில மன்னர்கள் தன் திருவடிகளில் விழுந்து வணங்கித் திறை செலுத்தும் பேறு பெற்று, மதயானையின் மீது அம்பாரி வைத்து அதன்மீது பவனிவரும் பேறு பெற்ற பேரரசர்!

திருமாலே! நீ வினைகளை சாதாரண வினைகளா? கொடிய வினைகளை அடியோடு நீக்குகிறாய்! அவ்வினைகள் செடிபோலச் செழித்து வளர்ந்தவை வெட்ட வெட்ட முளைக்கும் தன்மை கொண்டவை அந்தச் செடியாய்வல்வினைகளை வேரோடும் வெட்டித் தீர்ப்பவன் வேங்கடவன் அவனால் முடியாதது உண்டா? குள்ளனாய் வாமனனாய்ச் சென்று நீண்டு வளர்ந்தவன் நெடியான் அவனுக்கு அரியது இல்லைபடியாய் கிடப்பதில் ஒருநயம் உயர்கோணம்

படி நிலையிலிருந்து நேராக தெரிவது எம்பெருமானது திருமுகம்! அம்முகத்திலும் அவனது திருப் பவளவாய்தெரிகிறது! அதைத் தரிசிக்கும் ஆவல்தான் படியாய்க் கிடக்க வைக்கிறது!

திருமால் ஆலயங்களில் கருவறைக்குமுன் உள்ளபடிக்கு குலசேகரன்படி என்று பெயர் ஆழ்வார் பக்தர்களின் திருவடி சம்பந்தம் பெறபடியாய்க்கிடக்கிறார் (ஆனால், அந்தப்படியை மிதிக்கும் வழக்கம் இல்லை அவர் எப்படி நினைத்தாலும் கிடப்பது ஆழ்வார் என்று நமக்குத் தெரிகிறதல்லவா?)

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே! வேங்கடவா! நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்து இயங்கும்
படியாய்க் கிடந்து உன் பவளவாய்க் காண்பேனே.

குருகாய், மீனாய், வட்டில் பிடிப்பவராய், செண்பகமாய், தம்பமாய், பொற்குவடாய், கானாறாய், நெறியாய், படியாய் இப்படிப் பல பிறவிகளைப் பட்டியலிட்டு வேண்டிய குலசேகரர் எண்ணிப் பார்க்கிறார் இது வேண்டும் அது வேண்டும் என்று நாம் என்ன கேட்பது?

இறைவனே! இந்த உலகத்தில் அரசாளவதல்ல தேவ உலக அரசனை தேவேந்திரனாக ஐராவதத்தின்மேல் இருந்து ஊர்வசிபோன்ற தேவமாதர்களது இன்பத்தை அடைவதாக இருந்தாலும் அது எனக்குத் தேவை இல்லை. சிவந்த பவளம் போன்றதிருவாயையுடைய திருமால் உறையும் திருவேங்கடத்தில் உறையும் எம்பெருமானின் திருமலை மேல் நான் "ஏதேனும் ஆவேனே! சேதனம் அசேதனமாகிய எந்தப் பொருளானாலும் சரி திருவேங்கடத்தில் ஏதாவது ஒரு பொருளாக என்னை மாற்ற வேண்டும்.

'எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே' என்று உருக்கமாக வேண்டுகிறார் குலசேகரர்.

பதவி என்பது மேலே போட்டிருக்கும் துண்டைப் போன்றது தலைவர்கள் அவசியமேற்பட்டால் அதைத் தூக்கியெறிந்து விட்டு, கட்சித் தொண்டில் தீவிரமாக ஈடுபட வேண்டும். —அறிஞர் அண்ணா.

[ஆனால், இன்றைய அரசியல் கட்சி மாறிகள், துண்டையும் துப்பட்டாவையும் வைத்துத்தான வயிற்றை வளர்க்கின்றனர்.]

வருணா கொஞ்சம் மனமிரங்கு

வருணா! கொஞ்சம் மனமிரங்கு—அந்த
வானின் விருந்தே மண்ணிறங்கு!
தருணந் தனிலே மழைபொழிந்து—இந்த
தாரணி மீதில் நீ உலவு!

தண்ணீர் வயல்கள் வெடிக்கின்ற—நிலைதான்
தெரிந்து நெஞ்சம் துடிக்காதோ?
கண்ணீர் மழையே பெருகுகிற—கொடுமைக்
காட்சி மனத்தை உருக்காதோ?

புல்லும் செடியும் மரங்களுமே—கதிரால்
பொசுங்கிப் போக விடுவாயோ?
அள்ளுங் கோலக் காட்சியெலாம்—வீணில்
அழிந்து விடவே காண்பாயோ?

வறுமைப் பேயை ஒழித்திடுவாய்—எங்கும்
வளமை தன்னைக் கொழித்திடுவாய்
சிறுமை எதையும் போக்கிடுவாய்!—எல்லாச்
செல்வங்களையும் ஆக்கிடுவாய்!

உன்னால் உயிர்கள் எல்லாமே—தங்கி
உறையும் பெருமை யறியாயோ?
பொன்னாள் தான் உன் வருகையே—அடியைப்
பணிந்து குவிப்போம் இருகையே.

—ஆர்ப்பாக்கம் பாப்பித்தன்

மகாபாரத யுத்தத்திலே யுதிஷ்டிரர் துரோணருடைய வீழ்ச்சிக்காக ஒரு பொய்யைச் சொல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டார். பொய்யே சொல்லாத அவருக்கு விசேஷ சக்தி ஒன்று உண்டு. அவருடைய தேர் பூமியைத் தொடாமல் சில அங்குலம் மேலேயே நகர்ந்து ஓடும். அவர் சொன்ன அந்த ஒரு பொய் பூமியைத் தொடும்படி இறக்கிவிட்டது. பூமிதேவியும் குறிப்பிட்ட அளவுதான் பொய்யைத் தாங்குவாள். அதற்கு மேலே போனால் இரண்டாகப் பிளந்து பாதாளத்திற்கு வழியைக் காட்டிடுமோ என்று பயந்துகொண்டு தான் பூமி மேலே நின்றுகொண்டு பொய் பேசப் பயந்து இந்தக் காலத்து அரசியல் வாதிகள் கொஞ்சம் உயரமாகவே மேடை யமைத்துக்கொண்டு உண்மையே பேசுவதில்லை.

—அரசியல் ஞானி.

ஜகத்குரு

பாரதப் பிரமதமர் இந்திரா காந்தி

காஞ்சி காமகோடி பீடபரமாசாரியார் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் போன்றோர் நம்மிடையே இருக்கும் வரையில் நாம் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை. சுவாமிகள் மாமுனிவர்களின் வரிசையில் வந்தவர். அவரைப் போன்றோர் தங்களது தவ வலிமையாலும் ஞானத்தாலும் பெருங்கருணையாலும் நம்மை வழி நடத்திச் செல்கிறார்கள். அவரைப் போன்ற மகான்கள் நம்மிடையே வாழ்வதால் இந்திய நாடு சிறப்புத் தன்மையைப் பெறுகிறது. அத்தகையோர் நம்மிடையே இருக்கும் வரை நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை.

ஜகத்குரு சங்கராச்சாரிய ஸ்வாமிகள் எந்த ஒரு சமூகம் அல்லது கூட்டத்தின் குருமட்டுமல்ல. இந்த நாடு முழுமைக்கும் அதற்கு அப்பாலும் அவர் குருவாகத் திகழ்கிறார். அவர் அருள் உள்ளம் நமக்காக மட்டுமல்லாமல், உலகிலுள்ள அனைவருக்காகவும் கவலை கொள்கிறது. அவருக்கென்று ஒரு குடில் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த உலகே அவரது குடிலாக உள்ளது.

தற்காலத்தில் இந்திய நாடு சில விசேஷ கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளது. நாட்டின் ஒற்றுமைக்கு ஆபத்து என்பது மட்டுமல்ல நம்முடைய இந்திய பண்புக்கே ஆபத்து என்று கருதவேண்டியுள்ளது உயர்ந்த பண்பாடுகளுக்காக போராடுபவர் எல்லாரும் இந்தியரே என்று ஒருமுறை டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார். அத்தகைய உயர்ந்த பண்புகள் தான் நம்முடைய நாட்டுக்குப் பலத்தையும் சேர்த்துள்ளது நாம் வாழ்வையும் வீழ்ச்சியையும் கண்டவர்கள்.

முன்னேற்றம் என்பது பொருளாதார முன்னேற்றத்தை வளர்ச்சியை மட்டும் குறிக்காது என்றும் மனிதன் ஆன்மீகியான முழுமையான தொரு முன்னேற்றத்தைப் பெற வேண்டும் வறுமை அகலவேண்டியது மிகவும் அவசியமே வறுமை என்பது மனிதனை இழிவுபடுத்துவதாகும் மனித சமுதாயத்தின் ஒரு பகுதியினர் வறுமையில் வாடினாலும் அது மனித சமுதாயம் முழுமைக்குமே ஏற்படுகிற இழிவாகக் கருதப்படவேண்டும்.

சுயநலம் காரணமாக லாபநோக்கம் காரணமாக மனித சமுதாயம் பேதமுற்றும் பிளவு பட்டும் உள்ளது. அதே நேரத்தில் நம்முடைய பண்பாடு எப்பொருளையும் "எடுத்துக்கொள்" என்று கூறக் கூடியதல்ல, "விட்டுக்கொடு, கொடுத்து செம்மை பெறு" என்று கூறக் கூடிய ஒரு பண்பாடு ஆகும் ஜகத்குருவைப் போன்றோர் தருகிற ஒளி நம்மையெல்லாம் வழி நடத்திச் செல்ல வேண்டும் நம்முடைய சொற்களையும், செயல்களையும் நல் வழிப்படுத்தட்டும் ஒரு நாட்டை உருவாக்குவது நம் போன்ற சாமானிய மக்களின் சொற்களும் செயல்களுமேயாகும இந்த மங்கல கரமான நாளில் ஜகத்குரு போன்ற மகான்களின் அருள் உள்ளம அளிக்கின்ற பண்பு நெறிகளின்படி நாம் நடக்க உறுதி கொள்வோம்

பக்தி சேவை இவ்விரண்டையும் நமது இரண்டு அம்சக் கொள்கையாகக் கொள்ளவேண்டும் என்று பெஜாவர், மடாதிபதி இங்கே பேசினார் இதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன் பக்தி இன்றி சேவை இல்லை சேவையற்ற பக்தியும் பயன் தராது. ஒரு காலத்தில் - மூடநம்பிக்கை என்று வர்ணிக்கப் பட்டதெல்லாம்

(அடுத்த பக்கம் பார்க்க)

காஞ்சி காமகோடி பரமாச்சார்யாள் அருளியது

ஜன்மாவின் பலன்

ஜன்மம் எடுத்தது ஜன்மத்தைப் போக்கிக் கொள்ளத்தான். இப்படித்தான் சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

மானவ ஜந்மந: கிம் பலம்? நாம் ஜன்மம் எடுத்தது எதற்காக? சம்பாதிக்க வேண்டியது. சாப்பிட வேண்டியது, ஒவ்வொரு நாளும் ஒரு துக்கத்தை அனுபவித்துவிட்டுக் கடைசியில் சாகவேண்டியது தானா? அப்படியென்றால் இப்போதே செத்துப் போகலாமே? ஜன்மத்தைப்போக்கிக் கொள்ளவே ஜன்மம் பயன்படவேண்டும்.

மனிதனைத் தவிர மிருகங்களெல்லாம் குறுக்கே வளர்ந்திருக்கின்றன மனிதன் ஒருவன்தான் நெடுங்க வளர்ந்திருக்கின்றான். குறுக்கே வளருவதை விட்டு மேலே பார்க்க வேண்டும் என்று ஸ்வாமி மனிதனை வைத்திருக்கிறார்.

உயர்ந்து மேல் நோக்கி வளர்கிற மனிதன் மற்றப் பிராணிகளைக் காட்டிலும் அதிகமான சுகத்தை அனுபவிக்கலாம். ஆனால் துக்கத்தைத்தான் நாம் அதிகம் அநுபவிக்கிறோம். மிருகங்களுக்கு நம்மைப் போல இத்தனை காமம், இத்தனை கவலை, இத்தனை துக்கம் இத்தனை அவமானம் இல்லை பாவங்களைச் செய்து துக்கங்களைத்தான் நாம் அனுபவிக்கிறோம்.

மிருகங்களைக் காட்டிலும் மனிதனுக்குத்தான் ஸ்வாமி புத்தியை அதிகமாகக் கொடுத்திருக்கிறார். இந்த உயர்ந்த புத்தியை வைத்துக் கொண்டு மனிதன் கஷ்டப்படுகிறான். துக்கப்படுகிறான் பிறந்து விட்டதனால் இவ்வளவு கஷ்டம் பிறவாமல் இருப்பதற்கு என்ன செய்யவேண்டும்?

பிறப்புக்குக் காரணம் என்ன? நாம் ஏதோ தப்புப் பண்ணியிருக்கிறோம். அதற்குத் தண்டனை இத்தனை கசை அடி அடிக்கவேண்டும் என்று விதித்திருந்தால் இந்த உடம்பை எடுத்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுகிறோம். பத்து அடி ஆனபிறகு இந்த உடம்பு போய்விட்டால் இன்னொரு உடம்பு

(முன் பக்கத் தொடர்ச்சி)

இன்றுமாறிவருகிறது நமது மகான்களும் ரிஷிகளும் சொன்ன உயர் பண்புகள் வாழ்க்கை நெறிகள் உன்னதமானவை என்பதை உலகின் மிகப் பெரிய விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளத் தொடங்கி இருக்கிறார்கள். பக்தி நெறியோடு கூடிய சேவையில் நாம் எல்லாம் ஈடுபடுவதே ஜகத்குரு சங்கராச்சாரிய சந்திரசேகரேந்திர ஸ்வாமிகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாகும்.

தகவல் : மூர்த்தி, சென்னை

வருகிறது பாக்கியை அந்த உடம்பு வாங்குகிறது. காமத்தினுலே, பாவத்தை செய்ததனுலே ஜன்னம் வந்தது காரியம் எதுவுமே பண்ணு மலிருந்துவிட்டால் ஜனனம்இல்லை

கர்மண: கிம்பலம்? கர்மாக்களைச் செய்வதற்குக் காரணம் என்ன? 'ராக'த்தினுல் செய்கிருேம்,கோபத்தினுலே பல பாவங்களைச் செய்கிருேம். கோபத்துக்குக் காரணம் ஆசை, காமம், காரியத்தை ஒழிக்க வேண்டுமானுல் முதலில் காமத்தை ஆசையை ஒழிக்கவேண்டும் பற்று தலை நிறைய வளர்த்துக்கொண்டு காரியம் செய்யாமல் இருப்பது என்ருல் முடியாது பற்றை ஒழித்து விட்டால் பாவம் செய்யாமல் இருக்கலாம்.

ஆசைக்குக் காரணம் என்ன? நம்மைத்தவிர இன்ெனுன்று இருப்பதனுலே ஆசை வருகிறது.

நம்மிடம் நமக்கு ஆசை வராது. இரண்டாவது ஒன்று இருப்பதாக நினைக்கும்போதுதான் ஆசை வருகிறது இரண்டு இருக்கிறது என்ற புத்தி இருப்பதற்குக் காரணம் மித்யாஞானம் மித்யாஞானம் என்பது பொய்யான அறிவு இந்த புத்தி போய்விட்டால் எல்லாம் ஒன்று என்ற தத்துவம் புரியும். ஒன்று தான் என்ற உண்மை ஞானம்தான் வந்தாகவேண்டும்.

வேதம் என்ன சொல்லுகிறது? சாந்தமாகிய சிவமே இரண்டற்ற வஸ்துவாக எல்லாமாக இருக்கிறது சிவஸ்வரூபந்தான் பரப்ரும்மம். இது மாண்டூக்ய உபநிஷத் வாசகம் எல்லாமாய் அல்லதுமாய் எங்கும் நிறைந்திருக்கிற பொருள் ஒன்று அதுவே பரமாத்மஸ்வரூபம் என்று அத்வைதிகள் கண்டார்கள்.

"நீயாகவே நான் ஆகிவிடுகிறேன். நான் என்னுடையது என்பதையெல்லாம் உன்னிடத்தில் கரைத்து விடுகிறேன். நான் என்ற உணர்ச்சி போய் உன்னிடத்தில் கலந்துவிடுகிறபோது ஒரேபொருள் தான் இருக்கிறது. அது நீயே! இவ்வாறு ஆதிசங்கரர் தேவியைப் பார்த்து ஸ்தோத்திரம் செய்கிருர் இம்மாதிரி இரண்டாவது பொருள் இல்லாமல் எல்லாம் பரமாத்ம ஸ்வருபத்துடன் ஒன்றுபட்டால் அங்கே ராகம் இல்லை,கர்மம இல்லை ஜன்மம போய்விடுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு சமதிருஷ்டி தானுகவே வந்து விடுகிறது அதுதான் ஜன்மாவின் பலன்

தொகுப்பு : ஏ எஸ்.எம். சென்னை



கடவுள் உண்டு

கடவுள் உண்டு கடவுள் உண்டு காணுலகக் கோவிலில்
கடவுளின்றி உடலுயிர் கலந்த வாழ்க்கை இல்லையே

இல்லை என்பார் உள்ளத்தும் இருக்கிறேன் என்றியம்புமே
அல்லலுற்ற அன்பர் தம்மை ஆதரிக்கும் ஜோதியே

கடலும் வானும் காற்றும், கதிரும் கார் - மழையும் பயிர்களும்
சடமும், சித்தும் சகல உயிரும் சக்திக் கதிரால் வளருமே

திரைப் படத்துத் தீபம்போல சீவனுக்குள் சிவமயம்
கரை விளக்குப்போல வாழ்வுக் கப்பலுக்கு காந்தத்தீ

தவமுனிவர் சித்தரெல்லாம் தஞ்சமென்று வணங்குவார்
புவிமுழுதும் தபன ஜோதி பொங்குவது மங்கலம்

அருக்கடவுள் அருக்கனுக அகிலவுலகும் வாழவே
உருக்கொண்டொளிரும் உண்மைக் காணீர் உண்டுகடவுள்
உணருவீர்

கடவுளுண்டு கடவுளுண்டு காணுலகக் கோவிலில்
மடவிருள்சூழ் மனதைப் பாச மாசகற்றிக் காண்மினே

—கவியோகி சுத்தானந்தபாரதி

அருண்குமார்—லலிதா திருமணம்

பத்திரிகை உலகிறகு நன்கு அறிமுகமானவர் கோவை ஸ்ரீ. O S. ராமஸ்வாமி அவர்கள நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக OSR விளம்பர ஏஜென்ஸி ஸ்தாபனத்தைத் திறம்பட நடததி வருகிறா. குன்டுசிககுப பல வருடஙகளாக ஆதரவளித்து வரும எனது அருமை நணபர் திரு. OSR அவாகளின அன்பு மகன சிரஞ்சீவி ஆர் அருணகுமாருககும், சௌபாககயவதி பி. கே. லலிதாவுககும 1—5—1983 ந தேதி களளிக்கோட்டையில் மிகச சிறபபாக திருமணம நடை பெறறது. கோவையில் 4—5—1983ல நடைபெறற திருமண வரவேறபு விழாவிறகு பத்திரிகை உலக அனபாகளும, வியாபார பிரமுகாகளும வந்திருநது வாழ்த்திச சென்றாாகள. அருண் - லலிதா புது மண தமபதிகடகு முருகன திருவருளை வேண்டி நலலாசி கூறி வாழ்த்துகிறேன.

—ஆசிரியா

வேதாந்தம்

வே. சு. ஸ்ரீதரன்

வேதாந்தம் பேசுவது என்றாலே சிலருக்குப் பிடிப்பதில்லை சிலர் அதை வறட்டு வேதாந்தம் என்றும் கவைக்குதவாதது என்றும் சொல்கிறார்கள்.

உண்மை என்னவென்று பார்ப்போம். வேதாந்தம் என்பது என்ன?

வாழ்க்கையில் பல்வேறு அம்சங்களையும், மனிதர்களின் இயல்புகளையும் புரிந்துகொண்டு அதன்படி நடப்பதும், சிந்திப்பதும் பேசுவதும் தான் வேதாந்தம் இன்னொரு வேதாந்தமும் இருக்கிறது. அது நம் வேத, உபநிடதங்கள் கூறும் தத்துவார்த்த விளக்கங்களை ஆதாரமாகக்கொண்டது. அதைப் புரிந்துக் கொள்ளக்கூடிய அறிவுக் கூர்மை மிகச் சிலருக்கே உண்டு ஆனால், அனுபவ அடிப்படையில் பேசும் வேதாந்தங்கள் பாமரர்களுக்குக் கூட நன்றாகப் புரியும் காரணம், அவை எல்லோருடைய வாழ்க்கையுடனும் சம்பந்தப்பட்டவை,

வேதாந்தம் பேசுபவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒரு வேறுபாடு உள்ளது. வேதாந்தம் பேசுபவர்கள் அனுபவத்திலிருந்து நல்லபடிப் பிழைகளையும் பாடங்களையும் கற்றுக் கொள்ளுகிறார்கள்

அது மட்டுமல்ல, அவர்களுக்கு எந்தெந்த சூழ்நிலைகளை, மனிதர்களை எப்படியெப்படி அணுக வேண்டும், எந்தெந்த விளைவுகளையும் முடிவுகளையும் எப்படியெப்படி ஜீரணித்துக் கொள்ள வேண்டும். கிரகித்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் பழக்கமாகிவிடும் ஒரு பக்குவம் வந்துவிடுகிறது. இந்த வேதாந்த உள்ளத்தின் மிகப் பெரிய பயனாகும்.

உதாரணமாக, ஆசை அறவே ஒழிய வேண்டும். அப்போதுதான் இன்பநிலை உண்டாகும் என்று ஒரு வேதாந்தி கூறுகிறான் ஆனால் வேதாந்தத்தை வெறுப்பவர்கள் அவனை உலகத்தை அனுபவிக்கத் தெரியாத முட்டாள் என்றும், வாழத் தெரியாதவன் என்றும் கூறுகிறார்கள். ஆனால் எது சரி?

நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். ஒரு பொருள் தனக்குக் கிடைக்கவில்லை என்ற காரணத்தால, ஒரு குறிப்பிட்ட ஆசை நிறைவேறவில்லை என்ற வருத்தத்தால் எத்தனைபேர் இந்த உலகத்தில் இருக்கிற இன்பத்தையும் இழந்து தவிக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிந்ததே

வேதாந்தம் பேசியவன் தவறாகவா சொன்னான்? அவன் மிகச் சரியாக கூறியிருக்கிறான். நடைமுறை வாழ்க்கையை ஆழமாகச் சிந்தித்தன் விளைவே இந்த வேதாந்தம் ஆகவே வேதாந்தம் மனிதனுக்கு நன்மையே செய்கிறது. மனப் பக்குவத்தையும், சரியான கண்ணோட்டத்தையும் தரும் நல்ல மருந்துதான் வேதாந்தம்.

பாசம் என்பது மனிதனை பந்தப்படுத்துகிறது என்று வேதாந்தி கூறுகிறான். இது எப்படி என்பது அனுபவத்தில் தெரிகிறது நெருக்கமானவர்கள் காரணமாகப் பிரிவு, கோபம், சோகம் இன்னும் எத்தனையோ நிலைகளுக்கு ஆட்படுகிறான்.

நம நிலைகளைத் தெரிந்துகொண்டு தானே வேதாந்திகள் இப்படியெல்லாம கூறியிருக்கிறார்கள்? ஆனால், இந்தக் காரணங்களுக்காக மனிதன் துறவிபோல் வாழ வேண்டும் என்பதல் அர்த்தமில்லை. மனதுக்கு

பண்பட்ட நிலை வரவேண்டும் அந்த பண்பட்ட நிலை நம்மை வாழ்வுக்கு தகுதியுடையவர்களாகவும், திறமை உடையவர்களாகவும் ஆக்குகிறது. இது நமக்கு நன்மை தருவது தானே ?

இதேபோல் வேதாந்தமென்பது வயது முதிர்ந்தவர்களுடைய பேச்சென்றும் இளையவர்கட்குத் தேவை இல்லாததென்றும் ஒரு கருத்து நிலவுகிறது நல்ல உண்மைகளைப் புரிந்துகொள்வதற்கு வயது என்ற வரையறை இல்லை

பிரச்னைகளைச் சமாளிப்பதற்கும், துன்பங்களை வெல்வதற்கும் வேதாந்த உணர்வுதான் மனிதனுக்கு உதவுகிறது மற்றவர்கள் திணறுகிறார்கள், தவிக்கிறார்கள். ஆனால் வேதாந்திகள் வாழ்க்கையை நன்றாக அறிந்தவர்கள். வெறும் மனிதர்களல்ல மற்றவர்களைவிட அவர்கள் புத்திசாலிகள். உண்மையான அறிவும் அவர்களுக்குத்தான் இருக்கிறது

வேதாந்தத்தில் இன்னும் அடுத்த படியாய் இருப்பது ஆத்ம விசாரம், பிரும்ம ஞானம், சொரூப ஞானம் போன்றவை. அவை இன்னும் அதிகமாக மனிதனின் பெரிய அளவிலான பக்குவ நிலையைத் தருகின்றன ஆகவே வேதாந்தம் என்பது எல்லோருக்கும் பயன்படக் கூடியதே தவிர தேவையற்ற திலலை உலகம் நிலையற்றது, வாழ்வு நீர்க்குமிழி போன்றது என்பது போன்ற வாக்கியங்கள் நம்மை உண்மையை உணர வைப்பதற்காகவும் அதனால் இன்னும் சிறந்த லட்சியங்களுடன் நம வாழ்வை அமைத்துக் கொள்வதற்காகவும் ஏற்பட்டவை இவைகள் சித்தர்கள் பேசிய வேதாந்தங்கள் மட்டுமல்ல, உண்மையாய் என்றும் இருப்பவை

ஒரே ஒரு முக்கிய விஷயம் வேதாந்தம் என்பதை வாயளவில் மட்டும் வைத்துக் கொள்ளாமல், நடைமுறையில் அவைகளை ஒப்பு நோக்கி அதனால் வரும் பண்பட்ட நிலையில் வாழ்ந்து அதே சமயத்தில் செய்கைகளிலும் அநுபரிணமிக்கும் படிச் செய்ய வேண்டும். அதுதான் சிறந்தது.

உங்கள் பக்கம்

கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் ஆரம்பித்துள்ள உபாசனை என்ற கட்டுரை மிகவும் சிறப்பாக உள்ளது. இவருடைய எழுத்துக்களைப் பத்திரிகையில் பார்த்து பல நாட்களாகின்றன. தொடர்ந்து வரும் என்ற குறிப்பைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி ஏற்படுகின்றன. குண்டூசிக்கு எமது பாராட்டுக்கள்

ஏழுமலை அடிகள்—சென்னை-19.

காஞ்சி வாழ் அன்பர்களாகிய எங்களுக்குக் கருணைக் கடவுள் குமர கோட்ட குமரன் திருஉருவப் படம் இந்நாள்வரை கிடைக்காமல் இருந்த குறையைப் போக்கி யாவரும் பயனடையும்படி வண்ணத்தில் சென்ற இதழ் அட்டையில் போட்டு வெளியிட்ட தங்களுக்கு நெஞ்சு நிறைந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

வெ. ஸ்ரீனிவாஸன்—ஆன்மீக நற்பணி மன்றம். காஞ்சிபுரம்

கவிசேரியாரின் வியாச பாகவதம், படிக்க-படிக்க அமுதமாயுள்ளது. நான் தொடர்ந்து ஏழு வருடங்களுக்கும் மேலாக படித்து வருகிறேன். பக்திக்குப் பாகவதம் இலக்கணமல்லவா? அதுவும் கவிசேரியாரின் பாணியே தனிப் பாணியல்லவா? பெரியவருக்கு என் வணக்கத்தைச் சொல்லுங்கள்.

நாகரத்தின தீக்ஷிதர்—சிதம்பரம்.

சென்ற இதழ் அட்டைப்பட விளக்கம் "காஞ்சி குமர கோட்ட குமரன்" கட்டுரை நல்ல விளக்கமாக சரித்திரகால சான்றுகளுடன் எளிய நடையில் எழுதியுள்ளது மிகவும் பாராட்ட வேண்டும். மேற்படி கோயிலின் செயல் அலுவலர் திரு தா. காசிநாதன் அவர்களுக்கு ஆன்மீக அன்பர்கள் சார்பில் நன்றி செலுத்துகிறேன்

தேவகி-சோமசுந்தரம்—கோவை

வேத மந்திரங்களில் சிறப்பான இடம் பெற்றுள்ள புருஷ ஸூக்தம் ஆன்மீக அன்பர்களுக்கு பயனுள்ள நல்ல விஷயம் அந்த சப்தம் கேட்டாலே லோகம் நன்மை அடையும், இப்புனித மந்திரத்திற்கு தமிழாக்கம் செய்துள்ள திருச்சி கவிதாமணி திரு. செட்டியார் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் போதாது நாராயண ஸூக்தம் வெளிவந்தவுடன் பாருங்கள், தமிழகத்தில வானம பொழிந்து நாடு செழிக்க வகை செய்யுமென்பதில் சந்தேகமே கிடையாது.

சுந்தரம் அடிகளார்—ஈரோடு

குண்டூசியில் வரும் எந்த ஒரு சின்ன விஷயமாயிருந்தாலும் படிப்பவர்களை சிந்திக்க வைக்கிறது நாத்திகனையும் ஆத்திகனுக்கிவிடும் என்பதில் ஐயமில்லை

புவனேஸ்வரி—திருப்பூர்.

மண் குடிசை

குடிகெடுக்கும் குடியிருந்த போதும் கூடக்
குடிக்காமல் ஆண்டுவந்த இராச ராசன்
உடல்கெடுக்கும் மூப்புவந்து மொய்த்துக் கொண்ட
உயிராயி என்கின்ற கிழவி தன்னைப்
படைநடக்கும் வாள்வீரன் தனைய னுப்பிப்
பத்திரமாய் அழைத்தோடி வருக வென்றான்
கடல் எடுக்கும் வெண்முத்து கரைக்கு வந்து
கடைவீதி வந்தாற்போல் கிழவி வந்தாள்.

யாரென்று தெரிகிறதா என்னை என்று
யாப்பறிந்த சோழமன்னன் கேட்க லானான்,
பேரென்று கேட்டால்தான் தெரியா தென்பேன்.
புவியரசர் தெரியாதே என்று சொல்வேன்!
பாரென்று சொல்லாமல் போனால் கூடப்
பார்வையில்லை எனக்கென்றே யானால் கூட
ஊரென்றே ஊராளும் அரச ரென்றே
உயிராயி நானறிவேன் என்று சொன்னாள்.

அரசினையும் அரசாளும் அரச னையும்
அறிந்துவைத்துக் கொண்டிருக்கின் றாயே! அந்த
அரசனான நான்போடும் கட்ட ளைக்கே
அடிபணிந்து நடப்பாயோ என்று கேட்டான்.
சிரசெனினும் அரசுக்குத் தருதல் வேண்டும்
சிறப்பெனினும் அவ்வரசால் பெறுதல் வேண்டும்.
மூரசெனவே மூப்பெய்தி அறுந்து விட்டேன்
முடிவேந்தே! எனக்கென்ன ஆணை? என்றாள்.

மண்ணெல்லாம் மண்ணுவ தில்லை, சோழ
மண்ணைப்போல் அச்சோழ மண்ணின் மீது
கண்ணெல்லாம் வியக்கின்ற கோயில் ஒன்றைக்
கட்டவேண்டும். அக்கோயில் தன்னை நாட்டுப்
பெண் ணெல்லாம் வியக்கின்ற தாயே உன்றன்
பிழைகுடிசை இருக்கின்ற இடத்தி லேதான்
எண்ணெல்லாம் பார்க்கின்ற சோதி டர்கள்
இயம்பியதைப் போன்றேதான் கட்ட வேண்டும்.

ஆகையினால் உன்குடிசை தன்னைத் தாயே!
அவ்விடத்தில் இல்லாமல் அகற்ற வேண்டும்,
வாகையினால் மகிழுபவன் எனினும், இந்த
வன்முறைக்கு வருந்துகிறேன் என்றான் மன்னன்
கூகையினால் அஞ்சுகின்ற குருவி போலக்
கூன்கிழவி கிடுகிடென நடுங்கலானாள்.
தோகையினால் அழகுற்ற மயிலைப் போலும்
துணைவிகொண்ட மன்னவரே வேண்டாம் என்றாள்.

மாற்றுவீடு வேண்டுமானால் எனது சொந்த
மாளிகையில் தருகின்றேன் என்றான் வேந்தன்
சோற்றுநாடு தந்தாலும அரசே என்றன்
சொந்தமண்ணுக் குடிசையைப்போல் வருமா என்றாள்
ஆற்றோடு போனாலும் போவேன் தோணி
அளித்தாலும் ஏறமாட்டேன் என்கின் றாயே!
சாற்றிவிடு நீமறுப்புக் கூறு தற்குச்
சரியான காரணத்தை என்றான், மன்னன்.

மணமுடித்தேன் என்குடிசைக் குள்ளே, அப்பால்
மரணத்தை அதிலேதான் முடிக்க வேண்டும்
குணமுடித்த மன்னவரே! இந்த ஏழைக்
குரலுக்குச் செவிசாய்த்தே அருள்க! என்றாள்.
பிணமுடித்த இடத்தினிலே கோவில் செய்தல்
பிழையில்லையா மூதாட்டி? என்றான், மன்னன்
தணல்முடித்த குழியிலே எனைப்போட் டாலும்
தாண்டமாட்டேன் ஓரடியும் எங்கும் என்றாள்,

மரணத்தைப் பெரிதாக நினைத்தாய், கோயில்
மாண்புதனைப் பெரிதாக நினைக்க வில்லை.
தருணத்தை விடுவதிலே அர்த்த மில்லை
தாய்க்குலமே பழித்தாலும் கவலை யில்லை
அருணத்தைப் பாரமுன் குடிசை தன்னை
அகற்றிடுமா(று) ஆணையிடு கின்றேன் என்றான்
சரணத்தை அல்லாமல் என்னால் என்ன
சாதிக்க முடியுமெனக் காலில் வீழ்ந்தாள்.

— பண்ணுருட்டி பரமசிவன்

பாபா சொன்ன கதைகள்

14

மகான்களின் போதனைகள்

ரிஷிகள் — மகாத்மாக்களுக்கு சகல தேசங்களிலும் மரியாதைகளும், கௌரவங்களும் அடையும் வாய்ப்புண்டு அவர்கள் மிகச்சுலபமான வழிகளின் மூலமாக சத்யவழிகளை சாமான்ய மானிடர்களுக்கு உணரச் செய்து, நிலையான ஆனந்தத்தை அடையும் மார்க்கத்தை காட்டுகிறார்கள்.

மேலே கூறிய மகான்களில் ஸ்ரீ ரமண மகரிஷி என்பவர் மிகப் பிரசித்தியுடையவர். அவர் தென்னிந்தியாவில் வாசம் செய்து வந்தார். இந்தியாவில் பல பாகங்களிலிருந்தும் மற்றபடி பல தேசங்களிலிருந்தும் பல பக்தர்கள் அவரிடம் வந்து அவரை தரிசனம் செய்து ஆசிகளை பெற்று சென்றுகொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அவர், தன் ஆசிரம வாசிகளின் பொருட்டு காய்ந்த இலைகளை ஒன்றுடன் ஒன்ருய்ச் சேர்த்து உணவருந்த சௌகரியமான இலைகளாகத் தைத்துக் கொண்டிருந்தார். அப்போது அவரிடமிருந்த பக்தர்களில் ஒருவர் சிறு வயதுடையவர், அவர் சமீபமாய் வந்து, பகவான்! நீங்கள் வீணாக பயனில்லாமல், இப்படி இலைகளை தைப்பதினால் மிகவும் பவித்ரமான உங்கள் நேரத்தை வீணாக்கி வருகிறீர்களே? எனக் கேட்டான்.

ரமணமகரிஷிசிரித்துக்கொண்டே அவரைப் பார்த்து, ஒருவருக்குப் பயன்படும்படியான எந்த வேலையையும் சரியானபிரகாரம்செய்தால் காலம் வீணாவதில்லை மறுபடி அந்த காலத்தை வீணாக கழிப்பதென்பதல்ல அப்பனே! நீ செய்யும் ஒவ்வோர் வேலையின் மூலம் நீ எவ்வளவோ நல்ல விஷயங்களை கற்றுக் கொள்ளலாம். இந்த இலைகளைத் தைப்பதையே ஓர் உதாரணமாகப் பார்க்கலாம்.

இந்த தைத்த இலைகள் பசியுள்ளவர்களுக்கு சாப்பாடு வைத்து சாப்பிடப் பயன்படுகிறது சாப்பாடு முடிந்ததும் அந்த இலைகளை வெளியில வீசிவிடுவோம அந்த வீசப்படும் இலைகளைப் போன்றதே நம் ஒவ்வொருவரின் திரேகம் என்பதை நினைவில்கொள்ளவேண்டும நாமும் பயனுடையவர்களாக வாழ்வதற்கு வியாதியஸ்தர்களுக்குச் சேவை செய்தாலே எவ்வளவோ இந்த உடல் உபயோகப்படுகிறது.

சுயநல எண்ணத்துடன் வாழ்பவன் நூறு வயதுவரைவாழ்ந்தாலும அது வீணான வாழ்க்கையாகவே முடியும் அந்தவிதமான வாழ்க்கை ஆடுகளைப் போல் தின்று–திரிந்து–உடலை வளர்த்தினால் அதை மிருக வாழ்க்கைக்கு ஒப்பிடலாமல்லவா? என உபதேசித்தார்.

மற்ருேர் நாள் ரமண மகரிஷி சமையலறையின் சமீபமாய் சில அரிசி தானியங்கள் சிதறிக் கிடந்த

ஜதப் பார்த்தார். அதை உடனே அவரங்கு உட்கார்ந்து அவற்றை ஒவ்வொன்றாய் பொறுக்கி ஒன்றுசேர்த்துக் கொண்டிருந்தார். அதை பார்த்த சில பக்தர்கள் அவர் சுற்றிலும் சூழ்ந்து நின்று விசித்ரமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பகவானுடைய அனுக்கிரகத்தின் பொருட்டு தன்னுடைய சகலத்தையும் தியாகம் செய்து வீட்டைவிட்டு வந்த மகரிஷி, ஒரு பிடி அரிசிக்காக பொறுக்குவது யாவரையும் ஆச்சரியப்பட செய்துவிட்டது. அவர்களில் ஒருவன், பகவான் சமையல் வீட்டில் மூட்டை மூட்டையாக அரிசி இருக்கிறது இந்த கொஞ்சம் அரிசிக்காக தாங்கள் இவ்வளவு சிரமப்படுவது எதன் பொருட்டு எனக் கேட்டான்.

குனிந்து பொறுக்கிக் கொண்டிருந்த ரமணர் தலை நிமிர்ந்துஇந்த கொஞ்சம் அரிசியை மட்டுமே உங்கள் கண்கள் பார்க்கிறது. ஆனால் அந்த அரிசிக்குள் என்ன உள்ளது என்பதைப் பார்க்கப் பிரயத்தனப் படவேண்டும் என்றார்.

பூமியை உழுது விதைகளை நட்ட விவசாயியின் சிரமம் எப்படி இருந்திருக்கும்? மறுபடி சமுத்திர தண்ணீர் சூரியனின் சூட்டினால் மேகங்களாக மாறி மழை, குளிர் காற்றும் வெளிச்சத்தினாலும் மண்மிருதுவாகி விவசாயி நட்ட தானியங்கள் ஊறி அதற்குள் உள்ள ஜீவகணங்களைப் போன்றவைகளே! இதோ! நான் பொறுக்கிக்கொண்டிருக்கும் தானியங்களுக்குள்ளும் உள்ளன. இதை வீணாக்கினால்பகவானுடைய கை—அடிக்க வருவதைப் போல் உணருகிறேன். அதனால் அதைக் கால்களால் மிதித்தால் தோஷம்.

அவை நமக்கு கீழே சித்தி வேலைக்கு உதவுவதில்லை என நினைக்கலாம். ஆனால், பக்ஷிக்களுக்காவது பயனடையும்படி செய் என்றார்.

மகாத்மாக்கள் எப்போதும் ஆனந்தமயமான ஜீவிதத்தை நடத்தும் வழிமுறைகளையே காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நாம் அவ்வப்பொழுதும் அந்தவிதமான மகரிஷிகளின் சன்னிதானத்தை நாடி அடைவதே மேன்மையானது.

ரிஷிகள் நம்மைப் போன்ற மானிடர்களே. ஆயினும், அவர்கள் அஞ்ஞானத்தில் அலைகிறவர்களுக்குநல் வழிகாட்டி திருத்துவதால் அவர்கள் யாராலும் கௌரவிக்கப்படுகிறார்கள். மானிட வாழ்க்கையே எப்போதுமே மற்றவர்களுக்கு உபயோகப்படும் படியாக இருக்க வேண்டும்.

தொகுப்பு: R. பாலபட்டாபி,
உடுமலைப்பேட்டை.

குடும்பத்திற்கு தேவையான எல்லாவித எவர்சில்வர், பித்தளைப் பாத்திரங்கள்
பிரஸ்டிஜ் குக்கர், முதலிய சாமான்கள் யாவும் நம்பிக்கையான விலையில்
எங்களிடம் கிடைக்கும்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

எல். ராமசாமி நாடார் & பிரதர்

49, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காட்சி சாலைகள்:

22, பைக்ராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

5, ராமகிருஷ்ண மடம் சாலை, (லஸ்) சென்னை-4

தொழிற்சாலை:

38, V. R. பிள்ளை தெரு, சென்னை-5.

நாடகமே உலகம்

பகவானுடைய சிருஷ்டியில் மனிதனும் ஒருவன். இவன் பிறக்கும் போதே இவனுடைய சரித்திரமும் எழுதப்பட்டு விடுகிறது. இதைத் தான் தலையெழுத்து என்கிறார்கள். இந்த சரித்திரத்தை முன்னதாகத் தெரிந்துகொள்ள முடியாது. இவனுடைய வாழ்க்கை முடிந்தபிறகு தான் இவனது முழு சரித்திரத்தையும் தெரிந்துகொள்ள முடியும்.

பிறக்கும்போதே இவனுடைய எதிர்காலம் வாழ்க்கை முறை, முடிவுக்காலம் எல்லாமே நிர்ணயிக்கப் பட்டுவிடுகிறது இதை யாராலும் மாற்ற முடியாது இவனும் என்னென்னவோ பிளான் போடுவான், எப்படியெல்லாமோ முயற்சி செய்வான், நேர்மையான வழி, குறுக்கு வழி எல்லாவற்றிலும் நுழைந்து பார்த்துவிடுகிறான் ஆனாலும் இவன் நினைத்தபடி எதுவும் நடப்பதில்லை.

எல்லாமே அவன் நினைத்தபடி தான் நடக்கும். அதனால் மகான்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் நீ வீணாக மனதை அலையவிடாதே, வீணாகப் பிரயாசைப் படாதே, அதிகமாக ஆசைப்படவும் வேண்டாம், அதிகமாக துக்கப்படவும் வேண்டாம், எது கிடைத்ததோ அதை வைத்துக்கொண்டு திருப்தி படு, எல்லாம் அவன் செயல் என்று விட்டுவிடு,

உன்னுடைய தன்தர்மத்தைக் கடைப்பிடித்து அதன்படி நடந்து கொள், கோபம், ஆசை, அகங்காரம் இவைகளை விட்டுவிடு, நல்ல காரியங்களைச் செய், தானதர்மங்களைச் செய், பகவானை வழிபடு. முக்திக்கு வழியைத் தேடு என்று சொல்லியிருக்கிறார்கள்.

உன் எதிர்காலத்தைப் பற்றி யோசித்துக்கொண்டிராதே நடக்க வேண்டியது நடக்கும். காலத்தை வீணாக்காதே! ஒவ்வொரு வினாடியும் உன் ஆயுள் குறைந்து கொண்டே வருகிறது. அதை யாருமே தடுத்து நிறுத்த முடியாது.

பிறப்பு என்பதும், மரணம் என்பதும் நம் இஷ்டத்தைப் பொறுத்தது அல்ல! எல்லாமே ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ள ரகஸ்யம். இதை மாற்றவே முடியாது,

அதனால் அதற்குள் என்ன நல்ல காரியம் செய்யலாம் என்பதை யோசித்துக்கொள். அதை உடனே செய்துவிடு ஏமாந்து விடாதே! காலத்தை வீணாக்காதே. பகவானை சரணடைந்து நற்கதிக்கு வழிதேடிக் கொள்.

—வைரம்

எப்போதும் பொறுமையிழந்து சினப்பவன் வெறுக்கப்படுகிறான்;
தகாத சமயத்தில் சினமுறுபவன் அலக்ஷியத்திற்கு ஆளாகிறான்;
உசிதமான சமயத்தில் சினம் காட்டுபவன் மரியாதை செய்யப்படுகிறான்.

—சத்திய சாய்பாபா.

தொகுப்பு · பாட்டா D. ராகவன், கோவை.

லக்ன பலன்

குண்டூசி ஜோஸ்யர்

(16 - 6 - 83 முதல் 15 - 7 - 83 வரை)

மேஷம்

பணமுடை ஏற்படும் உறவினர்களால் நன்மை உண்டாகி மன அமைதியேற்படும். சிலருக்கு சிறு பிரயாணம் மேற்கொள்ள நேரிடும். வியாபாரிகளுக்கு மேன்மையான பலன் எதிர்பார்க்கலாம். உத்தியோகஸ்தர்கள் புதிய பொறுப்புகளை ஏற்க வேண்டிவரும் அரசியல் வாதிகளுக்கு நெருக்கடியான சூழ்நிலை உண்டாகும். சிலருக்கு புதிய வாகனயோகம் உண்டாகும் மாணவர்கள் கல்வியில் சிறப்புற்று விளங்குவார்கள். பெண்கள் தங்கள் உடல் நலத்தில் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். தொழிலதிபர்கட்கு நன்மையே உண்டாகும்.

அதிர்ஷ்ட தினங்கள் : ஜூன் 16 17, 19, 29, ஜூலை 7, 8, 9, 13.

ரிஷபம்

சிலருக்கு எதிர்பாராத செலவுகளும், நஷ்டங்களும் ஏற்பட்டாலும் அதிகமாக பாதிப்பு இருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவுடன் பதவி உயர்வு ஏற்பட வாய்ப்புண்டு மனை, நிலம், வீடு சேர்க்கையும் சிலருக்கு உண்டாகும். மாணவர்கள் விளையாட்டில் கவனமுடன் இருத்தல் அவசியம். அரசியல்வாதிகள் செல்வாக்கு பெறலாம். வியாபாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் எதிர்பாராத அதிர்ஷ்டம் அடைய வாய்ப்புண்டு. பெண்களுக்கு உடல் நிலை பாதிக்கப்படலாம்.

அதிர்ஷ்ட தினங்கள் : ஜூன் 25 30, ஜூலை 1, 11, 13.

மிதுனம்

பொருளாதார நிலை திருப்திகரமாகயிருக்கும். சிலருக்கு புண்ணிய ஸ்தல யாத்திரையும் புராணகாலட்சேபங்களைக் கேட்கும் வாய்ப்பும் ஏற்படும். உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரிகளால் நன்மையும் அரசாங்க ஆதரவு ஏற்படும் வியாபாரிகளுக்கும் தொழில்துறையில் உள்ளவர்களுக்கும் நல்ல முன்னேற்றமும் லாபங்களும் இருக்கும் மாணவர்கள் கல்வியில் அக்கறையுடன் இருத்தல் அவசியம். பெண்களில் சிலருக்கு குடும்பத்தில் நிம்மதியில்லாமலிருந்து கொண்டிருக்கும். அரசியல் வாதிகள் வெளியூர்ப்பயணங்களை மேற்கொள்ள வேண்டியிருக்தாலும் நல்ல புகழை அடைவார்

அதிர்ஷ்ட தினங்கள் : ஜூன் 23 30, ஜூலை 5, 7, 8, 11, 12.

கடகம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழிலதிபர்களும் வியாபாரிகளும்

நாளடைவில் தொழிலில் வெற்றியும் லாபமும் புகழும் அடைவார்கள். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளின் தொல்லையால் பாதிக்கப்பட்டாலும் முடிவில் மகிழ்ச்சியான சூழ்நிலையையும் மாணவர்கள் படிப்பில் கவனமற்று காணப்படுவர். அரசியல் வாதிகள் தொண்டர்களின் மனஸ்தாபத்திற்கு ஆளாகக் கூடும் பெண்களில் சிலரின் உடல் நிலை காரணமாக மலைவாசஸ்தலங்களுக்கு செல்ல நேரலாம் சிலருக்கு வீடு, நிலம், ஆபரணம்முதலியவை வாங்கும் யோகம் ஏற்படும்.

அதிர்ஷ்ட தினங்கள்: ஜுன் 18, 22, 25, 27, 30, ஜுலை 1, 5, 10.

சிம்மம்

நிறைய வருமானம் வந்தாலும் பற்றுக்குறை இருந்துகொண்டிருக்கும். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்கள் கடுமையாக உழைக்க நேரிடும். குடும்ப வாழ்க்கை திருப்திகரமாக இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு அலைச்சல் ஏற்படினும் அதிகாரிகளின் ஆதரவு இருக்கும். மாணவர்கள் விளையாட்டுகளில் எதிர்பாரா விபத்துக்களைத் தவிர்க்க எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியம். அரசியல் வாதிகளுக்கும் கலைஞர்கட்கும் புகழும் செல்வமும் வந்து சேரும் சிலருக்கு நிலம், பொன், பொருள் ஆகியவை எதிர்பாராமல் வருவதற்கு வாய்ப்புண்டு. சொத்து சம்பந்தமான பேரங்களை சீக்கிரத்தில் முடித்தல் நலம்.

அதிர்ஷ்ட தினங்கள்: ஜுன் 26 2?, 29, ஜுலை 2, 8, 9.

கன்னி

கடன்கள் ஏற்பட்டாலும் குடும்பத்தில் தொல்லைகள் குறைந்து மகிழ்ச்சி தோன்றத் தொடங்கும் சிலருக்கு சுப காரியங்களில் செலவு செய்யும்படி நேரும். புதிய ஆடை ஆபரணம், பூமி முதலிய சேர்க்கையும் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வருமானமும் அதிகாரிகளின் ஆதரவும் ஏற்படும், தொழில் துறையில் உள்ளவர்களுக்கும், வியாபாரிகளுக்கும் எதிர்பாராத தன லாபங்கள் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் மேன்மையுடன் விளங்குவார்கள். அரசியல்வாதிகள் வெளியூர்ப் பயணங்களை மேற்கொள்ள நேரும், சிறிய எதிர்ப்புகள் இவர்களுக்கு இருக்கும் பெண்களுக்கு உடல்நிலை சீராக இருக்கும்

அதிர்ஷ்ட தினங்கள்: ஜுன் 20 23, 29, ஜுலை 1, 7, 9.

துலாம்

பொருளாதார நிலையில் சில புதிய செலவுகளை ஏற்க வேண்டியிருக்கும், உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் ஆதரவுடன் பதவி உயர்வு பெறவும் வாய்ப்புண்டு. தொழில் மற்றும் வியாபாரத் துறையில் நிதானத்துடன் நடந்துகொண்டால்முன்னேற்றமடையத்தொடங்கலாம். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். அரசியல் வாதிகள் புகழுடைய வாய்ப்பேற்படும். பெண்களுக்கு மனநிம்மதியின்றி இருக்கும்.

அதிர்ஷ்ட தினங்கள்: ஜுன் 21 26, 27. ஜுலை 8.

விருச்சிகம்

குடும்ப வாழ்க்கையில் அமைதியிருக்காது. உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் கடுமையான போக்கினால் அல்லல்படுவார்கள். குடும்பத்தை விட்டுப்பிரிந்திருக்கும் சூழ்நிலை ஏற்படலாம். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்குத் தொழிலாளர்களினால் தொல்லை ஏற்பட்டு கடுமையான

முயற்சியால் சமாளிக்க நேரிடும் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவர். கலைத்துறையில் உள்ளவர்களுக்கும் மருத்துவதுறையிலுள்ளவர்களுக்கும் ஓரளவுக்கு வசதியும் வருமானமுமுண்டாகும். அரசியல்வாதிகளுக்கு சுமாரான நிலைமை இருந்துவரும்,

அதிர்ஷ்ட தினங்கள் : ஜுன் 16 26, 27, ஜுலை 1, 3, 5.

தனுசு

பணமுடை நீங்கி குடும்பத்தில் அமைதி இருக்கும், உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவுடன் மகிழ்ச்சிகரமாயிருக்கும், தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு பலமான கஷ்டங்கள் ஏற்படலாம். மன உறுதியால் அவ்வசுரன நெருக்கடியை சமாளித்து விடுவார்கள். மாணவர் கல்வியில் மேன்மையடைவார்கள். பெண்களுக்கு பலவிதங்களில் அனுகூலமான பலன்கள் ஏற்படும். அரசியல் வாதிகள் செல்வாக்கு பெறுவார்கள்.

அதிர்ஷ்ட தினங்கள் : ஜுன் 16 21, 22, 26, 30, ஜுலை 7, 9, 10.

மகரம்

மிக அதிகமான செலவுகளும், சிறு கஷ்டங்களும் ஏற்படுவதன் காரணமாக நிலைமை அதிருப்தியாயிருக்கும் உத்தியோகஸ்தர்கள் வேலைப் பளுவை எதிர்பார்க்கலாம். தொழில் வியாபாரத் துறையில்உள்ளவர்கள் மற்றவர்களை நம்பிவிடுவதால் சில நஷ்டங்களும் தொல்லைகளும் ஏற்படலாம் பெண்களுக்கு வேலையில் சுறுசுறுப்பும் அலைச்சலும் இருக்கும் மாணவர்கள் சோம்பலுடன் இருப்பார்கள் அரசியல் வாதிகள் முன்னேற்றமான சூழ்நிலையை அடைய எதுவுண்டு. கலைஞர்களுக்கு அரசாங்க ஆதரவுடண்டாகும்.

அதிர்ஷ்ட தினங்கள் : ஜுன் 29 ஜுலை 2, 3, 4, 7, 12.

கும்பம்

குடும்ப வாழ்க்கையில் சச்சரவுகள் இருக்கும் பணவசதிதொடர்ந்து இருந்துகொண்டே யிருக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு இருக்கும். தொழில் வியாபாரத் துறையில் உள்ளவர்களுக்கு முன்னேற்றம் ஏற்பட்டு லாபங்கள் அடைவார்கள் மாணவர்கள் கல்வியியல் தேர்ச்சியும் முயற்சிகளில் வெற்றியும் அடைவர் அரசியல் வாதிகள் வெளிவட்டார பழக்கங்களில் அனுகூலமானபலன்களை அடைவார்கள் ஆயினும் சிறு எதிர்ப்புகளும் உண்டாகலாம். பெண்களில் சிலருக்கு கணவன்மார்களுடன் சச்சரவு ஏற்பட்டு தனித்திருக்கவும நேரிடலாம். கவனமுடன் இவர்கள் இருத்தல் அவசியம்.

அதிர்ஷ்ட தினங்சள் : ஜுன் 18 25, 27, 30, 3 , ஜுலை 1, 10, 12.

மீனம்

கடன்கள் நீங்கி பொருளாதார நிலை சீரடையும் தொழில் வியாபார துறையிலுள்ளவர்கள் புதியமுயற்சிகளில் ஈடுபட்டால் வெற்றியடையலாம். உத்தியோகஸ்தர்களுக்குப் பதவி உயர்வும், தலைமைப் பதவி போன்றவையும் கிடைக்கக்கூடும். மாணவர்கள் கல்வியில் சிரத்தையுடன் இருத்தல் அவசியம் பரீட்சார்த்தமானவற்றில் இவர்கள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். சிலருக்கு வீடு, நிலம், வாகனம் போன்றவற்றில் ஏதேனும் ஒன்று கிடைக்க வாய்ப்புண்டு. பெண்களுக்கு மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமையும் அரசியல் வாதிகளுக்கு நல்ல செல்வாக்கும் அனுகூலமான பலன்களும் ஏற்படும்.

அதிர்ஷ்ட தினங்கள் : ஜுன் 16 29, 30, ஜுலை 4, 5, 7, 11, 12.

பக்த மீரா அருளிய

கிரிதர போபாலா

(ஸ்ரீனிவாஸ ஜகந்நாராயணன்)

பாடல் 14 :

பிரியர்களே, நான் சொல்வதை நன்றாகக்கேளுங்கள். என் கிருஷ்ண பிரேமை இந்த உலகம் முழுவதும் தெரிந்திருக்கும், ஆனால் அதை மறைத்து உலவுகிறது இந்தசாதுக்களே எனக்கு மாதா பிதாக்கள். இவர்களே எனக்குச் சுற்றமும் நட்பும். இவர்களுக்கு ஒருவித தீமையும் கிடையாது இவர்கள் ஞானிகள். இதுபற்றி நான் பல தடவைகள் ராணாவிற்குச் சொல்லி விட்டேன். அதனால், ராணாவின் வார்த்தை ஒன்றையும் நான்கேட்க வில்லை. ஆகவே மீரா சொல்கிறாள் :

எனக்கு கிரிதர நாதர்தாம் தலைவர். «சாதுக்களே என் கிருஷ்ண பிரேமையை நன்கு அறிவார்கள், அவர்களின் பாதுகாப்பில் விடப்பட்டிருக்கிறேன் அவர்கள் தாம் என்னைப் பாதுகாக்க வேண்டும்.

பாடல் 15 :

என்னை மகாராணா வைது தடுக்கட்டும், என்னை ஏசட்டும் மீராவின் தோழி ஒருவள் சொல்கிறாள் : மீரா வைராக்ய பாவத்தைத் தியாகம் செய். என் வார்த்தைகளைக் கேள். உன்னால் நாங்கள் கெட்ட பெயரை அடைகிறோம். கும்பபோஜராஜரும், அவருடைய தோழிகளும் எனைத் தடுக்கட்டும். இஃதென்ன கோலம். உன் தலையில் சீஸ் மலர், நீ யாரையும் வணங்குகிறாய் இஃதென்ன உன்நெற்றியில் இருக்கும் திலகம் வரம்பு மீறிப் பெரியதாக இருக்கிறது. சாதுக்களுடைய சமீபம் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறாய். இஃது ஒரு நாளா? பல நாட்களாகசெய்து கொண்டிருக்கிறாய் நம்முடைய அரச வம்சத்திற்கு களங்கம் செய்கிறாய் பெரிய அரண்மனையில்வசிக்கத் தகுந்த ராணி ஒரு சாதாரண சந்நியாசினியைப் போல் கீழான மக்களோடு சரளமாக பழகுகிறாய்.

உனக்குக் கிடைத்திருக்கும் பதி சாதாரணமான மனிதனா? இந்துக்கள் அனைவருக்கும் கதிரவனைப் போல கம்பீரமான ராணா உனக்குப் பதியாக இருக்க நீ அவரைத் தியாகம் செய்துவிட்டு, எப்பொழுதும் உன் மனப் போக்காகவே ஒருவருக்கும் அடங்காமல் வாழ்ந்து கொண்டிருக்கிறாயே? உன் மனத்தில் என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்?

இந்த வார்த்தைகளைக் கேட்டுச் சகித்துக் கொண்டிருக்கிறமீராபாய் சொல்கிறாள் :

எனக்கு இந்த வார்த்தைகள் பழக்கமாகிவிட்டன. இந்த பிறவியில் ஏற்பட்டிருக்கின்ற சுற்றங்களினால் எனக்கு என்ன பயன்? எனக்கு சத்குரு கிடைத்த பின்பு, என்னுடைய பழைமையான அஞ்ஞானம் அழிவடைந்து போய்விட்டது. எனக்குப் 'பாம்தாம்' எனப்படும் வைகுண்ட மார்க்கத்தை அவர் உபதேசித்திருந்தபடியால், நான் அவர்களுடைய வார்த்தைகளால் மனம் நோவப் படவில்லை. இவ்விதம் எனக்கு உண்மை நெறியைப் போதித்த பேருபகாரியின் (சத்குருவின்) திருவடித் தாமரை

களின் மீது நான் அடைக்கலமாகப் புகுந்தேன்.

பாடல் 16 :

யாரிடமும் விருப்பு வெறுப்பு அற்ற நீதி நிறைந்த அரிபகவானே! இப்பொழுது உன்னிடம் பிரேமை ஏற்பட்டுவிட்டால் அஃது அமுதத்தைக் குடித்துவிட்ட பிறகு நஞ்சை சாப்பிட்டாற்போலஇருக்கும்போது எனக்கு மாத்திரம் வேறொரு வழி, நெறி எப்படித் தோன்றும்? (அமுதத்தைக் குடித்த பின்பு நஞ்சை அருந்தினால் என்ன கெடுதலை உண்டுபண்ணும்? அதுபோல) முதலில் சுகத்தையும். பின்பு துக்கத்தையும் அளிக்கவல்லதாக அன்றோ உன் மீது கொண்ட பிரேமை விளங்குகிறது? இப்போது உன் நீதி மர்மம் புரிந்துவிட்டது.

உன்னிடம் ஏற்பட்ட பிரேமை உன் காரியத்துக்காக ஏற்பட்டது. வேறு ஒரு பொருளினிடமோ, அல்லது மனிதரிடமோ பிரேமை ஏற்படுவதற்கு இல்லை இது பிரேமையில் எந்த வகையில் சேர்ந்தது? அஃதாவது அன்பு எல்லாரிடமும் சமமாக இருக்கவேண்டும். ஆகவே பிரபு, நீர் சுய காரிய புலியாக உம்மிடம் கொண்ட பக்தியை வளர்த்திக்கொண்டே போகிறீர், உம்முடைய நீதியே மிக்க விநோதமாக இருக்கிறது! இதுவும் பிரபு என் நன்மைக்கே என்று நினைக்கிறேன்.

ஆகவே மீரா சொல்கிறாள். என் பிரபு கிரிதர நாதர், நீர் உண்மையாகவே சுயநலத்துக்காக (சொந்த காரியமாகிற) உமது நன்மைக்காகவே விருப்ப அன்பைக் (ப்ரீதி பிரேமை) காட்டுகிறீர், அதுவும் என் நன்மைக்காகவே ஆகவே நீர் எனக்கு மிகவும் நல்வினையின் பலனாக்ச் சொந்த நண்பனாக விளங்குகிறீர்,

தொகுப்பு : ஏ.எஸ்.எம்., சென்னை.

அல்லிக்கேணியில் அதிசயக் காட்சிசாலை

❋

உங்கள் குடும்பங்களுக்கும், கல்யாணம் மற்றும்
விசேஷ வைபவங்களுக்கும் தேவையான எல்லாவித அவசியப்
பொருள்கள் எப்பொழுதும் உங்களுக்கு திருப்தியளிக்கும்
வகையில் நம்பகமான, நியாய விலையில் கிடைக்கும்

ரொக்க விலைக்கும், சுலபமான தவணை முறையிலும் தருகிறோம்

எவர்சில்வர் பாத்திரவகைகள், பிரஸ்டிஜ் குக்கர் மற்றும் பலவிதமான குக்கர்கள்
கிரைண்டிங் மிஷின் முதலிய உங்கள் வீட்டிற்கு தேவையான யாவும்
நம்பிக்கையுடன் வாங்க சிறந்த இடம்

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

தமிழ்நாடு பாத்திரக் கடை

120, பெரிய தெரு — திருவல்லிக்கேணி, சென்னை-5.

எமது சார்பு ஸ்தாபனம் :—தமிழ்நாடு டிரேடிங் சென்டர், கல்பாக்கம்.

மந்த்ராலய மகானை தரிசியுங்கள்

34

1939-ல் ராய்ச்சூர் ஜகன்னாதராவ் அவர்களின் குமாரர் மந்திராலயத்துக்கு தரிசனம் செய்யச் சென்றார். அச்சமயம் மந்திராலயத்தில் காலராவின் ஆதிக்கம் தலைவிரித்தாடியது. பல மக்கள் இதற்குப் பலியாகினர். இக்கொடிய நோய்க்கு ஜெகன்னாதராவின் பையனும் ஆளானான். இதைக் கேள்வியுற்ற ஜெகன்னாதராவ் மந்திராலயத்துக்கு விரைந்து சென்றார்.

ஸ்ரீராகவேந்திரரின் ஏகாந்த பக்தரான அவர் ஸ்வாமிகளின் பாதோதகத்தைத் தம் மகனுக்கு பக்திப்பூர்வமாகக் கொடுத்தார். இரண்டு நாட்களில் மகன் குணமடைந்ததும் ஸ்வாமிகளுக்கு ஹஸ்தோதகமும் காணிக்கையும் செலுத்திவிட்டுவீடு திரும்பினார். அவருடைய ஆனந்தத்திற்கு எல்லை இல்லை.

சௌதாதி ராமராவ் என்பவர் பெங்களூர் மல்லேஸ்வரத்திலுள்ள ஓய்வு பெற்ற அதிகாரி. அவருடைய மகன் ஸ்ரீநரசிம்ம மூர்த்தி. அவர் அசோகா மார்கெட்டிங் கம்பெனியின் டெல்லி பிரிவில் வேலை பார்க்கிறார்.

சில வருடங்களுக்கு முன் அவருக்கு இருதய நோய் ஏற்பட்டு மருத்துவ நிபுணர்கள் கைவிட்டுவிட்டார்கள். சாரதக்கா என்ற அவரது தாயார் ஸ்ரீ ராகவேந்திரரைச் சரணடைந்தார். ஏற்கெனவே ஒரு முறை வேலூரில் அவரது நோயைப் பரிசோதித்த டாக்டர்கள் ஒரு மைனர் ஆபரேஷன் செய்ய வேண்டுமென்று கூறியிருந்தனர்.

ஆகவே இரண்டாவது முறையாக ஸ்ரீராமராவும் நரசிம்ம மூர்த்தியும் வேலூர் சென்றனர்.

அன்று ஏகாதசி, சாரதக்காவின் கனவில் ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமிகளின் அர்ச்சகர் தோன்றி சாரதக்கா! நீங்கள் கவலைப்பட வேண்டாம் ஸ்வாமிகள் ஓர் ஆபரேஷன் கேஸுக்காகச் சென்றுள்ளார். அவர் திரும்பி வந்த பின்னரே பூஜைகள் செய்யப்படும் என்று கூறினார். சாரதக்கா அதையே ஒரு சுப சூசகமாகக் கருதினார். மந்திராலய மகான் மேல் பாரத்தை போட்டுவிட்டு வெல்லூருக்குச் சென்றார்.

முன்னால் பார்த்த வைத்தியரிடமே நரசிம்ம மூர்த்தியை அழைத்துச் சென்றனர். ஆபரேஷன் ஆரம்பிப்பதற்கு முன் தலைமை சிகிச்சையாளர் ராமராவிடம் வந்து 'ஆபரேஷன் மேஜராக இருக்கும்போல தெரிகிறது. ஆகையால் உங்கள் பையனின் உயிருக்கு நாங்கள் எந்த விதமான உத்திரவாதமும் கொடுக்க முடியாது என்று கூறினார்.

ராமராவும் சாரதக்காவும் மந்த்ரா மகானே சரணம் என்று மனமுருக வேண்டினர்.

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை.

ஆபரேஷன் முடிந்தது. நரசிம்ம மூர்த்தியும் சாவின் பிடியிலிருந்து பிடியிலிருந்து மீண்டார். டாக்டர் களும் பேஷண்டுக்கு இது தெய்வீக அனுக்ரகம் என்றே உணர்ந்தனர். சார்தக்காவின் கனவில் அர்ச்சகர் கூறியதன் பொருளை உணர்ந்தனர்.

ஸ்ரீ ஜே. எச். பி. ஆசார்யா என் பவர் மைசூரில் கெஜட் பதிவு ஆபீசர். மஹா ஞானியும் மேதையுமான அவர் ஒரு கவிஞர். ஸ்ரீகுருநாதரின் ஏகாந்த பக்தர். மத்வ மடாதிபதி களின் ஜீவித சரித்திரமும் மற்றும மத சம்பந்தமானவைகளைக் கன்னடம் தெலுங்கு, ஆங்கிலம் முதலிய மொழிகளில் எழுதியுள்ளார்.

அவருடைய மந்திராலய ப்ரபு ஸ்ரீ ராகவேந்திர குருஜீ' என்கிற ஆங்கிலப் பதிப்பு மிகவும் புகழ் பெற்றதாகும். அதைப் படிக்கும் பக்தர்கள் ஸ்ரீ மந்திராலய மகானின் அளவு கடந்த மஹிமையை உணர்ந்துதாங்களும் அம்மகானுக்கு தொண்டு செய்யவேண்டும் என்று நினைப்பர். இவரை 1942 மார்ச் மாதத்தில் ஒருநாள் இரவிலும், மறு முறை 1950ல் அக்டோபர் மாதத் திலும் இருமுறை பாம்பு கடித்தது. அச்க்ஷணமே அவர் ஸ்ரீராகவேந் திரரை த்யானித்தார். ஸ்வாமி களின் ஸ்தோத்திரத்தில் வருகிற ஒரு சுலோகம்.

யார் இந்த ஸ்லோகத்தை பக்தி சிரத்தையுடன் படிக்கின்றார்களோ, அவர்களுக்கு புலி, பாம்பு திருடர் கள், முதலியவைகளால் யாதொரு துன்பமும்ஏற்படாது என்று ஸ்ரீ அப் பணாச்சாரியார் அருளியது.

ஆசார்யா விஷயத்தில் முற்றிலும் பலித்துவிட்டது.

இவ்வாறு பக்தர்கள் யாராக இருப்பினும் எந்த நிலையில் தம்மை நினைத்தாலும் அவர்களுக்கு அவ ரவர் நிலைக்கு ஏற்படதவும்தன்மை படைத்தவர் மஹான் ஸ்ரீராகவேந் திர ஸ்வாமிகள்.

ரங்காச்சாரியா என்பவர் பத்திரா வதி இரும்புத் தொழிற்சாலையில் வேலை பார்ப்பவர். அவருடைய குமாரன் ஒரு நொண்டி. அவர் ஒரு ஜோதிடரை அணுகி கேட்கையில் அச்சோதிடர் அவரை ஸ்ரீராகவேந் திர ஸ்வாமிகள் பிருந்தாவனத்துக் குச் சென்று பிரதக்ஷிண நமஸ்காரம் செய்தால் ஒருக்கால் தேவலை யாகுமென்று கூறினர்.

தற்சமயம் மந்திராலயத்தில் பீடாதிபதியாக இருக்கும் ஸ்ரீஸுஜ யீந்திர ஸ்வாமிகளுக்கு முன் பீடாதி பதியாக இருந்த ஸ்ரீஸியமீந்திர தீர்த்த ஸ்ரீ பாதங்கள் அவர்கள் பத் ராவதிக்கு விஜயம் செய்தார். ஸ்ரீரங் காச்சார்யார் அம்மகானை அணுகி அவருடைய அனுக்கிரகம் பெற்று மந்த்ராலயத்துக்குச் சென்றார் தன் பையன் கூட 21 நாள் கடுமையாசு சேவை செய்தார் 22-ம் நாள் காலே ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளே அக் குழந்தையின் நொண்டி காலைத் தடவிக் கொடுத்தார் குழந்தை எழுந்து நடக்க ஆரம்பித்தது.

ஸ்ரீ அச்சுதராமா சாஸ்திரி ஒரு வயலின் வித்வான். அவருக்குக் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டு மிகவும் அவதிப் பட்டார் அவரு டைய அண்ணர் ஸ்ரீ ஹனுமான் சாஸ்திரி விசாகப்பட்டினத்தில் இருந்து 'ராமசாஸ்திரியைப் பார்ப் பதற்கு வந்தார். அவர் சகோதரரை சமாதானப்படுத்தி ஸ்ரீ ராகவேந்திர ரின் ப்ருந்தாவனத்தைத் தரிசிக்கச் செல்வதாகச் சங்கல்பம் செய்து கொள் உனக்குக் கை சொஸ்த மாகி விடும் என்று சொல்லி, தனக் கும் புத்திர பாக்யத்தையும் ஸ்ரீராக வேந்திரர் கொடுத்து அருளிய விஷ யத்தையும் கூறி நம்பிக்கை ஊட் டினர்.

(46-ம் பக்கம் பார்க்க)

தியாகராஜ வைபவம்

விளக்கம் :- பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை

ஸ்ரீராமன் திருவடிகளே தனது ஜீவாதாரம் என்றுவாழ்ந்தஸ்ரீதியாகராஜ சுவாமிகள் இறைவனையடைய மிகச் சுலபமான வழியாக நாத உபாசனையைக் கூறுகிருர். சங்கராபரண ராகத்தில் அமைந்த இக் கிருதி பரமசிவனுல் பார்வதிக்கு அளிக்கப்பட்ட ஸ்வரார்ணவம் என்னும் கிரந்தத்தைப் பற்றியும் கூறுகிறது.

ராகம் : சங்கராபரணம் — தாளம் : ஆதி

பல்லவி

ஸ்வராக ஸீதாரஸயுத பவித
ஸ்வர்க்காபவர்க்க முரா; ஓமனஸா (ஸ்வ)

அனுபல்லவி

பரமானந்தமனு கமலமுபை
பக்த பேகமு சேலகி யேமி?மனஸா? (ஸ்வ)

சாணம்

1. மூலாதாரஜ நாத மேருகுட
முதமகு மோக்ஷமுரா
கோலஹல ஸப்தஸ்வர க்ருஹமுல
குருதே மோக்ஷமுரா; ஓமனஸா

2. பஹுஜன்ம முலகு பைநி ஞானியை
பரகுட மோக்ஷமுரா;
ஸஹஜ பவிததோ ராகக் ஞான
ஸஹிதுடு முக்துடுரா, ஓமனஸா (ஸ்வ)

3. மத்தள தாள கதலு தேலியகனே
மர்த்திஞ்ஜுட ஸுகமா
சுத்த மனஸு லேக பூஜ ஜேயுட
ஸீகர வ்ருத்திரா ஓமனஸா (ஸ்வ)

4. ரஜத கிரிசுடு நகஜகு லேல்பு
ஸ்வரார்ணவ மர்ம்மமுலு
விஜய முகல த்யாகராஜு டேருகே
விச்வசிஞ்சி தேலுஸுகோ ஓமனஸா (ஸ்வ)

ஏ மனமே! எனத் தன் மனத்துக்குக் கூறுவதுபோல நமக்குக் கூறுகிருர். ஸ்வரம், ராகம் ஆகியவைகளோடு கூடிய பக்தி அமிருதத்துக்கு ஒப்பானது. பரம்மானந்தமாகிற தாமரையின் இடையே ஒரு தவளைக்கும் கொக்குக்கும் என்ன வேலை யிருக்கும்? மூலாதாரத்தினின்றும் வெளிப்படும் நாதத்தின் இயல்பை அறிவதே பெரிய ஆனந்தமல்லவா? ஒருவன் பற்பல பிறவிகளுக்குப்பின்னரே ஞானியாகிருன். அதன் பின்னரே முக்தி பெறுகிருன் ஆயின் உடலின் பல்வேறு உண்டாகும் ஸ்தானங்களையும் அவற்றினின்று உண்டாகும் ஸப்த ஸ்வரங்களையுமறிந்து அவற்ருேடு கூட இயற்கையானபக்தியுமுடைய ஒருவன் உடனே பிறவியாகிய பிணியினின்றும் விடுதலை பெறுகிருன்.

தாளம், கதி ஆகியவற்றில் ஞானமின்றி ஒரு மிருதங்கத்தைத் தட்டினுல் என்ன ஆனந்தம்கிடைக்கும்? அம்மாதிரி ஒருவன் ஆத்ம சுத்தியின்றி வழிபாடு செய்தால் அவன் பன்றிக்கு ஒப்பானவன்.

ஏ மனமே! சிவபிரானுல் பார்வதிக்கு அளிக்கப்பட்ட ஸ்வரார்ணவம் என்பதை தியாகராஜனிடமிருந்து தெரிந்துகொள் என்கிருர் தியாகராஜர்.

முக்திக்கு வித்தாகும் பக்தி. அத்தகைய பக்தியை அளிப்பது நாதோபாசனையே என்று ஐயந்திரிபுறக் கூறுகிருர் சுவாமிகள்.

மந்த்ராலய மகான் (தொடர்ச்சி)

மூன்னூறு ஆண்டுகளுக்கு முன் பிருந்தாவனம் புகுந்தவர் எங்ஙனம் தன் கையை சொஸ்தப்படுத்துவார் என்ற எண்ணம் இருப்பினும், மூத்தவர் கூறும் உறுதிமொழிகளை நம்பி தன் கை குணமாகிவிட்டால் தான் மந்திராலயம் வந்து தரிசனம் செய்வதாக சங்கல்பம் எடுத்துக்கொண்டார் பக்தியுடன் செய்யும் எந்த முடிவையும் இறைவன் ஏற்றுக் கொள்வார். ராமாசாஸ்திரிக்குமருத்துவர்கள் குறிப்பிட்ட கெடுநாட்கள் முன்னதாகவே குணம் ஆகி கைகள் நன்ருக அசைக்க சக்தி ஏற்பட்டது. அவர் ஸ்வாமிகளின் சன்னதிக்குச் சென்று ஸ்ரீபீமாசாரியார் இயற்றிய கீர்த்தனங்களை வயலினில் வாசித்து மகிழ்ந்தார்.

சமய உணர்ச்சி வேண்டும்

ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஸ்ரீ ஜயேந்திரசரஸ்வதி சுவாமிகள்

பிற மதத்திலிருந்து வருகிறவர்களை ஹிந்துமதம் வெறுத்து ஒதுக்கிவிடாமல் ஏற்றுக்கொண்டு வந்துள்ளது. அப்பர் பெருமான் பிற சமயத்திலிருந்து ஹிந்து மதத்திற்கு வந்தவர். தட்டினால் திறக்கப்படும் என்பது பிற மதம் கூறும் மொழி. ஆனால், ஹிந்து மதத்தின் கதவுகள் தட்டாமலே எப்போதும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

எல்லா மதங்களிலும் தீவிரவாதிகள் இருப்பதுபோல ஹிந்து மதத்திலும் சிலர் இருக்கக்கூடும் ஹிந்து மதத்தை பண பலத்தினாலோ அதிகார பலத்தினாலோ வளர்க்க முடியாது. ஆன்மீக பலத்தின் மூலம் தான் வளர்க்க முடியும். ஹிந்து மதத்தில் பிரச்னைகள் வரும்போது தான் எல்லோரும் ஒன்றுபடுகிறார்கள். மற்ற நேரங்களில் ஈடுபாடு காட்டுவதில்லை என்பதைக் கொண்டு வேற்றுமையிருப்பதாக நினைக்கக்கூடாது.

ஹிந்து சமய ஒற்றுமைக்கு அமைப்புகள் இல்லாத நிலையில் சில சங்கங்கள் தோன்றியுள்ளன. அவற்றில் ஒன்று ஹிந்துமுன்னணி இன்றைய நிலையில் இந்த ஸ்தாபனங்கள் தேவையாகி விட்டன. மடாதிபதிகளுக்கிடையே கருத்து வேற்றுமையோ, ஒற்றுமையின்மையோ இல்லை மடாதிபதிகள் தாங்கள் தலைவராக உள்ள ஸ்தாபனங்களின் லட்சியங்களை நிறைவேற்றி வருகிறார்கள்

ஹிந்து சமயத்திற்கு தலைவர் இறைவனே. ஹிந்து சமயப் பிரசாரத்திற்காக அமைக்கப்பட்ட ஸ்தாபனங்களுக்குத்தான் மடாதிபதிகள் தலைவர்களாக உள்ளனர். மடாதிபதிகள் எந்தெந்த ஸ்தாபனங்களுக்குத் தலைவராக உள்ளனரோ, அந்தந்த ஸ்தாபனங்களின் லட்சியத்தை நிறைவேற்றும் காரியங்களைச் செய்து வருகின்றனர்.

ஹிந்து மத சம்பந்தமான ஸ்தாபனங்கள் பல இருந்தாலும், அவற்றின் லட்சியம் மதத்தை வளர்க்க வேண்டும், பரப்ப வேண்டும் என்பதுதான் இந்த லட்சியத்திற்காக மடாதிபதிகள் ஒன்று சேர்ந்துதெய்வீகப் பேரவை என்ற அமைப்பைப் பல ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டது, 1976 வரை நல்ல முறையில் இயங்கி வந்தது, அதன் பின்னர் செயல்படவில்லை.

அண்மையில் சிதம்பரத்தில் மடாதிபதிகள் மாநாடு ஒன்றுநடைபெற்றது இந்த மகாநாட்டில் நான் கலந்து கொள்ள இயலாததால் பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைத்தேன் இப்பொழுதும் மடாதிபதிகளுக்குச் என்று ஒரு சங்கம் உள்ளது அதில் நானும் சேர்ந்திருக்கிறேன். ஆகவே மடாதிபதிகளிடையே ஒற்றுமை உள்ளது ஒற்றுமையில்லையென்பது உண்மை அல்ல. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் கொள்கைகள் எப்படியிருந்தாலும் சமய உணர்வோடு நடந்து கொள்வது நன்மையைத் தரும்

தொகுப்பு : ஏ.எஸ்.எம். சென்னை

முற்பிறப்பில கூட்டு வியாபாரத்தில் எவனுக்கு நீ மோசம் செய்தாயோ அவன் இப்பிறப்பில உன மனைவியாக வநது வீட்டிலுள்ள பொருள்களை உனக்குத் தெரியாமலே விற்று உனககு துரோகம செயவான

பக்த விஜயம்

ஸ்ரீ கேசவஸ்வாமி

46

பகவானையே நம்பி பக்தர்கள் வாழ்கிறார்கள். பக்தர்களுக்காகவே பகவான் இருக்கிறார். பரமபக்தனாக இருப்பவன் தன்னையறியாமல் செய்யும் தவறுகளைக் கூட பகவான் மன்னிக்கிறார். அதுமட்டுமல்ல. அவனுக்கு எந்தவித இடையூறும் ஏற்படாமல் காப்பாற்றுகிறார். இதை அவர் தமது கடமையாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

கேசவஸ்வாமி என்பவர் ஒருமகா பக்தர். கண்ணனைப் பாடி மகிழ்ந்து வந்தார். இவரது குரல் இனிமையும் பக்தியும் எல்லோரையுமகவர்ந்திருந்தது. ஒரு சமயம் இவரது கோஷ்டி விஜயபுரம் என்றவூருக்கு வந்தது. அங்கிருந்த ஜனங்களும் இவரை அங்கேயே தங்கி பஜனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். இவரும் ஒப்புக் கொண்டார்.

அன்று ஏகாதசி. எல்லோரும் நிர்ஜலமாக இருந்து பஜனை செய்து நாமாவளி பாடி மகிழ்ந்தனர். இரவு நேரமாகியது நாவறட்சியால்நாமாவளி பாடுவதில் சிரமமேற்பட்டது. கேசவஸ்வாமி தன்சீடனைப்பார்த்து கடைக்குப் போய் சுக்கும் வெல்லமும் வாங்கி வா என்றார்,

சிஷ்யன் பணத்தை எடுத்துக் கொண்டு கடைக்குச் சென்றான். நேரமாகி விட்டபடியால் எல்லா கடைகளும் மூடியிருந்தது ஒரேஒரு கடை மூடும் சமயமாக இருந்தது. சிஷ்யன் கடைக்காரரிடம் தான் யார் என்பதைச் சொல்லி, சுக்கும் வெல்லமும் வேண்டுமென்றான்.

கடைக்காரர் சந்தோஷப்பட்டு, மீண்டும் கடையைத் திறந்து உள்ளே சென்றார். விளக்குகள் எல்லாம் அணைக்கப்பட்டு விட்டபடியால் இருட்டிலேயே நிதானத்தின் பேரில் ஒரு பானையில் கைவிட்டு வெல்லத்தை எடுத்து வைத்தார். சுக்கு எங்கே என்று தேடினார்.

சரியான நிதானம் இல்லாததால் அங்கிருந்த ஒரு பையில் கைவிட்டார் அது எலிப் பாஷாணம். கையால் தொட்ட போது சுக்குபோல இருந்தது, அதையும் எடுத்தார். சிஷ்யனிடம் கொடுத்தார். சிஷ்யன் இதற்கான பணம் கொடுக்கவந்தான் அதற்கு கடைக்காரர் பாகவதக் கைங்காயம் செய்யக்கொடுத்துவைத்திருக்க வேண்டும் ஏதோ என்னால் முடிந்ததைச் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன் இந்த வெல்லத்துக்கும் சுக்குக்கும்பணம்வாங்க மாட்டேன் நானே பஜனைக்கு வருவதற்காகத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன் நீங்கள் முன்னாடிச் செல்லுங்கள். நான் பின்னாடியே வருகிறேன் என்றார்.

சிஷ்யன் வெல்லத்தையும், சுக்கு என்று நினைத்து எலிபாஷாணத்தையும் கொண்டு கொடுத்தான். இவைகளைப் போட்டு பானகம் தயார் செய்து பாகவதகோஷ்டிக்கு

ஷினியோகம் செய்யப்பட்டது. எல்லோரும் பானகமருந்தி பஜனை முடிந்து வீடு திரும்பினார்கள்.

இறைவன் கருணாமூர்த்தியல்லவா! தெரியாமல் நடந்துவிட்ட தவறுக்கு பொறுப்பாளியாக்க விரும்பவில்லை விஷத்தை அவனே ஏற்றுக்கொண்டான். அருளை வழங்கினான். அவனது திருமேனிமேலும் கருமையாகியது.

மறுநாள் காலை கடைக்காரர் கடையைத் திறந்து உள்ளே சென்றார். எலிப்பாஷாணப்பை அவிழ்ந்து கிடந்தது திடுக்கிட்டார்! அடாடா! நேற்று இருட்டில் இதிலிருந்து தானே சுக்கு என்று எண்ணிக் கொடுத்துவிட்டேன், இதைக் கலந்துதானே பானகம் தயார்செய்திருப்பார்கள்! கடவுளே! அதைச் சாப்பிட்டவர்கள் என்ன ஆனார்களோ தெரியவில்லையே! நான் நல்லது செய்யப் போய் இப்படியாகிவிட்டதே! என்று கலங்கினார்,

ஓடோடி சென்று கேசவஸ்வாமி தங்கியிருந்த இடத்துக்குப்போனார். அங்கே யாருக்கும் எவ்வித ஆபத்துமில்லை. எல்லோரும் காலையில் எழுந்து தங்கள் அனுஷ்டானங்களை செய்துகொண்டிருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

இருப்பினும் மனச்சாட்சி என்று ஒன்று உண்டல்லவா? நேராக கேசவஸ்வாமியிடம் சென்று நமஸ்காரம் செய்து நடந்தவிஷயங்களைக் கூறி மன்னிக்கும்படி வேண்டினார். கேசவஸ்வாமிக்கு ஆச்சரியமாக இருந்தது.

ஏ! ஸர்வேச்வரா! ஆபத்பாந்தவன் என்று உமக்கு பட்டம் வைத்திருப்பது எவ்வளவு பொருத்தமப்பா! பிரசாதத்தில் விஷம் கலந்திருப்பது அறிந்து அந்த விஷத்தை தாங்களே ஏற்றுக்கொண்டு எங்களைக் காப்பாற்றி விட்டாயே! என்னே உன் கருணை! இந்தவிஷத்தினால் யாராவது பாதிக்கப்பட்டிருந்தால் எங்கள் கதி என்னவாகியிருக்கும்? பிறகு பஜனைக்கு யார்தான் வருவார்கள்? பிரசாதத்தை யார் விரும்புவார்கள்? இப்படியெல்லாம் அசம்பாவிதமாக ஏதும் நடந்துவிடாதபடி காப்பாற்றினாயே! ஜகத்ரக்ஷகன் என்கிறார்களே! அதுநீதான் என்று காண்பித்து விட்டாயே என்று புகழ்ந்து பாடி மகிழ்ந்தார்.

இந்த விஷத்தை நீ ஏற்றுக்கொண்டதால் உன் திருமேனி மேலும் கருமை நிறமாகிவிட்டதே! இப்படியே இருந்தால் இந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வந்து கொண்டேயிருக்குமே! தங்கள் திருமேனியை முன்போல மாற்றிக்கொண்டு அருள் செய்யவேண்டும் என்று வேண்டினார்.

கண்ணன், 'அன்பரே! உமது பக்தியையும், அன்பையும் உலகுக்கு காட்டவே இப்படியொரு நாடகம் நடத்தினேன் நீயும் குற்றமற்றவன் வணிகனும் குற்றமற்றவன். உன் விருப்பம்போல் என் மேனியை முன்போலவே மாற்றிக்கொள்ளுகிறேன். நீங்கள் பல்லாண்டுகாலம் பக்தியைப் பரப்பிக்கொண்டு சுகமாக வாழ்ந்து வைகுந்தம்வந்தடைவீர்' என்றார்.

கேசவஸ்வாமியும் மற்ற பக்தர்களும் மெய்மறந்து ஆடிபாடிப் பகவானைத் துதித்து மகிழ்ந்தனர். ஊர் மக்களும் அவர்களை அங்கேயே தங்கியிருந்து பஜனை செய்து பக்தி மார்க்கத்தைப் பரப்பிக் கொண்டிருக்க வேண்டும் என்று பிரார்த்தித்தனர் விஜயபுரம்ஹரிபக்திகளே உறைவிடம் என்ற பெயர் பெற்றது

ஸ்ரீகேசவஸ்வாமியும் மகாபக்தர்கள் வரிசையில் இடம் பெற்றார்.

—வைரம்.

தாய்க் குலத்தின் கடமைகள்

அமரர் ஸ்ரீ. சுவாமி சிவானந்தா

சீதை, சாவித்திரி, தமயந்தி, நளாயினி, அனுசூயாதேவி, திரௌபதி ஆகியோர் இந்தியாவில் புனிதமான இலக்ஷியப் பெண்மைக்குப் பேர் வாய்ந்தவர்களெனப் பேசப்படுகிறார்கள்.

அவர்கள் மாட்சிமை தங்கியவர்கள், பிறர் பின்பற்றும் உதாரப் பெண்மணிகள், தெய்வீகப் பரிபூரணம் என்னும் உச்ச நிலையில் நின்று, சிறந்த பெண்மைக்குச் சிகரம் போன்றவர்கள்.

தற்காலப் பெண்கள் இவர்களுடைய வாழ்க்கைகளிலிருந்து ஆவேச உணர்ச்சிகளைப் பெற்று இவர்கள் சென்ற வழியைப் பின்பற்ற முயல வேண்டும். இவர்கள் இந்தியப் பெண்மணிகளின் வாழ்க்கையிலும் ஒழுக்கத்திலும் ஆதிக்கம் செலுத்துமளவு, இதர தேசத்திலுள்ள சகோதரப் பெண்மணிகள் இவர்களை வியப்புடனும் கண்ணியத்துடனும் நோக்குவார்கள்.

இவர்கள் எல்லோரும் மிகவும் கடுமையான சோதனைகளுக்கு உட்பட்டவர்கள். இவர்களது கற்பு, வீரம் பொறுமை ஆகிய பல பண்பாடுகள் கடுமையாகச் சோதிக்கப் பட்டன.

அத்தகைய சோதனைகளிலிருந்து கம்பீரமாக வெளியே வந்த உத்தமிகள். ஹிந்து பெண்மணிகள், பூர்வீக நாகரிகத்தின் உதயத்திலிருந்து, சுய நலமற்ற அன்புக்கும துறவு மனப்பான்மைக்கும் பேர் பெற்றவர்கள்.

ஓர் மனைவி, ஓர் ஹிந்து கணவனுக்கு எப்படிபபட்டவள என்பது பற்றி இராமாயணத்தில் ஓர் செய்யுளில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது,

ஸ்ரீராமர் சீதையைக் குறித்து, புத்திமதி கூறுவதில் அவர், எனது நியாயவாதி, செய்கையில் ஒரு வேலைக்காரி, சமய அனுஷ்டானங்களில் அவள் எனது கூட்டாளி. பொறுமையிலோ பூமாதேவிக்கு நிகராயிருக்கின்றாள், அன்பிலேஎன் தாய்போல் நடந்து கொள்கிறாள். படுக்கையில் தெய்வீகரம்பை, விளையாடும்போது எனதுதோழன், ஹே! இலக்ஷ்மணா! இப்பேர்ப்பட்டவள் தான் என் அன்பிற்குரிய சீதை" என்று லக்ஷ்மணனிடம் கூறுகிறார்.

ஹிந்துக்களின் இலக்ஷிய மனைவி என்பவள் இத்தகைய குண சம்பத்தினளாம்.

ஓர் ஹிந்துப் பெண் தன்கணவன் பால் கொள்ளுகிற நித்தியத்துவ பிரேமையானது, அவளை மாதர் உலகத்திலே ஓர் இலட்சிய மனைவியாகச் செய்கிறது. அது அவளை உன்னதமான பண்பாடு கொண்டவளாகச் செய்கிறது.

இந்தியாவிலே இந்தத் தெய்வீக பண்பாடு இன்னமும் ஒவ்வொரு பெண்மணியின் இதயத்தின் ஆழத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. தேசீய பூரணத்துவத்திலும கௌரவத்திலும இதர நாடுகளைக் காட்டிலும் உன்னத நிலையில் ஓடிக்கொண்டிருக்கிறது.

வீட்டில் உயிர்ப்பிக்கும் சக்தியே பெண் வீடு என்பது சமுதாய நிர்வாகத்தில் ஒவ்வொரு அமைப்பின் மூலமும் தொடக்கமும் ஆகும்.

தேசத்தின் சிசுபோஷணசாலையே அது. எதிர்கால பிரஜா உரிமைக்காகக் குழந்தைகள் பயிற்றுவிக்கப் படும் ஓர் இன்ப தாய்க்குல நிலையம் அது.

தாய்மைச் சிறப்பின் வாயிலாக, பெண், வீட்டைச் சோபிக்கச் செய்கிறாள். சிசுக்களை வளர்த்தல் போன்ற வீட்டுக் கடமைகளை ஆற்றுவதற்கு ஆடவன் அசக்தன் ஆகிறான். தாயின் நேர் பார்வையிலும் ஆதிக்கத்திலும் திட்டங்கள்வகுத்து ஒழுங்குக்கு உட்பட்ட நல்லதோர் குடும்பத்திலே, நல்ல பழக்கங்கள் நன்னடத்தை, நல்ல ஒழுக்கம் அமைதல் ஆகியவை சிசுக்களிடம் அமோகமாய்ச் சிருஷ்டிக்கப்படுகின்றன.

தாயினுடையநேசிக்கும் பிரேமையும், பண்பட்ட பெருந்தன்மையும், குழந்தைகள் தங்கள் இயற்கையான திறமைகளையுப்சூக்ஷ்மமானசாமர்த்தியங்களையும் வெளிப் படுத்துவதற்கு உதவுகின்றன.

அனுசரித்தல், பிரஸ்தாபித்தல் ஆகியவற்றின் மூலமாய்க் குழந்தைகள் கருத்தை கிரகிக்கின்றன இள வயதில் கற்றுக்கொண்ட பயிற்சிகளும், உள்ளப் பதிவுகளும் நீடித்தவையாயிருக்கின்றன. வீட்டில் தாய்மார்கள் குழந்தைகளுக்கு நல்லொழுக்கத்தைதம்கவும்திறமையாய் புகட்டக்கூடும்

ஆகவே, தாயின் நேர் பராமரிப்பில், குழந்தைகளுக்கு 'நல்லொழுக்கத்தைப் புகட்டுவதற்கு வீடு ஓர் அழகான பயிற்சிச் சாலையாகும்.

பெண்மணிகளின் சமயத்தையும் தேசீய வலிமையையும், சுபிட்சத்தையும் நிலை நாட்டுவதற்கு உருவான முதுகெலும்பு அல்லது அஸ்திவாரம் போன்றவர்கள்.

அழகு, அருள், சுபிட்சம் அனைத்திற்கும் அதிதேவதையான லக்ஷ்மி தேவிக்கும் அவளுக்கும்எந்தவிதத்திலும் வித்தியாசமில்லை, சதா நல்லதைச் செய்கிறவளும், வேலையில் திறமை வாய்ந்தவளும், பேச்சில் இனிமையுடையவளும், தனக்குரிய தர்மங்களில் மிக்க சிரத்தையுள்ளவளும், தன் பிராணபதிக்கு சிசுருஷை செய்பவளுமான பெண்மணி உண்மையில் மனித வர்க்கத்தினள் அல்ல, அவள் ஒரு தேவதையே என்று மனு கூறியுள்ளார்.

நன்றி: தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
இராசிபுரம்.

எந்நேரம் இறைவனுடைய திருநாமம் நினைக்கப்பட்டதோ, அது நம்முடைய நேரம் எது தருமத்தில செலவழிந்ததோ அது நம்முடையது.

கோவில் உடமைகளைச் சாப்பிட்டவர்கள், இறந்த பின் வௌவாலாக பிறந்து அதே சாப்பிட்ட வழியில மலம கழிக்கத் தொடங்குவாரகள்

—கிருபானந்த வாரியார்.

உலகப புகழ் பெறற ஸ்ரீகணேஷ்ராமஸ 777 பிராணட்
உணவுப பொருளகள உங்கள அருகாமையில் உளள
கடைகளில இப்பொழுது கிடைககிறது

- திடீர் புளியோதரை பேஸ்ட்
- திடீர் வத்தல குழம்பு பேஸ்ட்
- திடீர மிளகு ரசம & தககாளி ரசம் பேஸ்ட்
- டாம-எகஸ் (TAM-EX) &
- கார்லிக்ஸ (GARLIX)
- கரகரபபான, முறமுறபபான அப்பளம் மற்றும் ஊறுகாய்

SRI GANESHRAM'S ANALYTICAL LABORATORIES MADRAS-1 (REGD)

ஸ்ரீகணேஷ்ராம் & கோ.,

சென்னை - 600 001. போன்: 20401 & 20402

பெண்களுக்கு மட்டும்

நக்ஷத்திர குணங்கள்

A. ராகவய்ய ஜோஸ்யர் - திருவள்ளூர்

திருவாதிரை

இருபத்தேழு நக்ஷத்திரங்களில் 6வது இடம் பெற்றது திருவாதிரை நக்ஷத்திரமாகும் இது நக்ஷத்திரங்களுக்கு தலையானது. இந்நக்ஷத்திரத்திற்கு தெய்வம் மகேஸ்வரன். அவர் எவ்வாறு தேவர்களுக்குத் தலைவரோ, உலகிற்கு உலக அனுபவங்களைத் தெரிவிக்க திருவிளையாடல்கள் பல புரிந்து நமக்குத் தலைவனாக விளங்குகிறாரோ அது போல் இந்நக்ஷத்திரம் பிற நக்ஷத்திரம் அனைத்திற்கும் தலைமையானது.

இதற்கதிபதி ராகு, தேவதை (துர்க்கை), ஸ்ரீநக்ஷத்திரம் மானுஷ்ய கணம், ராஜஸகுணம்,யோனி நாய் இந்நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்களைப் பற்றி நோக்குவோம்.

மாநிறம், பருத்த சரீரம், கபட குணம், இளமையில் நல்ல சுகம், அனைத்து கலைகளையும் கற்றவர்கள், முன்கோபம் உள்ளவர்கள், டாம்பீக செலவுகளால் கடன்படுவார்கள், இவர்கள் அணியும் ஆடைகள் ராஜரீகமாகவும் பார்வைக்கு கம்பீரமாகவும் தோன்றும் பவழாபரணங்கள், பாக்கு, பழுப்பு கலர் ஆடைகள் உகந்தது.

சிலர் பார்ப்பதற்கு அழகுடையவர்கள், நடுத்தர உயரம், நடுத்தர சரீர அமைப்புள்ள, தயாளகுணம், கவிதைகள், புராணங்கள் மீது அதிக ஆசை, அதிக பக்தி, பிறரை சொற்களால் சுடும் தன்மை உள்ளவர்கள், சுயநல வாதிகள், தற்புகழ்ச்சி, பிறரை ஏளனமாக பேசும் குணம் போன்றவை இவர்களிடம் அமைந்திருக்கும் எந்த நேரமும் சமையலறையை விட்டுவெளியேற நினைக்கமாட்டார்கள்.

இவர்கள் தயாள குணத்தால் பிறருக்கு உதவி புரிந்து பஸ்மாசுரனுக்கு வரம் தந்து பட்ட பரமன் நிலையைப் பெறுவார்கள். வீட்டை விட்டு வெளியேறநினைக்கமாட்டார்கள், கண் பார்வை இடையூறுகளால் கண்ணாடி அணியநேரிடும். புளிப்பான பண்டங்கள், வெற்றிலை, வேர்க்கடலை. புகையிலை மீது அதிக ஆசைபிறரிடம்சாமர்த்தியமாக தன் காரியத்தை சாதிப்பார்கள்.

இவர்களை நம்பினால் 'மண் குதிரையை 'நம்பி ஆற்றில் இறங்கிய நிலைதான் உண்டாகும். இருந்த இடத்திலிருந்தே அதிகாரம செய்பவர்கள். காணாததைக் கண்டேன எனக் கூறும் குணம் இவர்களிடம் இயல்பாகவே உண்டு தந்திரமாக பேசி கடன்களை வாங்கி விட்டு பிறகு இல்லையென கூறிவிடுவர் பிறர் குற்றங்களை பிரசாரம்செய்பவர்கள் பிறா வீட்டு செய்திகளை ஊரெல்லாம் பரப்பிவிடுவர்.

எநதக் காரியத்தையும் முழுவதாக செய்ய மாட்டார்கள். பகையாளிகள் செய்யும் தந்திரத்தை அறிந்து கொண்டு அவர்களை வென்றுவிடுவார்கள.

முதல் பாதம்

சாந்த குணம்,சத்யத்தைக்கடைபிடிப்பார்கள் அழகுடைய சரீரம், மலர்ச்சியான முகம், தெய்வ சிந்தனை, தெய்வ ஆராதனையில் அதிக

விருப்பம். சத் விஷயத்தில் நம்பிக்கை உள்ளவர்கள்.

இவர்கள் கணவன் உயர்ந்த படிப்பு, உயர்ந்த குணம், மனைவி மீது அளவில்லாத அன்பும், மனைவியின் மனமறிந்து நடப்பவர்களாகவும், மனைவியிடம் இதமாகப் பேசுபவர்கள், மக்கள் மகிழ்ச்சி, மக்களால் பூரண சுகத்தை அடைவார்கள்.

இரண்டாம் பாதம்

கருநிறம், முகத்தில் பருக்கள், வாத சம்மந்தபிணிகள் வேண்டாத பொருள்களையும சாப்பிட்டு அவதிக்படுவார்கள், பற்கள் சம்பந்தமான வியாதிகள், வீண் செலவுகள், வீண் வம்புகள் செய்யும் கணவன்கள், கெட்டவர்கள் நட்பு, எப்போதும் கணவன் மனைவியிடம் சண்டை, அவர்களிடம பல கஷ்டங்கள் அனுபவிப்பார்கள், இவர்கள் கணவன் எதிர்பாரா விபத்தில் சிக்கி அவதிக்குள்ளாவார்கள். ஊரைச் சுற்றி வந்து விட்டில் மனைவியிடம் அட்டகாசம் செய்வார்கள்.

மூன்றும் பாதம்

இவர்கள் பார்ப்பதற்கு மாநிறம். குட்டையான பருத்த சரீரம், எப்போதும் முணுமுணுத்துக்கொண்டிருக்கும் சுபாவம், அநாகரீகமான ஆடைகளணிவதும், பிறரை எப்போதும் வார்த்தைகளால் தூற்றுபவர்கள்.

ஒவ்வொரு சொல்லும் வாழைப்பழத்தில் ஊசி வைத்ததுபோலிருக்கும். கணவன் விரட்டுவதும், தூற்றுவதும், கணவன்மார்கள் இவர்களிடம் அன்பு செலுத்தாமல் தீய வழிகளில் செல்லுவார்கள்.

நான்காம் பாதம்

இவர்கள் வட்டமான முகம், அழகுள்ளவர்கள், எப்போதும் மேலே பார்த்து பேசுபவர்கள், உதாசீனமான வார்த்தைகளால் ஏளனம் செய்யும் சுபாவங்கள், பட்டப்படிப்புகள், பணிபுரியும்வாய்ப்பு, நினைத்தபடி வாழ்ந்து காட்டுவார்கள்.

கணவன் மெலிந்த சரீரத்தையும், மனைவிக்கு கட்டுப்பட்டு நடக்கும் தன்மை. எதற்கும் ஆமாம் தானம் போடும் தன்மை, உயர்ந்த பதவிகள், பணவசதிகள் உள்ளவர்கள்.

இவர்களுக்கு பிரதி மாதம் ஞாயிறு, புதன், திங்கள், வெள்ளிக்கிழமைகளும், 1, 10, 19, 28 தேதிகளிலும், வயதுகளிலும் உயர்வான யோகங்கள் உண்டாகலாம் சந்திர தசை, புதன் தசை, குரு தசை, சுக்ர தசைகளில் விசேஷ யோகங்கள் உண்டாகும் சூரிய, செவ்வாய், சனி, ராகு கேது தசைகளில் இடையூறுகள் உண்டாகும். அவற்றிற்கு தக்க பரிகாரம் செய்ய நன்மை உண்டாகும்.

குண்டூசி
வருட சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 20
தனிப் பிரதி ரூ. 1-20

தங்க, வைர நகைகளுக்கு
K.R. சன்ஸ் ஜிவல்லர்
பெரியகடை வீதி, கோயமுத்தூர் Ph: 23033

மகாகவி காளிதாசர் அருளிய

ரகுவம்சம்

ஸ்ரீ. குருவாயூரப்பதாசன் B சுந்தரராமன், M.A., B.Ed.

43

நாட்டைத் திறம்பட ஆண்டு வந்த குசனுக்கு குமுதவதியிடம் அதிதி என்ற மகன் பிறந்தான். சிறந்த அழகும் நன்னடத்தையும் பெற்று விளங்கினான் வித்யாப்யாசம் முடிந்ததும் அதிதிக்கு தந்தையாகிய குசன் திருமணம் செய்வித்தான் அதிதி எல்லாவிதத் திறமைகளிலும் குசனைப் போலவே சிறந்து விளங்கினான்.

அப்போது ஒரு சமயம் வர மஹிமையால் சிறந்து விளங்கிய துர்ஜயன் என்ற அசுரன் தேவர்களுக்கு துன்பம் விளைவிக்கவே இந்திரன், குசனது உதவியை நாடினான். இந்திரனுக்கு உதவிபுரிதல் என்பது இக்ஷ்வாகு குலத்திற்கு பழக்கமானதொரு செயலாதலால் குசனும் அதற்கு ஒப்புக்கொண்டான்.

யுத்தத்திற்கு போவதற்கு முன் மந்திரிகளிடம் தான் ஒருக்கால் யுத்தத்தில் மாண்டுவிட்டால் அதிதிக்கு ராஜ்யாபிஷேகம் செய்து நாட்டு மக்களைக் காப்பாற்றும்படி ஆக்ஞாபித்து. இந்திரனுக்கு உதவியாக அரக்கனுடன் போரிட கிளம்பினான்.

யுத்தத்தில் துர்ஜயனை, குசன் தன் பாணத்தால் தாக்கி வீழ்த்தினான். போர் முடிந்த மகிழ்ச்சியில் தேரினின்று கீழே இறங்கிய குசனின் மேல் மரணத் தறுவாயில் இருந்த அரக்கன் எதிர்பாராமல் தன் ஆயுதத்தை எறிந்து கொன்றுவிட்டான்

இச்செய்தி அறிந்த குசனது மனைவி குமுதவதியும் அனுமரணம் செய்து உயிரை விட்டாள்.

சொர்க்கத்திற்கு சென்ற குசன் இந்திரனுக்கு நண்பனாக ஒரே சிம்மாசனத்தில் அமர்ந்தான் அவனுடன் வந்த குமுதவதியும் இந்திராணியின் உற்றத்தோழியாக விளங்கினாள்.

அயோத்யா நகர மந்திரிபிரதானிகளும், குலகுருக்களும் மன்னனான குசனது மறைவால் பேரதிர்ச்சி அடைந்தாலும், தோற்றம், திறமை பண்பு, திறம் யாவற்றிலும் குசனை ஒத்திருந்த அதிதி தங்களுடன் இருப்பதால் ஒருவாறு மன ஆறுதலடைந்தனர் குசன் உடன் இல்லாது அதிதிக்கு பட்டாபிஷேகம் நடத்த நேர்ந்ததாலும் எந்த குறையுமின்றி விமரிசையாகவே நடத்த நிச்சயித்தனர்.

பட்டாபிஷேகத்திற்காக சிற்பிகளைக் கொண்டு ஒப்பற்ற புதியதொரு மண்டபத்தை உருவாக்கினர் வாஸ்து சாஸ்த்ரத்தில்கூறிய நியமப்படி அரசன் பட்டாபிஷேகத்திற்கு அமர 'பத்ரபீசம்' என்ற ஆசனத்தை நிர்மாணித்தனர்.

புண்ய தீர்த்தங்கள் சேகரிக்கப்பட்டன. பிறகு அதிதியை அபிஷேகத்திற்கான ஆசனத்தில் அமரச் செய்தனர். வயது முதிர்ந்த உறவினர்கள் அறுகம்புல், யவமுளை, ஆலம்பட்டை, இளந்தளிர் இலுப்பைப்பூ, தாமரைமொட்டு, பருத்திக்

தூய இலைகளை மிகுதியாகக் கொண்ட ஆரத்தியெடுத்தனர். தீபங்களைக் கொண்டும் ஆரத்தியெடுத்தனர். பிறகு அந்தணர்களும் வஸிஷ்டர் முதலான மஹரிஷிகளும் அரசனை ரக்ஷை போல காப்பாற்றும் அதுர்வ மந்த்ரங்களை உச்சரித்து அரசனான அதிதிக்கு கலச தீர்த்தங்களை அபிஷேகம் செய்தனர்.

அதிதியின் சிரசிலே ஊற்றப்பட்ட அபிஷேக ஜலம் சிவபிரானது தலையில் விழும் கங்கை போல் காணப்பட்டது.

ஸ்துதி பாடகர்கள் அரசனைப் புகழ்ந்து கானம் செய்தனர். மந்த்ர ஜல அபிஷேகத்தால் அதிதி மேலும் ஒளியுடன் விளங்கினான். அபிஷேகம் முடிந்தவுடன் அதிதி கிரஹஸ்தர்கட்கும் யாகம் செய்யும் அந்தணர்கட்கும் ஏராளமான பொற்காசுகளை வழங்கினான்;

பின்னர் அருகிலிருக்கும் ஓர் அறையில் அரசனை, அணி செய்விக்கும் பணியாட்கள் தந்தாஸனத்தில் அமரச் செய்து நல்ல வாசனை தூபங்களால் புகைமூட்டி தலையை உலரச் செய்து புத்தாடைகளால் அலங்கரித்தனர் அன்னங்களை ஜரிகை வேலைப்பாட்டில் கரையாக அமைத்த வெண்பட்டினை அணிவித்தனர் பத்மராகம் முதலான நவரத்னங்கள் பதித்த ஆபரணங்களை அணிவித்து, கஸ்தூரி கலந்த சந்தனத்தை அரசனுக்கு பூசி, கோரோசனை திரவத்தால் உடலில் அலங்கார வரிகளை எழுதினர். பின் ராஜ சின்னங்களான குடை, சாமரம் முதலான உபசாரங்களுடனும் 'ஜய விஜயீபவ' என்ற கோஷங்களுடன் ஆஸ்தான மண்டபத்தை அதிதி அடைந்தான்.

அந்த மண்டபத்தில் விதானம் உடையதும், வணங்கும் அரசர்களின் கிரீட ரத்னங்கள் உராய்ந்ததால் வழுவழுப்பாகவுள்ளதும் கால்களை வைக்கும் இருக்கையை உடையதுமான இக்ஷ்வாகு குலத்தவரின் ஸிம்ஹாசனத்தில் அதிதி அமர்ந்தான் பிறகு திவ்யமான குலத்தனமான கிரீடத்தை வஸிஷ்டர் அதிதிக்குச் சூட்டினார். மக்களனைவரும் பலவகை பரிசில்களையும் பெற்றனர்

அரசாங்க அலுவலர்களுக்கு அவரவர் பதவிக்கேற்ப பரிசில்களை வழங்கினான். கைதிகளுக்கு பட்டாபிஷேகத்தை முன்னிட்டு விடுதலையும், எருது குதிரை போன்ற உயிரினங்களுக்குக்கூட அன்று வண்டியில் பூட்டி சுமை தூக்காதிருக்கும்படி உத்திரவையும் இட்டான். கிளி முதலான வளர்ப்பு மிருகங்கட்கும் விடுதலை அளித்தனர்.

ஐராவதத்தின் மீதமர்ந்த இந்திரன்போல யானை மீதமர்ந்து அதிதி நகர்வலம் வந்தான்.

மக்களனைவரும் குசனிடம் வைத்திருந்த நம்பிக்கையை பூரணமாக அதிதியிடம் வைத்தனர் தெளிவுடனும், கம்பீரத்துடனும், புன்சிரிப்புடனும் பேசும் அதிதியிடம் அலுவலர்கள் நம்பிக்கையையும் நன்றியையும் பெரிதுமடைந்தனர்,

அயோத்யா நகரத்து தேவதையும், மற்றெல்லா தேவதைகளும் நியமமாக நன்கு ஆராதிக்கப்பட்டு பூரண ஸாந்நித்யத்துடன் ஆராதிக்கப்பட்டன. அபிஷேக ஜலத்தால் நனைந்த தரை உலருவதற்கு முன்பே அதிதியின் பிரதாபம் எங்கும் பரவியது வஸிஷ்டரின் மந்த்ரபலமும் அதிதியின் ஆயுத பலமும் மக்களை பயமின்றி வாழச் செய்தது.

கர்ம சாஸ்திரம் அறிந்த பெரியோர்களுடன் தானே நேரிடக் கலந்து குற்றவாளிகளை விசாரித்து தீர்ப்பு வழங்கினான். கொடுத்த வாக்கைக் காப்பாற்றினான். திக்

விஜயம் செய்து பல நாடுகளையும், பல மன்னர்களையும் வெற்றிகொண்டாலும் அவர்களை கௌரவமாகவே நடத்தினன் அதனல் உட்பகை வெளிப்பகை இரண்டுமின்றி சிறப்புடன் ஆண்டு வந்தான்,

ஒவ்வொரு மனிதனது மனத்திலும் உள்ள காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறு பகைவர்களையும் அதிதி அடியோடு வென்று ஒழித்தான், மனு முதலியவர்களால்வகுக்கப்பட்ட தர்ம சாஸ்திரத்தின்படி அதிதி நடந்து ஆட்சி செய்தான். சூரியனது கிரணங்கள் எங்கும் செல்வதுபோல அதிதியின் ஒற்றர்கள் எங்கும் சஞ்சரித்ததால் அதிதி எல்லா விபரங்களையுமறிந்தான்.

ராஜாங்க காரியங்களை ரஹஸ்யமாக மந்திரிகளுடன் மந்த்ராலோசனை நடத்தினன். ஒற்றர்படையிலும் ஒருவருக்கொருவர் ஒற்றர்களை நியமித்ததால் அவர்களுக்குள்ளேயே கலந்தாலோசிக்க இயலாது இருந்தனர், அவனது நாட்டு சாரணர் படை உலகப் புகழ் பெற்றதாக விளங்கியது அரண்களை மேலும் பலப்படுத்தினன்.

நாட்டு முன்னேற்றத்திற்கான அவனது முயற்சிகள் நெல்லுக்குள் அரிசி முதிர்வதுபோல் பிறரறியா வண்ணம் ரகசியமாக வைக்கப்பட்டு, பயன் அளித்த பின்பே நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்பட்டது அளவு கடந்த ஆதிக்கம் இருந்தபோதிலும் அதிதி தகாதவழியில் இறங்காமலும்,பேராசையின்றியும் விளங்கினன்.

ஆயுதப் பயிற்சி நிரம்பப் பெற்றதும் அஸ்த்ர பண்டிதர்கள் உள்ள

இருமல் நோயாளிகள் கவனிக்கவும்

இருமலா ? இளைப்பா ? தும்மலா ?

பித்தத்தினல் ஏற்படும் மயககம், இருதயம படபடப்பு, நெஞ்சு வலி - பிடரி வலி - உடல வலி – மலச்சிக்கல- பசி மந்தம், ருசியின்மை—அடிககடி ஜலதோஷம்-ஓயா தும்மல் - நீர்வடிதல் தலைபாரம் – இருமல் - கோழைக் கட்டு - மேல மூச்சு - இளைபபு கர்முர்ரென்று இழுப்பு - உடல் பலஹீனம் - உடம்பு தேருமை அசதி – சோர்வு– களைப்பு - ஆஸதுமாவின ஆரம்ப நிலை

இவைகளிலிருந்து நிவாரணம் பெற, ஆரோககியம் பெற உங்களுக்கு பெரிதும் பயனளிக்கிறது

'சிவராஜ்' நெல்லிக்காய் லேகியம்

பவளசத்து, சிலா சத்து, சிருங்கி சத்து சேர்ந்தது 250 கிராம் புட்டி ரூ. 30-00

வெள்ளி ரேக – பவள சத்து – பஸ்பம் கலந்தது 250 கிராம் புட்டி ரூ. 40-00

(போஸ்டேஜ் இலவசம்)

தேவையானவர்கள் V. P. பார்சல் மூலம் பெறலாம்.

— ஏஜெண்டுகள் தேவை —

தயாரிப்பு : **சிவராஜ் சித்த வைத்தியசாலை**

(சென்ட்ரல டாககீஸ் வடபுரம ஏரியில)

காந்தி ஸ்டேடியம் சமீபம், சேலம் – 636 007

[illegible] அரச விசுவாசம் பூரணமாக உண்டாயதும், பகைவர்களது சூழ்ச்சிக்கு அடிமை ஆகாததும் குசனால் விருத்தி செய்யப்பட்டதும் அளவில் பெரியதுமான திறமைமிக்க மூல பலம் என்று கூறப்படும் சைன்யத்தை தன் உயிரைவிடப் பெரிதாக அதிதி மதித்து பாதுகாத்து வந்தான் விலங்குகள் பயம், திருடர்கள் பயமின்றி மக்கள் வாழ்ந்தனர். வியாபாரிகள் தரை, கடல் மார்க்கமாக வியாபாரத்தைப் பெருக்கினர். மஹரிஷிகளின் தவத்தை யாரும் கெடுக்காதபடி அதிதி பாதுகாத்தான்.

இதனால் முனிவர்களின் தவசக்தியில் ஆறிலொரு பங்கை அரசனுக்கு அளித்தனர் மக்களுக்கு அதிகமாக வரி விதிக்காது காத்தான் இவனது பரிபாலனத்தால் மகிழ்ந்த பூமி இவனுக்கு நாட்டில் பலவகை வளங்களையும் கொடுத்தது ஸாம, தான பேத, தண்டங்களை அறிந்திருந்ததால் அதிதி கபட யுத்த முறைகளை அறிந்திருந்தும் தர்மயுத்தத்தையே கையாண்டான். பண்டிதர்களும் கலைஞர்களும் அவனிடம் ஒருமுறை பரிசில் பெற்றபின் மீண்டும் யாசகத்தையே எதிர்பார்க்காது தான் பிறருக்குப் பொருள் தரும் நிலையை அடைந்தனர்.

யானை வகைகளில் ஒன்றான கந்தகஜம் என்ற வகை, யானையின் வாசனையை முகர்ந்த மாத்திரத்திலேயே மற்ற யானைகள் போரிடாது ஓடி விடும். அதுபோல் அதிதியின் பராக்கிரமமறிந்த மாத்திரத்திலேயே பிற மன்னர்கள் அவனிடம் போரைத் தவிர்த்தனர்.

பிறந்த புகழ்ச்சி அவனுக்கு ஊக்கத்தைக் கொடுத்தது. அதுவே அவன் புகழை மேலும் பரவச்செய்தது அதிதியை தரிசித்த மாத்திரத்திலேயே மக்களின் பாவங்கள் நீங்கும் அளவுட விக்ரமானவனாகவிளங்கினான் மக்களின் உண்மை அறிவை அளித்து அவர்களின் அக்ஞான இருளை விலக்கி பிரஜைகளை தம் இச்சைப்படி சுதந்திரமாக, தாமாகவே நல்வழியில் நடக்கும்படி செய்தான். பகைவர்களும் அதிதியைப் புகழ்ந்தனர் இவ்விதம் அரசாண்ட அதிதி காலக்ரமத்தில் அசுவமேத யாகம் செய்தான்.

மக்கள் அதிதியை மற்றொரு புதிய லோக பாலராகவே எண்ணினர். குபேரன் போன்ற 'தனதன்' என்ற புகழ்ப் பெயரை அதிதியும்பெற்றான் இவனது நாட்டில் இந்திரன் தக்க காலத்தில் மழையாலும், யமன் வியாதி அகால மரணமின்றியும், வருணன் ஜல மார்க்கங்களை ஆபத்தின்றியும், குபேரன் பொக்கிஷசாலையை நிரப்பியும் தனக்கு அதிதியிடம் உள்ள அன்பைத் தெரிவித்துக்கொண்டனர்.

இத்தகைய மேன்மை கொண்ட அதிதியைக் கண்ட நிஷதநாட்டு அரசன் தன் மகளை அதிதிக்கு மணம் செய்வித்து கொடுத்தான். அதிதி இல்லறத்தில் ஈடுபட்டாலும் அரசாங்க அலுவல்களை கவனியாமலிருக்காது நாட்டை மேலும் சிறப்புடன் பரிபாலித்து வந்தான்.

(தொடரும்)

பகுத்தறிவு வாதம் என்பது தெளிவாக வழியைக் காட்டும் மின்சார விளக்கு. —காண்டேகர்.

தன்மானம எதையும் சாதிக்கும். எந்த சக்தியையும் கொடுக்கும். அது கோடியில் ஒருவருக்குத்தான் இருக்கிறது. —அக்பர்.



ஆன்மீக யாத்திரை

மகேந்திரவாடி - உமாசங்கரன்

34. திருக்கழுக்குன்றம்

தொண்டை நாட்டில் பாடல் பெற்ற சிவத் தலங்களில் இதுவும் ஒன்று.

சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர்களாலும் பாடப் பெற்ற பதி இது.

வானகத்தார் வையகத்தார்கள் தொழுது ஏத்தும்
கானகத்தான் காதல்செய் கோயில் கழுக்குன்றே

என்று சம்பந்தரும்,

காவலனைக் கழுக்குன்றம் அமர்ந்தான் தன்னைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே

என்று அப்பரும்,

சென்று சென்று தொழுமின்; தேவர் பிரான் இடம்
கன்றினொடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே

என்று சுந்தரரும்,

கலங்கினேன்; கலங்காமலே வந்து
காட்டினாய் கழுக் குன்றிலே

என்று மாணிக்க வாசகரும் பாடிப் பரவிய இத் திருத்தலம் சென்னையிலிருந்து நாற்பத்தைந்து கல் தொலைவிலும், செங்கற்பட்டிலிருந்து கிழக்காக ஒன்பது கல் தொலைவிலும் உள்ளது.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் எழுதிய புராணம் இத்தலத்து பெருமைகளைப் பறைசாற்றுகிறது. சொக்கநாதப் புலவர் வஞ்சப் புகழ்ச்சியாக இத்தலத்து இறைவனை பாடியுள்ளார். பாடலைக் கீழே படியுங்கள்.

அடிபட்டீர்; கல்லாலும் எறிபட்டீர் அந்தணைக்கும் ஆளாய் அந்தப்
படிபட்டும் போதாமல் உதைபட்டீர், இப்படியும் படுவார் உண்டோ?
முடிபட்ட சடையுடையீர்! கழுக்குன்றீர்!
இடிபட்டும் பொறுத்திருந்தீர்; சிவசிவ
உமைத் தெய்வம் என்னல் ஆமோ?

இத்தலத்தில் ஈசனை இந்திரனும் பன்னிரெண்டு ஆண்டுகளுக்குஒரு முறை பூஜிப்பதாக புராணங்கள் கூறுகின்றன.

பூஜை என்றால் சாதாரண பூஜை யில்லை இடி. இடித்துப் பூஜை இடி கோபுரத்தின் மீது விழுந்து மூல வரை வலம் வந்துபூமிக்குள் இறங்கி விடுவதாகச் சொல்லப்படுகிறது.

'இடிபட்டும் பொறுத்திருந்தீர்' என்று மேற்கண்ட பாடலில் புலவர் கூறியிருந்தது இதைத்தான்.

இருநூற்று அறுபத்து நாலு ஏக்கர் நிலத்தில் ஐந்நூறு அடி உயரத்தில் இங்கு மலைக்கோயிலுள்ளது.

நான்கு வேதங்களும் இங்கு நான்கு சிகரங்களாக இருப்பதால் இறைவனுக்கு வேதகிரி என்று பெயர்.

இம்மலையை வலம் வந்தால் ஆரோக்யத்திற்கு நல்லது சுமார் இரண்டரை கல் சுற்றளவு மலைக்கு சஞ்சீவி மலை என்ற பெயருமுண்டு.

தினமும் இரண்டு வெள்ளைக் கழுகுகள் இம்மலைக்கு காலை பதினொரு மணியளவில் வந்து பண்டாரம் அளிக்கும் சர்க்கரைப்பொங்கலை உண்ணுகின்றன.

இவ்வரியக் காட்சியைக்காணவே தினமும் இங்கு பெருந்திரளாய் மக்கள் கூடுகிறார்கள்.

காலையில்காசியிலும்,மத்தியானம் கழுங்குன்றிலும்,இரவு ராமேசுவரத்திலும் இக்கழுகுகள் பொழுதைக் கழிப்பதாக பெரியோர்கள் கூறுகின்றனர்.

பிரம்ம புத்திரர்கள் எட்டு பேர் சாருப பதவி வேண்டி சிவனைக் குறித்து தவம் செய்ததாகவும், சிவன் அவர்கள் முன்பு தோன்றிய பொழுது மறந்துபோய் சாயுச்சிய பதவியை கேட்டுவிட்டதாகவும், யுகத்துக்கு இருவராய் கழுகுகளாய் பிறந்து முக்தியடைய இறைவன் அருளியிருக்கிறார் என்றும், கலியுகத்திலே பூஷா, விதாதா என்னும் பெயர்களில் கழுகுகளாய் பிறந்திருக்கிறார்கள் என்றும் கூறப்படுகிறது.

மாணிக்கவாசக சுவாமிகளுக்கு இறைவன் இங்கு குரு வடிவாகக் காட்சியளித்ததாகக் கூறப்படுகிறது.

கணக்கிலாத் திருக்கோலம் நீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே

என்று மனம கசிந்து பாடியிருக்கிறார் அவர்

சுந்தரர் பொருள் வேண்டி தென் வாயிலில் வந்து நின்றபொழுது ஈசன் மேற்கு வாயிலில் ஒளிந்து கொண்டாராம். ஆனால் சுந்தரர் தனது விடாமுயற்சியால் பொன்னும் பொருளும் பெற்றுத் திரும்பினாராம். ஆகையால் இவருக்கு தம்பிக்கொளித்த நாதர் என்ற பெயரும் உண்டாயிற்று

ஈசனுக்கு மலை மருந்தீசர் என்ற பெயரும் உண்டு இறைவன்சுயம்பு மூர்த்தி, ஈசன் வாழைமுக குருத்து போன்று காட்சியளிக்கிறார்

பல்லவ மன்னன் மகேந்திரவர்மனால் கருவறை ஏற்படுத்தப்பட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது

கருவறையின் உட்புறச் சுவர்களில் சோமாஸ்கந்தர், பிரும்மா, யோகதக்ஷிணாமூர்த்தி ஆகியோரின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன.

ஈசன் கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கிறார். இக்கோயிலின் உட்பிரகாரத்தில் சொக்கம்மன் சந்நிதியும் உள்ளது.

இக்கோயிலின் தலமரம் வாழை மரம்.

ஈசனை வணங்கியபின் உட்புறம் உள்ள படிகளின் வழியாகக் கீழே

இறங்கினால், வழியில் ஒரு குடை வரைக்கோயிலைக் காணலாம். அற்புதமான சிற்பங்களை இங்கு கண்டு களிக்கலாம்.

மலையிறங்கி அடிவாரத்திலுள்ள சித்தாத்ரீ கணபதியை வணங்கி விட்டு, தாழக்கோயில் என்று சொல்லப்படுகின்ற, ஊருக்கு மத்தியிலுள்ள பக்தவத்சலர் கோயிலையடையலாம்.

கோயில் மிகப் பெரியது. பெண்ணின் நல்லாள் என்று ஞானசம்பந்தர் போற்றிப் பாடிய அன்னை திரிபுரசுந்தரியின் சந்நிதி இங்கு விசேஷமானது.

இக்கோயிலில் வீரபத்திரர்சந்நிதியும் மிகவும் புகழ் வாய்ந்தது.

வண்டு வனப் பிள்ளையார் சந்நிதியும் தனிச் சிறப்பு வாய்ந்தது.

இத்தலத்தில் உள்ள சங்கு தீர்த்தம் நோய்கள் தீர்க்கவல்லது இதில் தாமிரச் சத்து உள்ளதாகச் சொல்லப்படுகிறது

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இத்திருக்குளத்தில் சங்கு பிறக்கிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முப்பெருமைகளையும் பெற்ற திருக்கழுக்குன்றம், சென்னைக்கருகில் இருப்பதால் பக்தர்கள் பலமுறை சென்று வரலாம்.

சிற்பக் களஞ்சியமான மாமல்லையும் முருகன் தலமான திருப்போரூரும், சதுர்புஜ ராமர் சந்நிதியுள்ள பொன்பதிர் கூட்டமும் இத்தலத்திற்கு அருகேயுள்ளன.

சென்று வாருங்கள், அங்கிருந்து அருள் வாரிக்கொண்டு வாருங்கள்.

கௌரி

தேன்கூடு
சிறு சேமிப்பு திட்டம்

இத்திட்டத்தில் எல்லோரும் சேரலாம். ரூ. 10, 25, 50 என்று மாதாமாதம் சேமிப்பதன் மூலம் சிறந்த நகைகளைப் பெறலாம் ஒருவர் எத்தனை சீட்டுக்கள் வேண்டுமென்றாலும் சேரலாம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்றவர்கள் :

கௌரி ஜுவல்லரி மார்ட்

72-85, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி.
சென்னை - 600005.

உரிமையாளர் : K. ராமலிங்கம் போன் : 842594

ஸ்ரீ நாராயண ஸூக்தம்

தமிழாக்கம் : கவிதாமணி அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்

ஸஹஸ்ர-சீர்ஷம் தேவம் விச்வாக்ஷம் விச்வ சம்புவம்
விச்வம் நாராயணம் தேவம் அக்ஷரம் பரமம் பதம் 1

ஆயிர மாயிரம் சிரங்களும் கொண்டார்
அருளொளி மிக்கப் பார்வையு முற்றுர்
மாயிரு ஞாலம் மங்கலம் பெறவே
மனச் சங்கல்பம் தன்னால் அருளேபுரிந்து
தாயினு மினிய உலகாய் இருந்தும்
சந்ததம் வாழ்ந்திடு அமரரு மாச்
சேயினர் சென்றடையத் தக்கதேயான
திருவடி நாரணனைத் த்யானிந்திடுவேன்.

விச்வதः பரமாந் நித்யம் விச்வம்-நாராயண ஞும் ஹரிம்
விச்வமேவேதம் புருஷஸ் தத்விச்வ-முபஜீவதி 2

உலகினும் மேலாம் உயர்வும் உடையவர்
ஊழியில் அழியா முடிவும் உடையவர்
உலகாய் எங்கும் விளங்கி, அடியார்
உற்றிடும் தாபமும் பாபமும் போக்கி
நிலையாய் உள்ள நாராணன் தன்னை
நெஞ்சில் தியானம் செய்திடுகின்றேன்
அலகிலா விளையாட் டுடையான் உள்ளுறைவதால்
அகிலம் உயிருடன் ஒளிர்வதும் ஆயது

பதிம் விச்வஸ்-யாத்மேச்வர ஞும் சாச்வத ஞும் சிவ மத்யுதம்
நாராயணம் மஹா ஜ்ஞேயம் விச்வாத் மானம் பரா யணம் 3

பூதல நாயகர் உயிர்களைக் காத்திடும்
புண்ணிய ஈசுவரர் மங்கள நாயகர்
வேதநாயக சிவர் நழுவுதல் இல்லா
வேண்டுவோர் வேட்கைக்குகந்த நாயகர்
ஆதரவாய் புவி அனைத்து சீவரின்
ஆத்மாவாக நின்று நிலவிடும் அவரின்
பாதம் புகலிடம் புகுவதற் குரித்தாம்
பாங்குடை நாயகர் பதம்சார் வோமே

நாராயண பரோ ஜ்யோதி ராத்மா நாராயண: பர:
நாராயண பரம் ப்ரஹ்ம தத்வம் நாராயண: பர:
நாராயண பரோ த்யாதா த்யானம் நாராயண: பர: 4

நாரா யணனே நல் ஜோதி
நாரா யணனே பர மாத்மா
நாரா யணனே பர ப்ரமம்
நாரா யணனே நல் தத்வம்
நாரா யணனே தியானக் கரு
நாரா யணனே நல் த்யானமுமாம்.

யச்ச கிஞ்சிஜ்-ஜகத்-ஸர்வம் த்ருச்யதே ச்ருயதே அபி வா
அந்தர்-பஹிச்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித: 5

அண்ட மனைத்திலும் காணப்படுவது எதுவோ
அன்றிநாம் கேட்கப்படுவது எதுவோ
மண்டல மெங்கும் உள்ளும் புறமும்
மகிழ்ந்து விரிந்து நாரணன் உள்ளார்

அனந்த-மவ்யயம் கவிஞும் ஸமுத்ரே'ந்தம் விச்வ சம்புவம்
பத்ம கோச-ப்ரதீகாசகும் ஹிருதயஞ் சாப் யதோ முகம் 6

முடிவெனும் சுழலில் சிக்கிடா தவரும்
முன்பின் இறுதியும் இல்லா தவரும்
அடிமுதல் நுனிவரை அறிந்தவ ராயும்
ஆழியின் உள்ளும் இருந்திடு பவரும்
நெடிட உலகிற் கிதம் செய் பவராய்
நிற்கும் நாரணனைத் தியானித்திடுவேன்
வடிவுடை இருதயம் தென்முகம் நோக்கி
மாண்புடைத் தாமரை மொட்டெனத் திகழும்.

அதோ நிஷ்ட்யா விதஸ்த் யாந்தே நாப்யா முபரி திஷ்டதி
ஜ்வால-மாலாகுலம் பாதீ விச்வஸ் யாயதனம் மஹத் 7

நிட்டை நிலைத்திடு நிலைக்குக் கீழாய்
நேரியதாபிக்கு ேமல் சிறு தொலைவில்
கிட்டிய இருதயம் இருந்திடும் அதனில்
கீர்த்திகொள் உலகம் யாவும் அடங்கும்
பெட்டகம் தன்னை ஜுவாலைக் கொழுந்து
பெட்புடன் சூழ்ந்து ஒளியுறச் செய்யும்
தட்ட நடுவில் அதனுள் இருந்து
நல்ஜோதி ஒன்று ஒளிர்ந்து விளங்கும்.

ஸந்தத கும் சிலாபிஸ் துலம்பத்-யா-கோச-ஸங்நிபம்
தஸ் யாந்தே ஸுஷிரகும் ஸூக்ஷ்மக் தஸ்மின் ஸர்வம் பர திஷ்டிதம் 8

கமல மொட்டென விளங்கிடும் அதனை
சுடி நரம்புகள் பிடியது பற்றும்
அமலம் அதன் உட்புறம் சூட்சுமம்
அற்புதம் விரிந்து அடங்கு வதாகும்
தமரிலும் சிறிய சிறுகுடில் அதனுள்
சகமே அடங்கும் இடமும் உடையது
அமரரும் தேவரும் ஆங்கு நிலைத்து
அடிசார்ந் திருந்து அடைகுவர் பெரும்பதம்.

தஸ்ய மத்யே மஹா னக்னிர் விச்வார்ச்சிர்–விச்வதோ முக:
ஸோக்ரபுக்-விபஜன் திஷ்டன் ஆஹார-மஜர : கவி : 9

இருதய நடுவில் இருந்து வீசிடும் ஜோதி
எல்லாத் திக்கும் செல்லுவதாயும்
பருஉடற் கூட்டில் அனையரச் சுடராய்
பர்வத ஒளியுடன் விளங்கிடும் செக்தீ
குருவென பரமன் கொலுவமர்ந் திருந்து
கொண்டும் கொடுத்தும் நிலையுறச் செய்யும்
கருவென நின்று கண்டும் களித்தும்
காண்பவராகவும் களித்திடுகின்றார்.

திர்ய-கூர்த்வ-மத : சரயீ ரச்மயஸ் தஸ்ய-ஸந்ததா
ஸந்தா பயதி ஸ்வம் தேஹ மாபாத-தல-மஸ் தக ;
தஸ்ய மத்யே வஹ்னி சிகா அணீ யோர்த்வா வயவஸ்தித : 10

இருதயக் குகையில் இலங்கிடும் செந்தீ
எழில் சுடர் கீழ்மேல் குறுக்கில்
பரவி உள்ளங்கால் முதல் உச்சி
பற்றி நிறைந்து தன்னாட்சியில் நிறுத்தி
திரவிடும் சூடும் உணர்வுவதும் நல்கி
நிலத்தில் உயிர்களை இயங்கிடச் செய்யும்
பிரமமாய் பிந்துவாய் ஒளிரும் சுடராய்
பிரமிக்கும் சோதிமேல் நோக்கிய தாகும்.

நீல தோயத-மத் யஸ்தாத் விதயுல் லேகேவ பாஸ்வரா
நீவார-சூகவத் தன்வீ பீதா பாஸ்வத்-யணூபமா 11

கருத்த மேகத்தின் இடையில் தோன்றும்
கனக மின்னல் ஒளியென ஒளிரும்

ஒருசிறு செந்நெல் முனையினைப் போல
உடைய சிறுகுடில் நுண்ணிய தாகும்
திருவெனும் அதுபொன் னிறத்தது மாகி
சிறிய அணுவெனத் திகழ்ந்திடும் அந்த
குருவொளி சூட்சுமம் தீச்சுடர் தன்னில்
குன்றுஜோதி நின்று ஒளிர் விடும்.

தஸ்யா: சிகாயா மத்யே பரமாத்மா வ்யவ ஸ்தித:
ஸ ப்ரஹ்ம ஸ சிவ: ஸ ஹரி: ஸேந்த்ர: ஸோ அக்ஷர பரமஸ்வராட் 12

ஜோதியின் நடுவில் பரமன் நிலைத்து
திகழ்ந்திடு கின்றார் பிரமனும் மற்றும்
ஆதி சிவனும் மாலும் இந்திரன்
அனைத்தும் தாமாய் விளங்கிடு கின்றார்
ஜோதி குறைவோ அழிவோ இன்றி
துலங்கிடும் அவரே தன்னிக ரில்லா
ஆதிபரம புருடன் அவரே தாமென
அறிவோம், அறிவோம், அறிவோம் யாமே.

ருதம் ஸத்யம் பரம் ப்ரஹ்ம புருஷம் க்ருஷ்ண-பிங்கலம்
ஊர்த்வ ரேதம் விரு பாக்ஷம் விச்வ ரூபாய வை நமோ நம: 13

காண்பொருள் தன்னில் எழிலே குலுங்கக்
காட்சிக் காதாரமாய் இலகிடும் அவரை
மாண்புடை உடல்தொறும் உறைகின்ற வரை
மாலும் சிவனும் இணைந்த வடிவை
ஆண்மை நல்கி வீர்யம் மேல்நோக்கிட
அமைத்த முச்சுடர் ஜோதி வடிவை
தூணென நின்று துலங்கு மாதவனின்
திருவடி சார்ந்து தொழுதிடு கின்றேன்.

நாராயணாய வித்மஹே வாஸுதேவாய தீமஹி
தந்நோ விஷ்ணு: ப்ரசோத யாத் 14

அறிய முயல்வோம் நாரா யணனை
அறிந்தே வாசுதேவனைத் தியானித்திடுவோம்
அறிவோம் வாசுதேவன்-நாரா யணனாகிய
ஆதிவிஷ்ணு ஏவட்டும் நற்பலன் நமக்கே.

— அடுத்து ஸ்ரீ ஸூக்தம் —

நன்றி: திருவடி பதிப்பகம், திருச்சி.

நடராஜா அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர்: கே. ராதாகிருஷ்ணன்
அலுவலகம்: நெ. 78, டாக்டர் பெஸண்ட்சாலை, சென்னை-14, தமிழ்நாடு. போன்: 84643